பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 21 வெள்ளிக்கிழமை (04.06.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 190

### பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டியது போன்று

# புலம்பெயர் தமிழரின் நடவடிக்கைகளை நாம் வெற்றிகரமாக முறியடிப்போம்

## செய்தியாளர் மாநாட்டில் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, ஜூன் 04



புலம்பெயர் தமிழ் சமூகத்தின், இலங்கைக்கு எதிரான செயற்பாடுகள் ஓரளவு வெற்றி பெற்றுள்ளன. ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் சமீபத்திய அறிவிப்பும் அதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். எனினும் இலங்கையில் பயங்கரவாதத்தை கூண்டோடு ஒழித்துக்கட்டியது போன்று புலம் பெயர் தமிழ் சமூகத்தின் நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முறியடித்திடுவோம்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில், செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது இவ்வாறு தெரிவித்தார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுப்புள்ளி திங்களன்று

கொழும்பு, ஜூன் 4

ஜி.சீ.ஈ. பரீட்சையில் கடந்த ஆண்டு தோற்றிய மாணவர்களுக்கான பல்கலைக் கழக வெட்டுப்புள்ளிகள் எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

வெட்டுப்புள்ளிகளை வெளியிடுவதற் கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந் துள்ளன என ஆணைக்குழுவின் தலைவர்

(24ஆம் பக்கம் பார்க்க)

### போர்க் குற்றங்களை வெளிப்படுத்திய

## 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு கிடைத்தது மனித உரிமை விருது

கொழும்பு, ஜூன் 4

வன்னிப் போரில் இலங்கைப் படைக ளால் இழைக்கப்பட்டவை என்று கூறப் படும் போர்க்குற்றங்களை வெளியிட்ட பிரிட்டனின் 'சனல் -4' தொலைக்காட்சிக்கு சர்வதேச மன்னிப்புச்சபையின் மனித உரிமை விருது வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா முகாம்களில் அரங்கேறிய கொடூரங்களை வெளிக்கொணர்ந்தமை, போர்க் கைதிகளை இலங்கைப் படை யினர் நிர்வாணப்படுத்திப் படுகொலை செய்த வீடியோக்களை ஒளிபரப்பியமை போன்ற காரணங்களுக்காக இந்த விருதை 'சனல் - 4' தொலைக்காட்சிக்கு சர்வதேச மன்னிப்புச் சபை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஓராண்டு காலப்பகுதியில் மிக வும் துணிச்சலான முறையில் ஆதாரபூர்வமான செய்திகளை 'சனல் - 4'தொலைக்காட்சி வெளியிட்டுள்ளமை குறித்து சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (ஒ-சி)

## ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின்போது பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும்

கொழும்பு, ஜூன் 04

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது இரு நாடுக ளுக்குமிடையே பல ஒப்பந்தங்கள் கைச் சாத்திடப்படும். 'சீபா' ஒப்பந்தம் குறித்தும் பேச்சு நடத்தப்படும்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அரச தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

இலங்கை வானொலி, தேசிய ரூப வாஹினி ஆகியவற்றில் ஒலி, ஒளிபரப்பப் படும் நிகழ்ச்சிகளைப் பரிமாறிக்கொள் வது தொடர்பான ஒப்பந்தம், பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தம் உட்பட இன்னோ ரன்ன ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் படும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

### கல்விச் சுடர்

யாழ். மாணவர்களின் நலன் கருதி கொழும்பு வணிக வள நிலைய வினாத் தாள்கள் அடுத்த வாரம் முதல் உதயன் கல் விச் சுடரில் வெளிவர உள்ளன.

## முல்லை அரச அதிபராக முன்னாள் படையதிகாரி?

கொழும்பு, ஜூன் 4

தமிழ் மக்கள் வாழ்ந்துவருகின்ற முல்லைத் தீவு மாவட்ட அரச அதிபராக முன்னாள் இரா ணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் சீ.ஆர்.டி.சில்வா நியமிக்கப்பட வுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் முழுமை யாகத் தமது கட்டுப்பாட்டில் நோக்கில் இந்த நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட் டுள்ளது என நம்பகரமான தகவல்கள் வெளியாகி யுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமாரை இடமாற்றம் செய்து அவருக்கு வட மாகாணசபையின் பிரதம செய லர் பதவியை வழங்குவதற்கான ஏற்பாடு கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இணையத்தள தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கடல் வழியாகப் போராளிகள், ஆயுதங்களைக் கடத்தும் முயற்சியை முறியடிப்பதற்கான தயார் நிலை அவசியம்

### கடற்படையை உஷார்ப்படுத்துகிறார் கோத்தபாய



கொழும்பு, ஜூன் 4

புலிகளின் மரபு ரீதியான இராணு வப் பலம் நிர்மூல மாக்கப்பட்டிருப்பி னும் எத்தகைய சவா லையும் எதிர்கொள் வதற்கான தயார் நிலையில் இலங் கைக் கடற்படை இருக்க வேண்டும் என்று பாதுகாப்புச் செய லர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு அவர் வழங்கியுள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இதில் அவர் தெரிவித் தவை வருமாறு :-

புலனாய்வு அமைப்புகளுடன் கடற் படை நெருக்கமாக இருக்க வேண்டும்.

ஏனென்றால் கடற்படைதான் புலிக ளிடம் இருந்து புதிதாக ஏற்படக்கூடிய முதற்கட்டப் பாதுகாப்புச் சவாலை முறிய டிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

புலிகளின் செயற்பாடுகளைத் தோற் கடிக்க அபிவிருத்தி மற்றும் கூட்டிணை வான நடவடிக்கைகளை முன்னெடுப்பது மட்டுமன்றி பிராந்தியப் பாதுகாப்பை வலுப்படுத்துவதும் மூலோபாய ரீதியாக முக்கியமானது.

கடல்வழியாக ஆயுதங்களையோ, கரு விகளையோ, பயிற்சிபெற்ற போராளிக ளையோ இலங்கைக்குள் கடத்தும் முயற் சிகளை முறியடிப்பதற்குத்தான் போருக்குப்

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிய பாதுகாப்பு உச்சி மாநாடு இன்று சிங்கப்பூரில் ஆரம்பம்

### இலங்கை சார்பாக பீரிஸ் பங்குபற்றுவார்

கொழும்பு, ஜூன் 4

பாதுகாப்பு தந்திரோபாய ஆய்வுக்கான சர்வதேச நிறுவகத்தின் ஒன்பதாவது ஆசிய பாதுகாப்பு உச்சிமாநாடு இன்று சிங் கப்பூர் சங்கிரி - லா ஹோட்டலில் ஆரம் பமாகவுள்ளது. 'சங்கிரி - லா பேச்சு' என்று அழைக்கப்படும் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழு இன்று சிங்கப்பூர் பயணமாகிறது.

ஆசியா மற்றும் பசுபிக் வலயங்களைச் சேர்ந்த 28 நாடுகளின் பாதுகாப்பு அமைச் சர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பாது காப்பு உத்தியோகத்தர்கள் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர்.

நடைமுறைச் சாத்தியமான பாதுகாப் புக்கான ஒத்துழைப்புகளை வளர்த்தல், நம்பிக்கையைக் கட்டி எழுப்புதல் ஆகிய வற்றை நோக்கமாகக் கொண்டு இந்த 'சங்கிரி - லா பேச்சு' 2002ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவிடம் இலங்கைக்கு எதிரான அறிக்கை சமர்ப்பிப்பு

### பிலிப் அல்ஸ்ரன் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 04

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகள் ஆணைக்குழுவுக்கு இலங்கையின் யுத்தக் குற்றங்கள் தொடர்பான அறிக்கை ஒன்று நேற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவில் நீதிக்குப் புறம்பான கொலை கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் நிபுணரும், நியூ யோர்க் பல்கலைக்கழகத்தின் சட்டத் துறைப் பேராசிரியருமான பிலிப் அல்ஸ் ரன் இந்த அறிக்கையை ஆணைக்குழுவுக் குச் சமர்ப்பித்தார்.

இவர் உலகளாவிய ரீதியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற யுத்தக் குற்றங் கள் தொடர்பாக ஆய்வு செய்துள்ளார். அந்த ஆய்வில் கண்டறிந்த விடயங்களை நேற்று அவர் உத்தியோக பூர்வமாக ஐக் கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்தார் என்றும்-

இலங்கை, பாகிஸ்தான், இஸ்ரேல், ரஷ்யா போன்ற நாடுகளை அவர் கடுமையா கச் சாடி உள்ளார் என்றும் தெரியவருகிறது.

இலங்கை போன்ற நாடுகள் திட்டமிட்ட

(24ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பை மீறி கொழும்பு விழாவுக்குச் சென்ற தமிழ்ப் பட நடிகைகள் ஜெனிலியா, பிபாஷா!



சென்னை, ஜூன் 06

கொழும்பில் நடக்கும் ஐபா விழாவில் பங்கேற்காமல் சூப்பர் ஸ்டார்களே புறக்கணித்து நிற்க, தமிழில் அறிமுகமாகி புகழ்பெற்ற நடிகையொருவர் இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுள்ளார்.

அவர்தான் 'போய்ஸ்' படத்தில் ஷங்கரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஜெனிலியா டிஸூஸா. இவர் 'சச் சின்', 'சந்தோஷ் சுப்ரமணியம்' படங்களிலும் நடித்துள்ளார்.

தமிழில் அறிமுகமானாலும் தொடர்ந்து தெலுங்கு மற்றும் ஹிந்திப் படங் களில்தான் இவர் நடித்து வருகிறார். கோவாவைச் சேர்ந்த இவர் மராட்டிய முன்னாள் முதல்வர் விலாஸ்ராவ் தேஷ்முக்கின் மகனை காதலிக்கிறார்.

ஐபா விழாவுக்கு ரிதேஷ் தேஷ்முக்கும் சென்றுள்ளார். எனவே, காதலர் வழியில் ஜெனிலியாவும் இந்த விழாவில் பங்கேற்றுள்ளார். இந்த விழாவுக்குப் போவதன் மூலம் தென்னிந்தியத் திரையுலகைப் பகைத்துக் கொள்ள நேரிடும் எனத் தெரிந்தும் அவர் கொழும்பு சென்றுள்ளார். ஏற்கனவே நடிகர் சங்கம் சார்பில் ஈழத் தமிழர் பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்தபோது, அதில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தவர்தான் இந்த ஜெனிலியா.

பொலிவுட்டின் இன்னொரு பிரபல நாயகி பிபாஷா பாஸுவும் இந்த விழாவில் பங்கேற்றுள்ளார். இவர் 'சச்சின்' படத்தில் நடித்துள்ளார்.

## நினைவஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்.தினக்குரல் நிறுவன உதவி ஆசிரியர் அமரர் செ.ரூபனின் நினைவஞ்சலிக் கூட்டமும் கருணைப்பாலக் காணிக்கையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ப.நோ.கூ. சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. (10)

# தீவுப்பகுதியில் நாளை விளையாட்டுப் போட்டி

குருநகர், ஜூன் 4

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுப் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த விளையாட்டுப் போட்டி ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறும்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்ரர் அலன்ரின் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் அபயசேகர சிறப்பு விருந்தினராகவும், ஊர்காவற்றுறை ப.நோ.கூ சங்கத்தின் பொது முகாமையாளர் திருமதி தே.மேரி டொறின் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளார்கள். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, எழுவை தீவு முருகவேள் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வுகள் விசேட நிகழ்வாக நடைபெறவுள்ளன. (1-51)

# கோப்பாய் கலாசாலை அதிபர் அலுவலகம் தொடர்ந்து பூட்டப்பட்டிருப்பது ஏன்?

### முன்னாள் அதிபர் காரணத்தைக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 4

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர் அறையின் திறப்பை நான் அங்கிருந்து இடம் மாற்றலாகிச் சென்றவேளை விரிவுரையாளர் கணபதிப்பிள்ளையிடம் கையளித்தேன். அவர் திறப்பை ஏற்க மறுத்துவிட்டார்.


கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் மலர் சின்னையா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலாசாலையின் அதிபர் அலுவலகம் கடந்த சில மாதங்களாகப் பூட்டப்பட்டுள்ளதால் தமது பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கலாசாலை விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள் கல்வி அமைச்சுக்குக் கடிதம் ஒன்றைக் கடந்த வாரம் அனுப்பியிருந்தனர்.

இது சம்பந்தமான செய்தி கடந்த முதலாந்திகதிய உதயனில் 7ஆம் பக்கத்தில் வெளியாகி இருந்தது.

இது தொடர்பாக கலாசாலையின் முன்னாள் அதிபர் மலர் சின்னையா அனுப்பியுள்ள குறிப்பு ஒன்றில் -

''கோப்பாய் ஆசிரியகலாசாலைப் பொறுப்புக்களை விரிவுரையாளர் க. கணபதிப்பிள்ளையிடம் முற்றாகக் கையளித்து, அலுவலகத் திறப்பையும் கொடுத்தபோது அவர் திறப்பை வாங்க மறுத்துவிட்டார். அதனால்தான் என்னிடம் இன்றுவரை திறப்புள்ளது. இந்நிகழ்வு யாழ். வலயக் கல்விப்பணிப் பாளர் முன்னிலையில் நடைபெற்றது - என்றுள்ளது. (ஓ-1)




சாவகச்சேரி, ஜூன் 4

மீசாலை அருள்மிகு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள் ளையார் தேவஸ்தானத்தின் புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு பக்திபூர்வமாக நடைபெறவுள்ளது. மஹா கும்பாபிஷேகம் ஆலய பிரதம குரு கலாபூஷணம் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-131)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 04

குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருஷா பிஷேகத்தை ஒட்டி இன்று காலை 7 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். மாலை 5 மணிக்கு திருவூஞ்சல் இடம்பெற்று விநா யகர் பெருமான் பூந்தண்டிகையில் உலாவந்து காட்சியளிப்பார். (ஒ-1)


## பக்க வடிவமைப்பாளர், தட்டச்சாளர் உடன் தேவை

எமது நிறுவனத்தில் பக்க வடிவமைப்பாளராகவும், தட்டெழுத்தாளர்களாகவும் பணிபுரிய ஆர்வம் உள்ள ஆண்கள் உடன் விண்ணப்பிக்கவும்.

தகைமைகள் :

- 2 வருடத்துக்குக் குறையாத முன்னனுபவம்,
- பக்க வடிவமைப்பு, தட்டெழுத்து துறையில் தேர்ச்சி
- ஏற்கனவே பத்திரிகை நிறுவனங்களில் பக்க வடிவமைப்பு, தட்டெழுத்து துறையில் பணியாற்றியோருக்கு முன்னுரிமை.
- பகுதி நேரமாகப் பணியாற்றவும் வசதி செய்யப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

*உங்கள் சுயவிவரங்களோடு நாளை (05.06.2010) இற்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.*

*பிரதம ஆசிரியர், உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*



## யாழ் மாவட்டத்தில் UNI ICT Campus மட்டுமே வழங்கும்!!!

## Diploma in Architecture CAD

(3D AND 2D Building Technology With 3D Studio Max & Architecture CAD)

கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்த எமது முதலாம் அணி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்!!!



Mr.S.Sivanesarajah Urumpirai · Mr.K.Kajeevakumar Jaffna · Mr.V.Thasheevan Jaffna · Mr.S.Karthikeyan Jaffna · Mr.A.Alvappillai Pointpedro · Mr.S.Thanachayan Jaffna · Mr.I.Athavan Jaffna

வார மற்றும் வார இறுதி நாள் வகுப்புக்கள் !!!

மாதாந்தம் ரூபா 40000/= மேல் உழைக்க முடியும் (குறைந்த பட்சம்)

### இக் கற்கை நெறியின் பயன்கள் சில....

இன்றய உலகில் மிகவேகமாக வளர்ந்து வரும் கட்டட நிர்மாணத்துறையில் கணனி மூலம் கட்டட வரைபடம் வரையும் படவரைஞர்களுக்கும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலைவாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணனி மூலம் கட்டட வரைபடம் வரைதலில் சிறப்பு தேர்ச்சி பெற்றோருக்கு ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்ற அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இக் கற்கை நெறியானது Draftsman, Construction Supervisor, Technical Officers, Junior Quantity Surveyors, Land Surveyors Civil Engineers போன்றவர்களுக்கு மிகவும் பயனுள்ள கற்கை நெறியாகும்.

தொழில் புரிவோருக்கான இரவு நேர வகுப்புக்களும் உண்டு.

எமது இந்திய விரிவுரையாளரின் சிறப்பான வழிகாட்டுதலில் 05/06/2010 பிரிவு - 2 ஆரம்பம் (சனிக்கிழமை 2 PM) இன்றே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

UNI - ICT Campus - No - 83, Palaly Road, Kantharmadam, Jaffna.

விபரங்களுக்கு:- T.P - 021 321 6433 / 0777 110 862 (Branches - Jaffna & Manipay)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தொடரும் இனவாதக் கூச்சல்

தமிழ் மக்களின் அகதிமுகாம் வாழ்க்கை தொடர்கிறது. மீள்குடியமர்வும் மந்தமான நிலையிலேயே நடைபெறுகிறது. மீள்குடியமர்த் தப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரமும் மோசமானது. மீள்குடியமர்த்தப்பட்டவர்கள் மீண்டும் தறப்பாள் முகாம்களிலேயே வாழும் நிலைமை நீடிக்கிறது. அதாவது, ஒரு தறப்பாளில் இருந்து மற்றொரு தறப்பாளுக்கு அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு நஷ்டஈடு வழங்க இன்னும் நடவடிக்கை இல்லை. அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள் வருடக் கணக்கில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றம் துரிதமாக நடைபெற்று வருகிறது.

2009 மே 18ஆம் திகதி யுத்தம் முடிவுக்கு வந்ததாக அரசாங்கம் அறிவித்து ஒரு வருடம் கழிந்த நிலையில் தொடரும் அவலங்கள்தான் மேற்கண்டவை.

தமிழ் மக்களின் இன்றைய நிலையை ஜனநாயக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஆனால் தென்னிலங்கை இந்த அவலங்களைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. பேரினவாதிகளின் இனவாதக் கூச்சல் இன்னும் ஓயவில்லை. தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் எட்டாம் திகதி புதுடில்லி சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தும்போது தமிழ் மக்களின் பிச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் ஏற்பாடுகளை இலங்கை அரசு செயற்படுத்த வேண்டும் என்று இந்தியா கோரவுள்ளது. எனினும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் புதுடில்லி விஜயத்தின்போது 'சீபா' உடன்படிக்கையே பிரதான இடம் வகிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. அதேசமயம், அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான தனது யோசனைகளையும் ஜனாதிபதி இந்தியாவுக்கு எடுத்துச் செல்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது யோசனைகளை இந்தியாவிடம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி ராஜபக்ஷ தென்னிலங்கையைப் புறக்கணித்துவிட்டு தமிழர்களுக்கு எந்த ஆட்சி அதிகாரங்களையும் வழங்க மாட்டார் என்பதை தென்னிலங்கை அரசியல் வாதிகள் அறியாதவர்கள் அல்லர்.

எனினும், மீண்டும் இனவாதக் கூச்சல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரபாகரன் ஆயுதத்தால் பெற்றுக்கொள்ள முடியாத ஈழ ராஜ்யத்தை அரசியல் ரீதியாகப் பெற்றுக்கொடுக்க இந்தியா முயற்சி செய்வதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டி உள்ளது. அரசமைப்பு சீர்திருத்தத்தை இந்தியத் தலைவர்களுக்குக் காட்டவேண்டிய அவசியம் இல்லை என்றும் இலங்கைத் தலைவர்கள் முதுகெலும்புடன் செயற்படவேண்டும் என்றும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஜனாதிபதிக்கு புத்திமதி கூறுகிறது.

தமிழினம் தோற்றுப்போன இனமாக இன்று வீழ்ந்து கிடக்கிறது. அப்படி இருந்தும் தெற்கில் இனவாதக் கூச்சல் ஓயாது.

அதுமட்டும் அல்ல, ஜாதிக ஹெல உறுமயவும் ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை வைத்து இனவாதம் கக்கி வருகிறது. கூடுதலான அதிகாரங்களோ, வடக்கு மற்றும் கிழக்கு சுயாட்சியோ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் தீர்வாகாது என்று அது கூறுகிறது.

தமிழர்களுக்கு உரிமைகளை வழங்கினால், இனங்களுக்கிடையில் மீண்டும் மோதல்கள் ஏற்படும் என்றும் ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது.

இது தான் இலங்கையின் பேரினவாத அரசியல் வாதிகளின் நிலைப்பாடு. காலம் காலமாக தொடர்கிறது இந்த கூச்சல் என்றுதான் ஓயுமோ தெரியவில்லை...?

## 'ஐபா' சர்வதேச திரைப்பட விழாவைப் புறக்கணித்ததன் மூலம்

# தமிழ் மக்களின் இரத்தம் தம்மில் கலந்துள்ளதை தமிழக உள்ளங்கள் மீண்டும் நிரூபித்துள்ளன

### நன்றி தெரிவித்துக் கூட்டமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 4

எமது மக்களின் மனங்களைப் புரிந்து அவர்களின் இரத்தம் தம்மில் கலந்துள்ளது என்பதை மீண்டும் தாய்த் தமிழக உள்ளங்கள் நிரூபித்துள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மிகப் பிரமாண்டமாகக் கொழும்பில் இன்று நடைபெற ஏற்பாடாகி அது தற்போது சங்கட நிலைக்கு உட்படும் அளவிற்கு அதற்கான எதிர்ப்பலைகளை வெளிப்படுத்திய தமிழக திரையுலக மற்றும் அரசியல் தலைமைகளுக்கு நன்றி தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டு, இலட்சக்கணக்கானோர் அகதிகளாகி அடுத்த வேளை உணவிற்காகக் கையேந்தும் நிலையினை எதிர்கொண்டு ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர். எமது மக்களின் அடுத்த கட்ட வாழ்க்கை என்பது மிகவும் மோசமானதாகவே அமைந்து காணப்படுகின்றது.

இலங்கையின் அனைத்து மக்களும் ஒரே நாட்டு மக்களே, அனைவருக்கும் தாமே தலைவர் எனக் கூறி வருகின்ற மஹிந்தராஜபக்ஷவும் அவரது அரசும் எமது மக்களை மாற்றான் தாய் பிள்ளைகளாகக் கருதி அவர்களை முட்கம்பி வேலிகளுக்குள் முடக்கியும், அவர்களின் சொந்த ஊர்களில் கொண்டு சென்று இறக்கி விட்டும் சென்றுள்ளனர்.

அவர்கள் உண்மையில் எமது மக்களை தமது மக்களாகக் கருதினால் கேளிக்கை நிகழ்வுகளையோ, விழாக்களையோ பெரும் எடுப்பில் நடத்த மாட்டார்கள் என்பது வெளிப்படையான விடயமாகும்.

மிகமோசமான மனித உரிமை மீறல்களைப் புரிந்ததுடன் தற்போதும் புரிந்து வருகின்ற அரசு சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையில் ஒரு பிரச்சினையும் இல்லை என்ற பொய்த் தோற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்து நடத்திவருகின்றது. இதன் அடிப்படையிலேயே இன்று கொழும்பில் தொடங்கியுள்ள ''ஐபா'' எனப்படும் சர்வதேச இந்தியத் திரைப்பட விழாவுக்கான ஏற்பாட்டினையும் மேற்கொண்டது.

ஆனாலும் எமது மக்களின் உணர்வுகளைப் புரிந்து இந்த நிகழ்வினை முழுமையாகப் புறக்கணிப்பது என்று தாய்த் தமிழகத் திரையுலகு எந்தவித தயக்கமுமின்றி முடிவெடுத்தது மட்டுமன்றி இந்தியாவின் ஏனைய முன்னணி மாநிலங்களைச் சேர்ந்த திரையுலகின் பிரபலங்களையும் நிகழ்வில் பங்கெடுக்காத வகையிலான அழுத்தங்களை மேற்கொண்டனது. அந்த அழுத்தங்கள் பெரியளவில் வெற்றியையும் ஈட்டித்தந்திருக்கின்றது.

தமிழ்த் திரையுலகினருடன் தமிழ் தேசப் பற்றாளர்களும் இணைந்து இந்த நிகழ்வுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். இதன் அடிப்படையில் இந்தியாவின் 'சுப்பஸ்ரார்' நிலையிலுள்ள எந்த ஒரு நடிகரும் பங்குகொள்ளாமலேயே இந்திய சர்வதேச திரைப்பட விழா நடைபெறும் நிலையினை எதிர்கொண்டிருப்பது சிங்கள அரசிற்கு மிகுந்த தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கும் என்பது அவர்களுக்கு ஒரு படிபினையாக அமையும் என நாம் நம் புகின்றோம்.

எமது மக்களின் மனங்களைப் புரிந்து அவர்களின் இரத்தம் தம்மில் கலந்துள்ளது என்பதனை மீண்டும் தாய்த் தமிழக உள்ளங்கள் நிரூபித்துள்ளமையையிட்டு நாம் உள்ளார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதில் நிறைவடைகின்றோம்.

எமது மக்களின் 60 ஆண்டு கால அடிமைத்தளையில் இருந்து விடுதலைபெற எமக்கான அரசியல் பயணத்தின் வீச்சில் உங்களின் மூச்சும் என்றென்றும் வலுச்சேர்ப்பதாக அமைய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொள்கின்றது - என்றுள்ளது.

## புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 4

மாகாணமட்ட புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை-03 நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான வினாப் பொதிகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள் உரிய கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்று பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்தி புள்ளிப் பகுப்பாய்வு அறிக்கைகளை பரீட்சை நடைபெற்று மூன்று தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-16)

## மாணவருக்கு பிரத்தியேக ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி

வடமராட்சி, ஜூன் 4

ஆங்கில செயற்திறன் விருத்தித் திட்டத்தின் கீழ் வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களுக்கு பிரத்தியேக ஆங்கில பேச்சுப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

வல்வெட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித்துறை நலன்புரி சங்கப் பிரித்தானியக்கிளையின் அனுசரணையுடன் இவ்வகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை நாள்களில் பாடசாலை முடிவடைந்ததும் ஒரு மணி நேரம் இப்பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது.

இம்மாதம் ஆரம்பமான இப்பயிற்சி வகுப்பு எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை இடம்பெறும் என அதிபர் நா.கண்ணதாசன் தெரிவித்தார். (ஒ-236)

## வலிகாமம் கிழக்குப் பிரதேசத்திலும் ''நெல்சிப்'' அபிவிருத்தித் திட்டம்

நாவற்குழி, ஜூன் 4

உள்ளூராட்சி அமைப்புக்களின் உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவென இவ் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் 'நெல்சிப்' திட்டத்திற்கென வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைப் பிரிவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்குரிய கலந்துரையாடல் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நீர்வேலி வலயக் கிராம அலுவலர் பிரிவுகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அத்தியார் இந்துக் கல்லூரியிலும்,

அச்சுவேலி வலயத்திற்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியிலும்,

புத்தூர் வலயத்திற்கு அதே நாள் பிற்பகல் 2.30 மணிக்கு சோமாஸ்கந்தக் கல்லூரியிலும்-

உரும்பிராய் வலயத்திற்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும்-

கோப்பாய் வலயத்திற்கு அதே நாள் மாலை 4 மணிக்கு நாவலர் மகா வித்தியாலயத்திலும் கலந்துரை யாடல்கள் நடைபெற உள்ளன.

இதில் பிரதேச சபை, பிரதேச செயலக அதிகாரிகள் மக்களைச் சந்தித்துப் பொருத்தமான வேலைத் திட்டங்களைத் தெரிவுசெய்ய உள்ளனர். (50-121)

## மாணவர்களுக்கான கோலப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான (தரம் 1-5) கோலப் போட்டிகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யா/கனகரத் தினம் மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி போட்டியில் பங்குபற்றும் மாணவர்களை உரிய நேரத்தில் சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (50-16)

## கச்சாய் பிரதேசத்துக்கு விரைவில் கேபிள் தொலைபேசி இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4

தென்மராட்சியில் கச்சாய் பிரதேசத்திற்கு விரைவில் ஸ்ரீலங்கா ரெலிக்கொம்மின் கேபிள் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன.

தற்போது அப்பகுதியில் கேபிள்களை இணைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கேபிள்களை இணைக்கும் பணிகள் நிறைவு பெற்றதும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படும் என ரெலிக்கொம் வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 22 | 05.06.2010 |
| | சனிக்கிழமை |
| திதி | : அட்டமி |
| | பி.ப. 3.44 |
| நட்சத்திரம் | : பூரட்டாதி |
| | பி.இ. 05.07வரை |
| சுபநேரம் | : 02.52 - 04.22 |
| ராகுகாலம் | : 08.52 - 10.22 |

## சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் புகைத்தல் எதிர்ப்பு தினக் கொடிவாரம்

யாழ்ப்பாணம், ஜூன்4

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலப் பிரிவுகள் தோறும் புகைத்தல் எதிர்ப்பு தின கொடிவாரம் சென்ற மேமாதம் 31ஆம்திகதி முதல் ஜூன் 13ஆம் திகதி வரையும் நடைபெறுகிறது.

வருடாந்தம் இக்கொடி வாரம் மூலமான நிதி சேகரிப்பு நடவடிக்கையில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிதியின் மூலம் சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்படும் திறமைமிக்க வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுவது வழக்கம்.

வறுமை தணிக்கவென 1996ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சமுர்த்தி திட்டத்தின் ஓர் அங்கமாகவே இக்கொடி விற்பனைத் தினம் வருடாந்தம் நடைபெறுகிறது.

'சிப்தொற' திட்டத்துடன் இணைந்ததாக வறியமாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதில் இக்கொடி தினமும் பங்களித்து வருவது குறிப்பிடத்தக்கது. (50-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (முத்துராசா)

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை)



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 4ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமாகிய வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை 29.05.2010 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை - கிறிஸ்ரீனா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - அந்தோனிக்கம்மா தம்பதியரின் மருமகனும் திரேசம்மாவின் (ராசாத்தி) அன்புக் கணவரும் லியோனாக்கார்மல் (பேபி- கனடா), வின்சன் ஆரோக்கியராஜா (ராஜன்- பிரான்ஸ்), வின்சன் டனி (ஜெறி-கனடா), Bro.ரெனி ஜெறாட் (திருவுளசபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அந்தோனியம்மா (கிளி), காலஞ்சென்ற புனிதசீலி (ராசாத்தி) மற்றும் டானியேல் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அன்னராசா, றூபி, ஜெனனி ஆகியோரின் மாமனாரும் சந்துரு, சாளினி, சந்றின், றொயிஸ்ரன், நிவேன், ஜெய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (05.06.2010) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.
தொ.பே. 0213008986

தகவல்:
குடும்பத்தினர்.

(99073)

## அல்பேட் இராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பேட் இராஜசிங்கம் நேற்று (03.06.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - இராசம்மா தம்பதியயரின் அன்பு மகனும் நவரட்ணம் - றஞ்சிதமணி தம்பதியினரின் அன்பு மருமகனும் மில்லி தேவமலரின் அன்புக் கணவரும் இயேசு சகாயம், சாந்தகுமார், இராஜகுமார் (ஜோய்), ராஜகுமாரி (ஸ்ரெலா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரிய தர்ஷனி, கோமதி, டக்ளஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் டேவிற்குலசிங்கம், கிறேஸ்புஸ்பமணி, தேவமணி, கமலபூமணி, யோன்துரைசிங்கம், பேள்யோகமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாரள்சுதனிகா, சாமுவேல்தக்ஷன், கோகுலன், றோகினி, வைஸ்ணவி, டானியல், டிலக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (05.06.2010) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மானிப்பாய் அமெரிக்கன் சிலோன் மிசன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/568090)

## தம்பாபிள்ளை மாணிக்கம்



அச்சுவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பாபிள்ளை மாணிக்கம் நேற்று (03.06.2010) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தம்பாலை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவின்ர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாலை,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(99068)

## சின்னத்தம்பி நாகேந்திரம்



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகேந்திரம் 31.05.2010 திங்கட்கிழமையன்று கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - உமையாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மார்க்கண்டு - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் பாசமிகு கணவரும் ரஜினி, பாஸ்கரன், ரூபாகரன், றஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் தெய்வேந்திரா, சுகந்தி, கோமதி ஆகியோரின் மாமனாரும் சுகிர்தாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, செல்வநாயகர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான குமரேசு, கேதீஸ்வரன், அழகேஸ்வரன், லோகேஸ்வரன், மகேஸ்வரன் மற்றும் அனுராவதி, சந்திரேஸ்வரன், ராஜேஸ்வரி, புஸ்பமாலா, ரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை இல. 463, நாவலர் வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

463, நாவலர் வீதி,
அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/568099)

## தேவை

1) AD லைசன்ஸ் உள்ள சாரதி தேவை.
2) யாழ்.நகரில் கடை வாடகைக்குத் தேவை.

சனிக்கிழமை (05.06.2010) காலை 9.30 மணிக்கு சமுகமளிக்கவும்.

தொடர்பு:
56, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
077-1093300,
077-6647976.

## தவறிவிட்டது

15/8, மலர்மகள் வீதி, அரியாலை என்ற விலாசத்தை உடைய செல்லையா நடராசாவின் தே.அ.அட்டை (563653868 V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கடந்த 27.05.2010 வியாழக்கிழமையன்று திருநெல்வேலிக்கும், மாம்பழம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொடர்பு: T.P. 021 222 9025

## வடமாகாணப் போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்களும், வழிகாட்டி நூல்களும்

கல்விசாரா ஊழியர், சுகாதார முகாமைத்துவ உதவியாளர், முன்பள்ளி ஆசிரியர், பொதுச்சேவை ஆணைக்குழுவின் ஏனைய பரீட்சைகள்

என்பவற்றுக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு 3 மணி தொடக்கம் 5 மணிவரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ். நகரில்) நடைபெறுகின்றன.

* திரு. தவசேகர் ஆசிரியரின் பொது அறிவு, பொது உளச்சார்பு வழிகாட்டி (ரூ.350/-), சுகாதார முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி (ரூ. 250/-) பிரபல புத்தக நிலையங்களில் இன்றுமுதல் பெற்றுக் கொள்ளலாம்.

## Personal Class

தரம் 3 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal CLass உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். [அனுமதி மட்டுப்படுத்தப்பட்டவை]. தொடர்பு:
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, தொ.பே: 077-8692979

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

A/L-2011, A/L-2012

சித்திரக்கலை
K.சிறிஸ்

உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.

ஆரம்பம்: 05.06.2010
சனி-1.00 P.m

## தரம் ஐந்துக்கான மாகாணமட்டப் பரீட்சை நாளை

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம்-5 இற்குரிய 3ஆவது மாகாண மட்டப் பரீட்சை நாளை 5ஆம் திகதி சனிக்கிழமை வழமையான காலஅட்டவணைக்கமைவாக நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பாசாலைகள் தமக்குரிய வினாப்பத்திரங்களை கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும், ஆசிரியர்கள் பகுப்பாய்வுப் படிவங்களை எதிர்வரும் 9ஆம் திகதி வலயக்கல்வி அலுவலக மேல்மாடியில் நடைபெறும் கலந்துரையாடலின்போது சமர்ப்பிக்குமாறும் வலயக்கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## புனரமைப்புக் கூட்டம்

தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்பு கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் புனரமைப்புக் கூட்டம் இன்று வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணிக்கு புல்லுக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நடைபெறும் என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6-207)

சிவமயம்

## இளம் குருவை வாழ்த்துகின்றோம்

23.05.2010 அன்று குருப்பட்டாபிஷேகம் பெற்ற
சிவஸ்ரீ மு.தயாபரக்குருக்கள்
(கண்ணன் ஐயா)



அவர்கள் சிறந்த குருவாக விளங்கி குருத்துவ சேவையாற்ற கற்பக விநாயகன் அருள்புரிய வேண்டுமென பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ பா.செல்வவேந்தன் ஐயா
(பாபுஜி) குடும்பம்.
முத்துமாரி அம்மன் கோயிலடி.
மட்டுவில், சாவகச்சேரி.

## யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம் நூற்றாண்டு விழா

மேற்படி பாடசாலையின் நூற்றாண்டு விழா 30.06.2010 அன்று கொண்டாடப்படவுள்ளது. இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலையுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் 15.06.2010 இற்கு முன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொலைபேசி இல.
0213216479

நூற்றாண்டு விழாக் குழுவினர்,
யா/அளவெட்டி அருணாசலம்
வித்தியாலயம்.

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் நமசிவாயம் கந்தையா

பிறப்பு 26.08.1890 — இறப்பு 04.06.1985

சீரிய நெற்றி எங்கே? சிறுபுன்னகை தான் எங்கே?
பொன்னிறமேனி எங்கே?
தேனூறும் மொழி பேசும் செவ்வாய் எங்கே?
உன் ஆறடி கூந்தல் எங்கே? உதவும் உன் கரங்கள் எங்கே?
கல்லையும் உருக வைக்கும் உன் இரக்கம் எங்கே?
காலன் உன்னைக் கொண்டுபோய் கால்நூற்றாண்டானாலும்-ஐயா
கந்தையா உன்நினைவுகளுடன் வாழும் உன் நவரத்தினங்கள்.

"இராஜமாதா வில்லா"
தம்மனை, சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்.

# முக்கிய அறிவித்தல்

## பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

## கிளைகள் ரீதியாக அங்கத்தவர்கள் விவரங்களை திரட்டுதலும் புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளலும்

கடந்த வருடம் வன்னியில் ஏற்பட்ட போர் சூழ்நிலை காரணமாக, எமது சங்கம் பல இடங்களிலும் இடம்பெயர்ந்து, சங்க ஆவணங்களையும், சொத்துக்களையும் கைவிட்டு தற்போது தமது சொந்த இடத்தில் மீளவும் இயங்கிவருகிறது. பூநகரி பிரதேச செயலகர் பகுதியில் மக்கள் முழுமையாக மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் எமது சங்கத்தின் பொது சபையினையும், இயக்குநர் சபையினையும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்வதற்கான முன்னோடி நடவடிக்கைக்காக கிளைகள் ரீதியாக அங்கத்தவர்களின் விவரங்களை திரட்ட வேண்டியுள்ளது. அத்துடன் புதிய அங்கத்தவர்களையும் சேர்த்துக்கொள்ள முடியும்.

அங்கத்தவர்கள் விவரத்தைத் திரட்டுவது தொடர்பில் ஏற்கனவே சங்கத்தில் இருந்த அங்கத்தவர்கள் பின்வருவனவற்றை கவனத்தில் கொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ தாங்கள் சங்கத்தின் ஏதாவது கிளையொன்றில் அங்கத்தவராக சேர்ந்திருப்பின் அதற்கு ஆதாரமாக பங்குப்பணம் கட்டிய பற்றுச்சீட்டு அல்லது சேமப் புத்தகத்தில் பங்குப்பணம் கட்டியமையை அல்லது ஆதாரப்படுத்தக்கூடிய சான்றளிக்கக்கூடிய விவரமிருப்பின் அதனை சங்கச் செயலாளருக்கு/ தலைவருக்குச் சமர்ப்பித்து இரு பிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தை தயாரித்து சங்க செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

★ ஏற்கனவே அங்கத்தவராக சேர்ந்து அவர்கள் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க முடியாதவிடத்து 100 ரூபா பங்குப்பணத்தை செலுத்தி இருபிரதிகளில் அங்கத்துவ விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சங்க செயலாளரிடம் அவற்றை சமர்ப்பிப்பதுடன் தான் பழைய அங்கத்தவர் என்பதை உறுதிப்படுத்த சத்தியக் கடதாசியொன்றை தயாரித்து, முறைப்படி பூரணப்படுத்தி சங்கச் செயலாளரிடம் பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவத்துடன் ஒப்படைக்கவும். (எதிர்காலத்தில் பழைய கணக்கு விவரம் கிடைக்கும் பட்சத்தில் அதில் குறிப்பிடப்படும் பங்குப் பணம் தற்போது கட்டிய பங்குப் பணத்துடன் சேர்க்கப்படும்).

★ ஒரு பங்கின் பெறுமதி ரூ.100/= ஆகும்.

★ புதிய அங்கத்தவர்கள் ரூ.100/= பங்குப் பணத்தைச் செலுத்தி அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களை இரு பிரதிகளில் பூரணப்படுத்தி சங்கச் செயலாளரிடம் ஒப்படைக்கவும்.

**இந்நடவடிக்கைக்கான இறுதித் திகதி 30.06.2010 ஆகும்.**

சு.மகிந்தன்
தலைவர்

சி.தாரணி
செயலாளர்

(99075)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியலில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு; இலங்கையிலும் அந்தச் சட்ட மூலம் மிகவும் அவசியம்

## யாழ்.பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்4

இந்தியாவின் அரசியலில் பெண்களுக்கென இடஒதுக்கீடு உள்ளதைப் போன்று இலங்கை அரசியலிலும் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்வது அவசியம். இலங்கையில் அதனை நிறைவேற்றத் தீர்மானித்துள்ள சட்டமூலம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

'பெண்கள் அரசியலில் ஈடுபடுதலை ஊக்குவிப்போம்' என்னும் தலைப்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று வியாழக்கிழமை யாழ்.செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போதே பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியலில் பெண்கள் பங்கேற்று அபிவிருத்திச் செயல்முறைகளிலும் தீர்மானம் எடுத்தல் செயல்முறையிலும் அவர்கள் பங்காற்றவேண்டும். அதன் மூலம் எமது நாடு பயன்பெறவேண்டும்.

ஆனால் எமது நாட்டில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவு. அந்தவகையில் 1994இல் 4.8வீதமாகவும் 2000ஆம் ஆண்டில் 4வீதமாக்வும் 2001இல் 4.5 வீதமாகவும் இலங்கை அரசியலில் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருந்தது. இந்த வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போதும் வேட்பாளர்கள் பெற்ற ஆசனங்களில் 3 ஆசனங்கள் மட்டுமே பெண்களுக்குக் கிடைத்துள்ளன. இவை காரணமாக பெண் தலைமைத்துவம் குறைவடைந்துள்ளது.

இதேவேளை -

உலகின் முதல் பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவும், பெண் ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்கவும் விளங்கினார்கள். இவ்வாறு இருந்தும் பெண்களின் பங்களிப்பு அரசியலில் மிகக் குறைவாக உள்ளது.

இந்த நிலைமையிலிருந்து விடுபடுவதற்கு பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும். நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி, மாகாண சபைத் தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படவேண்டும். பெண்கள் முன்னேற்றத்துக்கும் பெண்களின் பங்களிப்பு அரசியிலில் அவசியமானது - என்றார்.



இந்த நிகழ்வில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி தயா பீரிஸ், யாழ்.பிரதேச செயலக உயர் அதிகாரிகள், உள்ளூர் சமூக மட்ட பெண்கள் குழுவின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (50-14)

# தேசிய சேமிப்பு வங்கியில் நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,ஜூன் 4

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், திருநெல்வேலி ஆகிய கிளைகளில் அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விற்பனை தேசிய சேமிப்பு வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் நடைபெறவுள்ளது. (204)





# துண்டி, எழிலூர் பகுதிகளில் அனுமதி கிடைத்தும் வீடுகள் இடிந்துள்ளமையால் அல்லல்படும் மக்கள்

## உதவி வழங்குமாறு உரிய தரப்புகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்4

கொழும்புத்துறை துண்டி, எழிலூர் பகுதிகளில் கடந்த கால யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள வீடுகளைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதிகளில் முன்னர் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் பொதுமக்களின் சொந்த வீடுகள் என்பன முற்றாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.



இப்பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டபோதும் குடியேறக்கூடிய நிலையில் வீடுகள் இல்லாமையால் அப்பகுதி மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். வீடுகளில் பெரும்பாலானவை இடிந்து கற்குவியல்களாகக் காட்சியளிக்கின்றன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்த மக்களின் வீடுகளைப் புனரமைப்புச் செய்வதற்கான உதவிகளை வழங்குமாறு ,சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (50-224)

# தவறவிட்ட உடைமைகள் பிரதேச செயலகத்தில்

நாவற்குழி,ஜூன்4

கடந்த வருட இறுதியில் வன்னியில் இருந்து வலி.கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில் மீளக்குடியேறிய மக்கள் தவறவிட்டுச் சென்ற உடைமைகள் சில இன்னமும் பிரதேச செயலக வளாகத்திலேயே உள்ளன.

7 மாதங்கள் கடந்தும் உரியவர்கள் எவரும் அடையாளம் காட்டி எடுத்துச்செல்லவில்லையென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (50-121)

# அச்சுவேலியில் ஆடைத் தொழிற்சாலை

நாவற்குழி,ஜூன்4

அச்சுவேலி மேற்கு கைத்தொழில் பேட்டையில் ஆடைத்தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

சுமார் ஆயிரத்து 500 பேருக்கு இத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு வழங்கப்படமுடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பிரதேசங்களைச் சேர்ந்தோர் இத்தொழிற்சாலையில் வேலைவாய்ப்புப் பெறமுடியும்.

வேலைவாய்ப்பு பெற விரும்புபவர்கள் கிராம அலுவலர்களிடம் பதிவுசெய்துகொள்ளுமாறு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் அறிவித்துள்ளார். (50-121)

# டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் நாளை நூலகத்தில்

வலி.வடக்கு,ஜூன்4

யாழ்.மாவட்ட டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இக்கூட்டம் இடம்பெறும்.

இலங்கை சுகாதார அமைச்சின் நோய்த்தொற்றியல் நிபுணர் டாக்டர் பாலிகவர்த்தனவினால் இலங்கையில் தற்போதைய டெங்கு நிலைவரம் பற்றியும் யாழ்.மாவட்ட பிராந் திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரனினால் யாழ்.மாவட்டத்தில் தற்போதைய டெங்கு நிலைமை பற்றியும் -

வவுனியா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் டாக்டர் ரி.சத்தியமூர்த்தியினால் டெங்கு கட்டுப்பாடு சம்பந்தமாகவும் கருத்துரைகளும் வழங்கப்படவுள்ளன. (1-86)

# பருத்தித்துறைப் பிரதேச சபையின் 'நெல்சிப்' கலந்துரையாடல் இன்று முதல்

வடமராட்சி,ஜூன்4

வடக்கு, கிழக்கு உள்ளூர் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் (நெல்சிப்) கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும், அவற்றை முன்னிலைப்படுத்துவது தொடர்பாகவும், பருத்தித்துறை பிரதேச சபையினால் கொத்தணி ரீதியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைய பருத்தித்துறை பிரதேச சபை வடக்கு, கிழக்கு என இரு கொத்தணிகளாக பிரிக்கப்பட்டுள்ளதாக சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தெரிவித்தார்.

வடக்கு கொத்தணிப் பிரிவில் உள்ள அல்வாய் வடமத்தி, அல்வாய் வடக்கு வியாபாரிமூலை, புலோலி மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு இன்று 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இன்பருட்டி பொதுநோக்கு மண்டபத்திலும் -

புலோலி வடமேற்கு, புலோலி தென்மேற்கு, மந்திகை ஆகிய கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு நாளை 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு குரும்பைகட்டி சனசமூக நிலையத்திலும் -

பொலிகண்டி கிழக்கு, பொலிகண்டி தெற்கு கிராம சேவையாளர் பகுதிகளுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பொலிகண்டி அம்பிகை சனசமூக நிலையத்திலும் -

கிழக்குக் கொத்தணிப் பிரிவில் உள்ள மணல்காடு, குடத்தனை, குடத்தனை வடக்கு, பொற்பதி, அம்பன் ஆகிய கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனை அமெரிக்கன் மிஷன் திருச்சபை மண்டபத்தில் கலந்துரையாடல் நடைபெறும்.

புலோலி கிழக்கு கிராம சேவையாளர் பகுதி மக்களுக்கு 9ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு புற்றளை சனசமூக நிலையத்திலும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளன.

வடக்கு கொத்தணிப் பிரிவு கலந்துரையாடல்களில் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரும் கிழக்கு கொத்தணிப் பிரிவு கலந்துரையாடலில் வடமராட்சி கிழக்கு(மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதவித்திட்டமிடல் பணிப்பாளரும் கலந்துகொள்வார்கள். (50-236)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையில் ஏனைய திணைக்களங்கள் இணைந்து நடத்திய உள்ளூர் உற்பத்திக் கண்காட்சிக்கான பரிசளிப்பு நிகழ்வு யாழ். மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.பெலிசியன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் -

மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி உரை நிகழ்த்துவதையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இருந்து யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அ.ந.ஜெயராஜன் உள்ளூர் உற்பத்திக் காட்சியில் வெற்றியீட்டியமைக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும் இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள் : லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவுகளுடன்...



### அமரர் வன்னியசிங்கம் பாலசுப்பிரமணியம்

மலர்வு: 31.10.1947 உதிர்வு: 17.05.2009

**திதி: அட்டமி**

பாசமாக பலரோடும் பண்பாக உறவாடிய
வண்ணமொழி முகம் சொந்த இடம் திரும்பு முன்னே
திசைமாறிச் சென்ற தெங்கோ - பார்ப்பவரும் பரிதவிக்க
பரமனடி சென்றுவிட்ட ஓராண்டும் ஆனதுவோ
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டாயினும் நெஞ்சைவிட்டு
அகலாது உம் நினைவு

*05.06.2010* அன்று முதலாமாண்டு நினைவை ஒட்டி நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி ஒழுங்கை,
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. (சி/568096)

**மனைவி, பிள்ளைகள், உறவினர்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: *25.03.1946* மறைவு: *05.05.2010*

### திருமதி நாகலிங்கம் நாகேஸ்வரி



கடந்த 05.05.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைப்பு வழங்கியும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(99050)

**குடும்பத்தினர்**
கலைவாணி மில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

நிரந்தர இடம்:
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

## கலாபூசணம் விருதுக்கு வலி.கிழக்கில் 4 பேர் மட்டுமே விண்ணப்பம்

நாவற்குழி, ஜூன் 4

கலாசார மரபுரிமைகள் அமைச்சினால் கலாபூசணம் விருதுக்கு இந்த ஆண்டிற்கு 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

மே 31 ஆம் திகதியுடன் இதற்குரிய விண்ணப்பங்களை பிரதேச செயலக கலாசார அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும் கால எல்லை முடிந்து விட்டது.

வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 4 கலைஞர்கள் மட்டுமே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

சென்ற 2009 ஆம் வருடம் இப்பிரதேச செயலகப் பிரிவிலிருந்து கலாபூசணம் விருதுக்கு யாருமே தெரிவு செய்யப்படாமை குறித்து கலைஞர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். (50-121)

### German, Swiss மொழி வகுப்புகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறு கின்றன. (Germanyயிலிருந்து வந்த ஆசிரியரால் கற்பிக்கப் படுகின்றது)

தொடர்புகளுக்கு - 10, Palaly Road, Jaffna. T.P. 0771604823

### கார் விற்பனைக்கு

டாக்டரின் பாவனையில் உள்ள "Hyundai Elandra கார் (HS-XX XX)விற்பனைக்கு உண்டு.Power Mirror, Power Shutter, Original allows, Remote Key விலை ரூபா 16 இலட்சம்.

தொடர்பு: 0772865382

### வீடு உடன் வாடகைக்குண்டு

மானிப்பாய் பகுதியில் நான்கு படுக்கையறைகள் கூடிய சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777298108, 0777422768

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள SUZUKI SWIFT 2003 மொடல் KAXXXX விற்பனைக் குண்டு.

தொ.பே: 0771130304

## 2010 யாழ்.இசை வசந்த விழாவில் "அருணாவின்" இசைச் சங்கமம்

27 தொடக்கம் 5ஆம் திகதி வரை யாழ்.முற்றவெளி மைதானத்தில் நடைபெறுகின்ற மாபெரும் கலை நிகழ்ச்சிகளின் வரிசையில் இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு இசைப் பயணத்தில் 44 வருடங்களாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் **யாழ்.அருணா** இசைக் குழுவினரின் இசைச் சங்கமம் இடம்பெறவுள்ளது என்பதை இசைரசிகர்களுக்கு அறியத் தருகின்றோம். அனைவரையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

[99065] அருணா இசைக் குழுவினர்.

## மரண அறிவித்தல்

### *நவரத்தினம் பன்னீர்ச்செல்வன்* (வீடியோ பன்னீர்)



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பன்னீர்ச்செல்வன் 01.06.2010 செவ்வாய்க் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் சாந்திமதியின் அன்புக் கணவரும் அனுஷன், சிந்துஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கனகசுந்தரம்-தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான பரமானந்தம், தியாகராஜா மற்றும் பாலசுப்பிரமணியம் (FRANCE), திருநாவுக்கரசு(INDIA), காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் நவமணி (CANADA), கேசவராணி(SWISS), சச்சிதானந்தன்(LONDON), குலேந்திரன் (காந்தி-CANADA) காலஞ்சென்ற வரதராஜா மற்றும் புஸ்பராணி (CANADA), புவனேஸ்வரி (CANADA), திருக்குமார் (சிவம்-CANADA) ஆகியோரின் அன்புச் சகோதரரும் யோகம்மா(COLOMBO), ராஜலட்சுமி (LONDON), சொர்ணலட்சுமி (FRANCE), பரஞ்சோதியம்மா (INDIA), கௌரவகௌரி (CANADA), கனகசபாபதி (CANADA), பாலசுப்பிரமணியம் (SWISS), வசந்தி (LONDON), கமலராணி (CANADA), புவனேஸ்வரி (COLOMBO), குணரத்தினம் (CANADA), பாலசுந்தரம்(CANADA), ஆதிரை (CANADA) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரகுமார் (LONDON), சந்திரமதி (GERMAN), இந்துமதி (SWISS), காந்திமதி(LONDON), வளர்மதி (COLOMBO) ஆகியோரின் அன்பு அத்தானும் உதயரத்தினம் (GERMAN), சிவகுமார்(LONDON), அருணா (LONDON) ஆகியோரின் சகலனும் காலஞ்சென்றவர்களான நல்லையா, வல்லிபுரம், நடராசா, பாக்கியம் மற்றும் கனகசுந்தரம்(COLOMBO) காலஞ் சென்றவர்களான நல்லம்மா, கந்தசாமி மற்றும் சோமசுந்தரம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகனும், ரவிவர்மன் (போட்டோ ரவி), பாலகுமார், சரவணன்(FRANCE), சுலோசனன் (FRANCE) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் (06.06.2010) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல,10.கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212226921 (99061)

தகவல்:
சோ.ரவிவர்மன் (போட்டோ ரவி)
மைத்துனன்.


BLACK&DECKER DEWALT

பழைய உபகரணங்களிற்கான விசேட 30% மாற்றீட்டு விலைக்கழிவு



மின் வலு சக்தி உபகரணங்களுக்கு மட்டும்

இலவச பராமரிப்புச் சேவை முகாம்
யாழ் நகரில்
நந்தலால் ஹார்ட்வெயார்
இல.29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

2010 ஜூன் 7ம், 8ம், 9ம் திகதிகளில்
மு.ப. 9 முதல் பி.ப. 4 வரை

- இலவச பரிசோதனையும் பராமரிப்புச் சேவையும்
- பழுதுபார்ப்புக் கட்டணத்தில் 50% தள்ளுபடி
- உதிரிப்பாகங்களின் விலைகளில் 25% தள்ளுபடி
- விசேட பரிமாற்றச் சலுகை
- மின் வலு சக்தி உபகரணங்களின் செயற்பாட்டை அவதானிக்கும் வாய்ப்பு
- சரியான மற்றும் பாதுகாப்பான பாவனைக்கு ஆலோசனைகள்

*நிபந்தனைகளுக்கு உட்படும்

DELMEGE CONSTRUCTION PRODUCTS
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்
டெல்மேஜ் கொன்ஸ்ட்ரக்ஷன் புரடக்ட்ஸ் தனியார் நிறுவனம்
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
உடனடி அழைப்பு: 077 1035270



Student Visa
Visit Visa & Migration

Student Visa/ Visit Visa
UK/Canada/Australia/Netherland/Malta/Malaysia
Reject / Refusal visa க்கள் பரிசீலனை செய்து தரப்படும்

- புதிய வீசா விதிகளுக்கமைய Visa Process மிக திறமையாக செய்து தரப்படும்.
- 15 வருட அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் மூலம் ஆவணங்கள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- அங்கீகாரம் பெற்ற College / University அனுமதி பெற்றுத்தரப்படும்
- Sponsor வசதி.Accommodation, Part time job என்பன ஒழுங்கு செய்து தரப்படும்

ADMISSION INTAKE 2010 JUNE / JULY / AUG
NO IELTS Min Qualification O/L

Australia Migration ▶▶
Business & Skill • Engineers • Accountants • IT Degree holders

MMW



SPOT ADMISSION
Degree Holders | 06,07.06.2010
O/L, A/L உள்ளவர்களுக்கு
Offer Letter in 3 Days

யாழ்ப்பாணம் : 0774 454 646
(Mr.M.Selvam) 82/129, Chetty Street, Nallur.
சாவகச்சேரி : 0775 143 946
வடமராட்சி : 0773 696 904

EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No. 22A,Frankfort Place,Bambalapitiya,Colombo -04,Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,0718246941
Web : www.etbclanka.com E-mail : etbc@etbclanka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் வங்கியின் சகோதர நிறுவனமான லீசிங் கம்பனியின் யாழ்.கிளையின் உப அலுவலகம் சாவகச்சேரி மக்கள் வங்கிக்கிளையில் அண்மையில் ஆரம்பித்து வைத்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் வீ.கே.ஆனந்தராசா மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும்-

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பீப்பிள் லீசிங் கம்பனியின் பிரதான நிறைவேற்று அலுவலர் டி.பி.குமாரகே, மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை அடுத்த இரு படங்களிலும்-

பயனாளி ஒருவருக்கு வாகனத்தின் திறப்பையும் மற்றொருவருக்கு வாகனத்தின் பத்திரங்களையும் கையளிப்பதை இறுதிப் படங்களிலும் காணலாம்.

(படங்கள்: தென்னவன்)

# குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இனிமேல் சீரான மின்சாரம் கிடைக்கும்

## வடபிராந்திய அலுவலக அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 4

குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் இனிச் சீராக மின் விநியோகம் கிடைக்கும். மின்வெட்டை அமுல்படுத்த வேண்டிய தேவை இனிமேல் இருக்காது என இலங்கை மின்சார சபையின் வட பிராந்திய பிரதிப்பொதுமுகாமையாளர் எஸ்.முத்துரட்ணானந்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதுவரை காலமும் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளின் திருத்த வேலைகள் காரணமாகக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மாறிமாறி சிறிய அளவில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டி ஏற்பட்டது. எனினும் மின்பிறப்பாக்கிகளின் திருத்தப் பணிகள் பூர்த்தியாகியுள்ளதால் இனி குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான மின்விநியோகம் நடைபெறுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களாக சாவகச்சேரிப் பகுதியில் பட்டத்தின் வால் சிக்கியதில் ஏற்பட்ட மின் தடையை பணியாளர்கள் இனங்கண்டு திருத்தம் மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தாலே மின்தடை அமுல்படுத்தப்பட்டதாகவும், இது போன்ற சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் தமக்கு உரிய அறிவித்தலைத் தருமாறும் அவர் கூறினார். (50-16)

## கரவெட்டி விக்னேஸ்வராவில் இன்று சுற்றாடல் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் உலக சுற்றாடல் தினம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொண்டாடப்படவுள்ளது.

கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கல்லூரியின் சுற்றாடல் விழிப்புக் குழுவால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (50-16)




# கியூடெக் நிறுவனப் பெயரைப் பயன்படுத்தி பணம் திரட்டும் மோசடிப் பேர்வழிகள்

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம்,ஜூன் 4

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் பெயரைப் பாவித்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வரும் போலி நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு அந்த நிறுவனம் பொதுமக்களை எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

யாழ்ப்பாணப் பகுதியில் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் சமூக மட்டக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்றும் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவும் பொருட்டு தாம் நிதி சேகரிப்பதாகவும் கூறிக்கொண்டு சில போலி நபர்கள் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றமை பற்றிய தகவல் எமக்கு தெரிய வந்துள்ளது.

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனமானது இன,மத,சாதி வேறுபாடின்றி மக்கள் மத்தியில் பல ஆண்டுகளாக பணியாற்றிவரும் யாழ். கத்தோலிக்க திருச்சபையின் சமூகத்தொண்டு நிறுவனம். தற்போது யாழ். குடாநாட்டு மக்களில் அநேகமானவர்கள் கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் பயனாளிகளாகவும் பங்கேற்பாளர்களாகவும் உள்ளனர்.

இத்தகைய போலி நிதி சேகரிப்பவர்களின் நடவடிக்கை எமக்கு கவலை அளிப்பதால், எமது நிறுவனத்தின் செயற்பாடுகளைக் களங்கப்படுத்துவதாகவும் உள்ளதால் இவர்கள் மட்டில் எச்சரிக்கையாக இருக்கும்படி மக்களை கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் கேட்டுக்கொள்கிறார். இவ்வறிவித்தலை முன்னரும் யாழ். பத்திரிகைகளின் வாயிலாக மக்களுக்கு தெரிவித்திருந்தோம் என்பதை அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (50-14)

# இருளில் மூழ்கும் இராச வீதி; இரவில் பயணிகள் பெரும் சிரமம்!

யாழ்ப்பாணம்,ஜூன் 4

கோப்பாய் இராச வீதிக்கு மின்விளக்குகளைப் பொருத்தி இரவில் மக்கள் பயமின்றிப் பயணிப்பதற்கு வழிசெய்யுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும் இராச வீதியில் இதுவரை மின்குமிழ்கள் பொருத்தப்படவில்லை. இதனால் இந்த வீதி இரவில் இருளில் மூழ்கியுள்ளது.

பொதுமக்கள் கூடுதலாகப் பயணம் செய்யும் இந்த வீதிக்கு மின்குமிழ்கள் பொருத்தப்படாமையால் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் மின்குமிழ்கள் பொருத்தப்படாமையால் இரவில் வழிப்பறிகள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அதிகாரிகள் இது தொடர்பாக உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர். (50-224)

# வடக்கின் முதல்தர விளையாட்டுத்துறைப் பாடசாலையாக யாழ். மத்திய கல்லூரியைத் தரமுயர்த்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்4

யாழ். மத்திய கல்லூரியை வடமாகாணத்தின் முதற்தர விளையாட்டுத்துறைப் பாடசாலையாகப் தரமுயர்த்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனமும் யாழ். கரப்பந்தாட்ட சம்மேளனமும் இணைந்து யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட வீரர்களுக்கான இருநாள் பயிற்சிநெறியை அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தின.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பணிப்பாளரும் பாடசாலைகள் கரப்பந்தாட்ட தலைவருமான நிஹால் பெர்ணான்டோ மேற்படி நடவடிக்கை தொடர்பாகப் பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடினார்.

இது குறித்து கல்வி அமைச்சருடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.

இந்த வைபவத்தில் பிரதம விருந்தினராகக் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் , சிறப்பு விருந்தினர்களாக இலங்கை கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் அமைச்சர் டிலான் பெரேரா, பாடசாலைகள் கரப்பந்தாட்ட சங்கத் தலைவர் நிஹால் பெர்ணான்டோ, வடமாகாண விளையாட்டு கல்வித்துறைப் பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர். (50-16)

# இடம்பெயர்ந்தோருக்கான மே மாத உலர் உணவு விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட, 11.08.2006இன் பின்னர் இடம்பெயர்ந்த மக்களுக்கான மே மாதத்துக்கான உலர் உணவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அரிசி, மா, சீனி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவை இந்த நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

நிவாரணத்துக்கு விநியோகிக்கப்படும் பொருள்களின் அளவு வருமாறு:

| பொருள் | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் | 6 அங் | 7 அங் | 8 அங் | 9அங் |
| அரிசி (கிலோகிராம்) | 6.200 | 12.400 | 18.600 | 24.800 | 31.000 | 37.200 | 43.400 | 49.600 | 55.800 |
| மா (கிலோகிராம்) | 6.200 | 12.400 | 18.600 | 24.800 | 31.000 | 37.200 | 43.400 | 49.600 | 55.800 |
| பருப்பு (கிலோகிராம்) | 1.860 | 3.720 | 5.580 | 7.440 | 9.300 | 11.160 | 13.020 | 14.880 | 16.740 |
| சீனி (கிலோகிராம்) | 0.620 | 1.240 | 1.860 | 2.480 | 3.100 | 3.720 | 4.340 | 4.960 | 5.580 |
| எண்ணெய் (லீற்றர்) | 0.676 | 1.352 | 2.028 | 2.704 | 3.380 | 4.056 | 4.732 | 5.408 | 6.084 |

(50-224)

# துண்டி வேளாங்கண்ணி ஆலயம் கடுமையாகச் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 4


கொழும்புத்துறை துண்டிப் பகுதியில் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம் கடந்த கால யுத்தத்தினால் பெரிதும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

சேதமடைந்துள்ள இந்த ஆலயத்தில் புனரமைப்புக்கான ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை.

ஆலயத்தில் கூரைப் பகுதி மற்றும் சுவர்கள் என்பன முற்றாகச் சேதமடைந்து காணப்படுகின்றன.

எனினும் அங்கு வைக்கப்பட்டிருந்த வேளாங்கண்ணி மாதாவின் திருவுருவச் சிலை சேதமடையாமல் அப்படியே காணப்படுகின்றது.

அப்பகுதி மக்கள் அங்கு சென்று வழி[illegible] வருகின்றனர். (50-224)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி– மீசாலை

# அருள்மிகு ஸ்ரீ திருநீல்கண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார்

## புனராவர்த்தனப் பிரதிஷ்டா பஞ்சகுண்டபக்ஷ

# மஹா கும்பாபிஷேக விழா- 04.06.2010

காலம்: விகிர்தி வருஷம் வைகாசி
மாதம் 21ஆம் நாள்
04.06.2010 வெள்ளிக்கிழமை

நேரம்: அதிகாலை
05.50- 06.38 வரை
இடபலக்கினம்



### பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியாரின் ஆசியுரை



எங்கும் வியாப்பித்திருக்கின்ற இறைவன் ஆன்மாக்களது தியானாதிகளுக்குத் தாம் அகப்படுதல்வேண்டும் என்னும் பெருங்கருணையினாலே உருவத்திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமே ஆலயமாகும். ஆலயம் அமைத்தல், கும்பாபிஷேகம் செய்தல் முதலியன சிவதர்மமாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கையின் வடபால் தென்மராட்சிப் பகுதியிலே மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயம் தொன்மை வாய்ந்தது. இராஜகோபுரத்துடன் மிகப் பெரிய ஆலயமாகவும் விளங்குகின்றது. ஆலயத்தைப் புதுப்பித்தலாகிய சிவ தர்மத்தை ஊர்மக்கள் எல்லோரும் முன்னின்று செய்வது போற்றுதற்குரியது.

திருப்பணிகளுக்கு வாரி வழங்கியோர், தர்மகர்த்தா சபையினர், துரிதமாக அழகுறப் பணியாற்றிய அராலி க.கோபாலசிங்கம் குழுவினர், உடன் நின்று பணிசெய்தோர், வாகன உதவி செய்தோர் இன்னும் பல வகையிலும் உதவி செய்தோர் எல்லோரும் பாராட்டப்பட வேண்டியவகளாவர். எல்லோரும் சகல நலன்களும் பெற்று நல்வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல விநாயகப் பெரு மானின் நிறைந்த திருவருளை வழுத்தி அவன் தான் பணிந்து நல்லாசி கூறி அமைகின்றேன்.

கலாபூஷணம்
'ஸர்வேஜனா ஸுகினோ பவந்து' சி.சிதம்பரநாதக் குருக்கள்.

### விநாயகர் துதி

மண்ணுலகத் தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதலு டையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

### ஆசிச் செய்தி




சகல செல்வமும் பொழிந்து விளங்கும் மீசாலை வெள்ளைமாவடி என்னும் ஸ்தலத்தில் தம்மை வழிபடும் பக்த கோடிகளுக்கு நிறைந்த திருவருளை வாரி வழங்கிக்கொண்டு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருநீலகண்ட விநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் ஊர் மக்கள் ஒன்று கூடிப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷ கும்பாபிஷேக விழா இன்று [04.06.2010] வெள்ளிக்கிழமை சதய நட்சத்திர சுப முகூர்த்தத்தில் குருவருளும் திருவருளும் கைகூட பெருமக்களின் இறைபணியுடன் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகிறது.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இறைவனை வழிபாடு செய்து முத்தி இன்பம் பெற இயலும். இதனாலேயே நம் சமயத்தில் " கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்றும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று எமக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

பிரியா விநாயகர் நித்திய குருக்கள்
சிவஸ்ரீ.சி.கிருபாகரக் குருக்கள்.

### ஆலய நித்திய அர்ச்சகரின் வாழ்த்துரை



மாவடி விநாயகரின் அருள் கிருபையால் சுமார் அரை நூற்றாண்டு காலம் இறைவனை அர்ச்சிக்கும் பாக்கியம் எமது குடும்பத்தினருக்குக் கிடைத்துள்ளது. எமது தந்தையாரைத் தொடர்ந்து ஒரு தசாப்த காலமாக இவ்வாலய நித்திய பூசைகளை இறைவன் துணையோடு நடத்தும் பாக்கியம் பெற்றுள்ளேன்.

ஆலய தர்மகர்த்தா சபையினர், முகாமையாளர் சி.இராமலிங்கம் அவர்களது மேற்பார்வையில் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி எம்பெருமானுக்கு நிறைவான ஆலயத்தை நிர்மாணித்து வழங்கியுள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களில் இருந்து ஆலயச் சுற்றாடலைக் காப்பாற்றிய எம்பெருமானது அருட்கடாட்சத்தினை வியந்து வணங்குகின்றேன்.

மஹா கும்பாபிஷேகத்தைக் காண்பது எல்லோரது வாழ்விலும் முக்கிய புண்ணியப் பேறாகும். அதனாலேயே சம்பந்தர் "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" எனும் தேவா ரத்தை அருளியுள்ளார். இக்கும்பாபிஷேகத்துக்கு ஒன்று நின்று உழைத்த மாவடி விநாயகரின் பக்தர்கள் அனைவருக்கும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**பா.சிவலிங்கம் ஐயா,** நித்தியஅர்ச்சகர்.

### தென்மராட்சிப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் முடி எனத்திகழும் யாழ்.குடாநாட்டின் வளம் நிறை தென்மராட்சிப் பகுதியிலே எழில் கொஞ்சும் மீசாலைக் கிராமத்தின் மத்தியிலே அமைந்துள்ள திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் மஹா கும்பாபிஷேக நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அகமிக மகிழ்வெய்துகின்றேன்.

நாட்டில் யுத்தம் ஓய்ந்து சுமூகநிலை நிலவுகின்ற இக்கால கட்டத்திலே, பஞ்சமா பாதகச் செயல்களும், கடத்தல்களும் என அராஜகங்கள் நிறைந்துள்ளதுடன், பாவச் செயல்களிலும், கலாசாரச் சீரழிவுகளிலும் எம் இளம் சமுதாயத்தினர் ஈடுபடுகின்றனர். இந்நிலை மாறி நல்லதோர் சமுதாயம் எமது தேசத்திலே மலர்ந்திட இது போன்ற முழுமுதற் கடவுளாகிய விநாயகர் ஆலயங்கள் உதவவேண்டும். கும்பாபிஷேக நிகழ்வு இனிதே நடைபெறவும், இதன் மூலம் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் கடாட்சம் அனைவருக்கும் கிடைத்திடவும் பெருமானை வேண்டி நிற்பதுடன், இந்த நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினருக்கு எனது நன்றிகளையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்,**
பிரதேச செயலர், தென்மராட்சி.

### ஆலய வரலாறு



எமது தென்மராட்சிப் பிரதேச, மீசாலைப் பதியிலே உறையும் எல்லாம் வல்ல எம்பெருமான் திருநீலகண்ட வெள்ளை மாவடியான் கும்பாபிஷேகம் இன்று [04.06.2010] நிறைவேறுவது கண்டு என் மனம் அளவிலா ஆனந்தம் கொண்ட இச்சந்தர்ப்பத்தில் இச் செய்தியை எழுதுவது மகிழ்வளிக்கிறது.

எமது ஆலயமானது, சுமார் இருநூற்றைம்பது ஆண்டு காலத்துக்கு முற்பட்ட வரலாற்றைக்கொண்டது. டச்சுக்காரரின் வருகைக்கு முன்பே வணக்கத்தலமாக இருந்து வந்துள்ளது சரித் திரம். டச்சுக்காரரின் இந்துக் கோயில்கள் அழிப்புக் காலத்தே அடியார்கள் எம்பெருமானை அவ்விடத்தே நின்ற வெள்ளை மாவடியில் புதைத்து, மறைத்து வைத்தனர். காலக்கிரமத்தில் அவ்வடியார்களும் இயற்கை எய்தினர்.

ஆங்கிலேயர் ஆட்சியும் தொடங்கியது. எம்பெருமான் மறைந்திருந்த 'குமரேசபுலம்' பிரதேசத்தே முத்தன் எனும் விவசாயி துப்பரவு செய்து, கொள்ளுக் கொத்தினான். அதன்போது ஒரு பெரிய திருநீலகண்டம் வெளிப்பட்டு துவாரம் ஒன்றின் வழியே சென்றது. இவ் விஷப்பிராணியை விடக்கூடாது என நினைத்து கொத்திய முத்தனின் கொத்து ஒரு கல்லில்பட்டது. உடனே அவ்விடத்தில் இருந்து இரத்தம் பெருகியது. திரு நீலகண்டத்தைக் காணவில்லை. திகைப் படைந்த முத்தன் வேலையை அப்படியே விட்டு அகன்றான். ஆகாரம் எதுவுமின்றி சயனித்த அவனின் கனவில் தோன்றிய எம்பெருமான் " வருத்தப்படாதே! அவ்விடத்திலே ஒரு லிங்கம் உண்டு. அதை எடுத்து அந்த மாவடியிலே வைத்துப் பூஜிப்பாயாக" என்று திருவாய் மலந்தருளினார். பயபக்தியாக, மெய்சிலிர்க்க எம்பெருமான் வாக்குப்படியே செயற்பட்ட முத்தன், குமரேச புல உரிமையாளர் முகமாலைகேயரத்தின முதலியாரிடம் நடந்தவற்றை விளக்கினான்.

கேயரத்தின முதலியாரும் அவ்விடம் வந்து ஒரு சிறுகோயிலை நிறுவி மூலமூர்த்தியாகிய எம்பெருமானை பிரதிஷ்டை செய்தார். அன்றைய எம்பெருமான் மூர்த்தியே இன்றும் 'திருநீலகண்ட வெள்ளை மாவடியான்' எனும் நாமத்தோடு மெய்யன்போடு இறைஞ்சும் அடியார்க்கு அருட்கடாட்சம் பாலித்தவாறு அமர்ந்துள்ளான்.


எமது இவ்வாலயமானது எனது சேவையில் காணும் இரண்டாவது கும்பாபிஷேகம் இதுவாகும். 26.01.2010 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட எமது மூர்த்திகள் நாள் குறித்த இன்றைய [04.06.2010] கும்பாபிஷேக நன்நாளில் புனருத்தாரண வேலைகள் யாவும் செவ்வனே நிறைவேறி நிகழ்வானது சிறப்புறுவது எம்பெருமான் செயலன்றி வேறெதுவுமில்லை என்பது எனது கருத்தாகும்.

எமது ஆலயம் கும்பாபிஷேகம் காணும் இந்நன்நாளில் இக் கைங்காரியத்துக்கு உறுதுணை நின்று நிதியுதவி, பொருளுதவி, சரீரஉதவி, உகந்த ஆலோசனைகள் நல்கிய பெரியவர்கள் முற்கொண்டு- கிராமமக்கள், அடியார்கள், வர்த்தகர்கள் , குறிப்பாக வழிபடுவோர் சபையினர், புலம்பெயர்வாழ் எம்மக்கள் யாவர்க்கும் எமது பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாம் வல்ல திருநீலகண்டனின் அருட்கடாட்சம் அல்லலுறும் மக்களின் மீட்சிக்கும், இலங்கை வாழ் மக்களின் அமைதி வாழ்வுக்கும் மட்டுமன்றி உலகே பரந்து வாழும் உறவுகளுக்கும் கிடைக்க வேண்டி நிறைவு செய்கிறேன்.

**சின்னத்தம்பி இராமலிங்கம்** ஆலய முகாமையாளர்,
தர்மகர்த்தா சபை, திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம், மீசாலை.

### சிற்பாசாரியாரின் ஆசியுரை



இந்து ஆலயங்களை அமைப்பதற்கென வகுக்கப்பட்ட ஆகம விதிகளுக்கு அமைய மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில் இன்று சிறப்புடன் மிளிர்கின்றது.

இத்திருப்பணி சிறப்புற நிறைவுபெற திருப்பணிச் சபையினரின் விடாமுயற்சியும், ஈழ மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த மக்களது பெரும் பங்களிப்புமேயாகும். எனவே சகல மக்களுக்கும் வெள்ளை மாவடி விநாயகர் அருள் பாலிப்பாராக. மேலும் இவ்வாலயம் நிர்மாணப் பணியை எமது குழுவினரால் சிறப்புற செயற்பட ஆசீர்வதித்த விநாயகப் பெருமானுக்கு வணக்கத்தைத் தெரிவித்து எம்பெருமானின் இக் கும்பாபிஷேக பயனாய் எங்கும் சாந்தி , சமாதானமும், சுபீட்சமும் பெருக எம்பெருமானை வேண்டிக்கொண்டு நிறைவு செய்கிறேன்.

ஆலயசிற்பாசாரியார் **க.கோபாலசிங்கம்.**

### நாட்டுக்கும் மக்களுக்கும் அமைதியைத் தரவேண்டும்



சாவகச்சேரி மீசாலைப் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் திருநீலகண்ட வெள்ளைமாவடி விநாயகனுக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றோம். பல வரலாற்றுச் சிறப்புக்களைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் நீண்ட காலமாக எழுந்தருளியிருந்து அருள்புரியும் விநாயகப் பெருமானுக்கு நடைபெறும் கும்பாபிஷேகம் நாட்டுக்கும் நாட்டில் வாழும் மக்களுக்கும் அமைதியையும் சந்தோஷத்தையும் தருவதாகும். இவ்வாலயம் தென்மராட்சி மக்களின் தனித்துவமான ஆலயம். இங்கு நித்திய பூஜை, திருவிழாக்கள், அத்தோடு புராணபடனம், திருமுறை முற்றோதல் அனைத்து உயிர்களின் நலனுக்காக மகாயாகம் அனைத்தும் சிறப்பாக நடைபெறும் ஆலயம். ராஜகோபுரம் அழகிய கோயில் அமைப்பைக் கொண்ட ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேகத்தை அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் நிறைவான சிவாச்சாரியாரையும் ஆலய பரிபாலன சபையினரையும் இவ்வூர் மக்களையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். அனைவருக்கும் இறைவனுடைய ஆசி கிடைப்பதாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.

### வழிபடுவோர் சபைத் தலைவரின் வாழ்த்துரை



மாவடி விநாயகருக்கு இராஜகோபுரம், மணி மண்டபம் ஆகியன ஏற்கனவே அமைக்கப் பட்ட போதிலும் இவை அமைக்கப்பட்டதன் பின்னர் நடைபெறும் இக்கும்பாபிஷேகம் ஆலய வரலாற்றில் முக்கிய நிகழ்வாகும்.

இவ் ஆலயத்தை துரித கதியில் புனர்நிர்மாணம் செய்த அராலியூர் திரு.கந்தசாமி கோபாலசிங்கம் அவர்கள் பாராட்டுக்குரியவர். வழிபடுவோர் சபையினரது சேவையும் மாவடியான் அடியார்களது உதவிகளும் மேலும் சிறந்து இறையருள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**அ.கபிலாசபிள்ளை** தலைவர் - வழிபடுவோர் சபை,
அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, (தேசிய பாடசாலை).

### பாவ வினையறுக்கும் எங்கள் மாவடியான்



ஈழவள நாட்டிலே விநாயகரின் அருள் பாலிக்கும் இடங்களில் மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் முன்னிலையானது. அத்துடன் தென்மராட்சிப் பகுதியில் முதன்முதல் இராஜகோபுரத்துடன் அழகு செய்ய ஊரெங்கும் அடியவர்கள் துயிலெழுப்பி விநாயகனின் சிந்தையை நிலைநிறுத்தும் மங்கள நாதத்துடன் மிளிர்கின்றது.

இவ்வாலயத்தில் 12 ஆண்டுக்கொருமுறை கும்பாபிஷே கம் நடைபெறுவது உண்டு. இம்முறை மிகவும் சிறப்பாக வைகாசி மாதம் 21 ஆம் நாள் [04.06.2010] வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

**செ.மதியழகன்;**
கிராம சேவையாளர், மீசாலை கிழக்கு.

MULTI LAC
COLOUR BANK

**மாவடிப்பிள்ளையார்
அடியார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைவிடப்பட்ட 7,000 மோட்டார் சைக்கிள்களில் இதுவரை 350 மட்டுமே இனங்காணப்பட்டன

## ஏனையவற்றை அடையாளம் காட்டுமாறு அரச அதிபர் அறிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்4

கடந்த வருடம் வன்னிப் பகுதியில் இறுதியாக யுத்தம் நடைபெற்ற பகுதியில் இருந்து மீட்கப்பட்டு கிளிநொச்சி திருநகரில் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களை விரைவாக அடையாளம் காட்டுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

இரணைப்பாலை, மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் ஆகிய பகுதிகளில் பொதுமக்களால் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டு கிளிநொச்சி திருநகரில் வைக்கப்பட்டுள்ள சுமார் 7,000 மோட்டார்சைக்கிள்களில் இதுவரை 350 வரையானவையே அவற்றின் உரிமையாளர்களால் இனங்காணப்பட்டுள்ளன.

விரைவாக அவற்றை உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதால் இனங்காணப்படாத மோட்டார்சைக்கிள்களை அதன் உரிமையாளர்கள் உடனடியாக அடையாளம் காட்டுமாறு கோரப்பட்டுள்ளது.



இங்கு வேறுசில வாகனங்களும் 6500 இற்கும் மேற்பட்ட சைக்கிள்களும் உள்ளன. வாகனங்கள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் அதேவேளை, சைக்கிள்கள் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிகளுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (1-405)

## மன்னார் நீதிமன்ற நீதிவானாக பயாஸ் ரஸாக் பதவியேற்பு

மன்னார்,ஜூன் 4

மன்னார் நீதிமன்றுக்குப் புதிய நீதிவான் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்று முன்தினம் தனது முதல் அமர்வை நடத்தினார்

மன்னார் மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம் இரண்டும் ஒரே நீதிவானின் கீழ் இயங்கி வந்தவேளையில் தற்போது நீதிவான் நீதிமன்றிற்குப் புதிதாக ஜனாப் பயாஸ் ரஸாக் நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் மன்னார் நீதிமன்று இனிமேல் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளதாக மன்னார் நீதிமன்றின் பதிவாளர் கூறினார்.

இதன்படி காலை அமர்வுகள் மாவட்ட நீதிபதி அ.யூட்சன் முன்னிலையிலும் மாலை அமர்வுகள் நீதிவான், நீதிமன்ற நீதிவான் ஜனாப் பயாஸ் ரஸாக் முன்னிலையிலும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

விரைவில் மேலுமொரு நீதிமன்ற வளாகம் அமைக்கப்பட்ட பின்னர் இரு அமர்வுகளும் தனித்தனிக் கட்டங்களில் நடைபெறும்.




## கிளிநொச்சியில் கசிப்பு வைத்திருந்த மூவருக்கு அபராதம்

கிளிநொச்சி, ஜூன் 4

சட்டவிரோத கசிப்பு வைத்திருந்த மூவருக்கு கிளிநொச்சி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் கடந்த 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்குகளை விசாரித்த நீதிவான் பெ. சிவகுமார் கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபாவும் மற்றவருக்கு 10 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் முறையே ஆறு மாதம், மூன்று மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (50-207)

## இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருக்கும்

# வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி,ஜூன்4

வட்டக்கச்சி, இராமநாதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் மக்களை மீளக் குடியேற்றுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து அம்மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த முகாமிற்கு வெளியே வசித்து வந்தவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி மீளக்குடியேற்றப்பட்டனர். அதன் ஒரு மாதம் கடந்தும் முகாமில் உள்ள அப்பகுதி மக்கள் மீளக் குடியேற்றப்படாமல் முகாம்களிலேயே வசித்து வருகின்றனர்.

இதனால் அவர்களது காணிகள், வீடுகள் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றுவது தொடர்பில் அவர்களது மனங்களில் ஐயம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் ஆள்கள் இல்லாத வீடுகளில் திருடர்களும் தமது கைவரிசைகளை காட்ட ஆரம்பித்து விட்டனர்.

எனவே இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொண்டு விரைவாக மீள்குடியேற்றம் செய்ய உதவ வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர். (1-405)

## மன்னார் பிரதான பஸ் நிலையம் புதுப் பொலிவு பெறுகிறது

மன்னார்,ஜூன் 4

மன்னார் அரச பேருந்து நிலையம் தற்போது புதுப் பொலிவுபெற்று வருகின்றது. நீண்ட நாள்களுக்குப் பின்னர் இங்கு புது வண்ணம் பூசப்பட்டு, அறிவித்தல் பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

"சேர்வ் எக்ஸல்" சவக்காரத்தூள் நிறுவனம் இவ்வேளைகளைப் பொறுப்பேற்று செய்து வருகின்றது.

ஆயினும் மன்னார் பேருந்து நிலையத்தில் விளக்குகள் பொருத்தப்படாமையால் இருளில் மூழ்கிக் கிடப்பதோடு, பல்வேறு சமூக விரோதச் செயல்களும் நடைபெற்று வருவதாகப் பூகார் தெரிவிக்கப்படு கின்றது.




கிளிநொச்சி.மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற சதுரங்கப் பயிற்சிப் பட்டறையின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பயிற்சிப் பட்டறையின்போது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சதுரங்கப் பயிற்றுவிப்பாளர் எஸ்.திருச்செல்வம், யாழ்.மாவட்ட சதுரங்கச் சம்மேளனச் செயலாளர் என்.சோதிநாதன் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி வழங்குவதைப் படங்களில் காணலாம்.

*(படங்கள் : கிளிநொச்சிச் செய்தியாளர்)*

## கிளி.மத்திய கல்லூரியின் 8 அணிகள் மாகாண மட்ட போட்டிக்குத் தகுதி

வட்டக்கச்சி,ஜூன்4

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இருந்து கிளிநொச்சி மத்திய கல்லூரியின் எட்டு அணிகள் வட மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவாகியுள்ளன.

15 வயது பெண்கள், 19 வயது பெண்கள் சதுரங்க அணிகள் இரண்டும் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றும் 15 வயது ஆண்கள், 19 வயது ஆண்கள் சதுரங்க அணிகளும் 15வயது பெண்கள் வலைப்பந்தாட்ட அணியும் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்றும் 19 வயது ஆண்கள், 19 வயதுப் பெண்கள் கபடி அணிகளும் 19 வயது ஆண்கள் எல்லே அணியும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றும் வடமாகாணப் போட்டிகளில் பங்குபற்றத் தகுதி பெற்றுள்ளன.

இவ்வணிகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் நடைபெறவுள்ள வடமாகாணப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன. (1-405)

## கிளிநொச்சி மாவட்ட பெருவிளையாட்டு; 13 இடங்களைப் பெற்று பூநகரி ம.வி. முன்னணி

கிளிநொச்சி,ஜூன்4

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் 13 அணிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. பூநகரி ம.வி. முன்னிலையில் உள்ளது.

13 அணிகளில் ஐந்து முதலாம் இடங்களையும் ஒரு இரண்டாம் இடத்தையும் ஏழு மூன்றாம் இடங்களையும் பூநகரி ம.வி. தனதாக்கிக்கொண்டது.

அடுத்து எட்டு இடங்களைப் பெற்று கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கனகபுரம் ம.வி. கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆகியன முன்னிலை வகிக்கின்றன. பாடசாலைகள் பெற்ற இடங்கள் வருமாறு-

| பாடசாலை | முதலாம் இடம் | இரண்டாம் இடம் | மூன்றாம் இடம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பூநகரி ம.வி. | 05 | 01 | 07 | 13 |
| கனகபுரம் ம.வி. | 04 | 04 | - | 08 |
| கிளி.இந்துக் கல்லூரி | 04 | 03 | 01 | 08 |
| கிளி.மத்திய கல்லூரி | 02 | 03 | 03 | 08 |
| பளை மத்திய கல்லூரி | 02 | 01 | 02 | 05 |
| முழங்காவில் ம.வி. | 02 | - | 03 | 05 |
| பாரதி வித்தி | 01 | 02 | 01 | 04 |
| ஜெயபுரம் ம.வி, | - | 03 | 01 | 04 |
| கிளிநொச்சி ம.வி. | 03 | - | - | 03 |
| வேரவில் இந்து ம.வி. | 01 | 02 | - | 03 |
| முருகானந்த ம.வி. | - | 02 | 01 | 03 |
| இரணைதீவு றோ.க.த.க.பா. | - | 02 | - | 02 |
| அக்கராயன் ம.வி. | 01 | - | 01 | 02 |
| வலைப்பாடு றோ.க.த.க.பா. | - | - | 01 | 01 |

## கனகபுரம் மகா வித்தியாலயம் எட்டு போட்டிகளில் முதலிடம்

கிளிநொச்சி,ஜூன்4

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம் மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் எட்டு முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற குழு நிலைப் போட்டிகளிலேயே கனகபுரம் மகா வித்தியாலயம் 8 முதலிடங்களை வென்றுள்ளது.

வெற்றியீட்டிய அணிகள் விவரம் வருமாறு:

* பூப்பந்தாட்டம் - ஆண்கள், பெண்கள் ( முதலாம் இடம்)
* வலைப்பந்தாட்டம் - 19 வயதுப் பிரிவு ( முதலாம் இடம்)
* கரப்பந்தாட்டம் - 15 வயதுப்பிரிவு ஆண்கள் ( முதலாம் இடம்)
* பெண்கள் கிரிக்கெட் (முதலாம் இடம்)
* பெண்கள் எல்லே (முதலாம் இடம்)
* ஆண்கள் கபடி (முதலாம் இடம்)

இந்தக் குழுக்கள் இம்மாதம் நடைபெறவுள்ள மாகாணப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. (50-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெளியீடு: உதயன்-கல்விச்சுடர்

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தயார்படுத்தும் முன்னோடிப் பரீட்சை - 09

### வினாத்தாள் - I


நேரம் : 45 நிமிடங்கள்

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை தருக.**

✱ 1-37 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தரப்பட்டுள்ள மூன்று விடைகளிடையே தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

✱ முதல் உருவிற்குச் சமனான உருவைத் தெரிவுசெய்க.

01.



02.



✱ படத்துடன் மிகவும் நெருங்கிய சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

03. 1) மின்சாரம் - காற்று - வீடு
2) மின்சாரம் - காற்று - வியர்வை
3) காற்று - இரவு - மின்சாரம்



04.




1) மழை - அழகு - வெயில்
2) பெண் - மழை - நிழல்
3) வெயில் - மழை - பாதுகாப்பு

✱ கவிதையில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.


05. சூரியன் உதித்தது
இருள் விலகியது
ஒளி பரவியது
தாமரை ..............
1) வாடியது 2) மலர்ந்தது 3) உதிர்ந்தது

✱ 6ஆம், 7ஆம், 8ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.

06.



07.




08.




✱ 9ஆம், 10ஆம் வினாக்களில் கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

09.



10.



11. பின்வருவனவற்றில் ஒருவருடைய பற்களுக்கு உவமானமாகக் கூறக் கூடியது,
1) பஞ்சு போன்ற மென்மை. 2) முத்துப் போன்ற வெண்மை.
3) பால் போல இனிமை.

12. இணை பிரியாது ஒற்றுமையாக வாழும் இரு நண்பர்களின் நட்பை உணர்த்த மிகவும் பொருத்தமான உவமைத்தொடர்,
1) ஓடும் புளியம்பழமும் போல.
2) உயிரும் உடலும் போல.
3) தாமரை இலைமேல் நீர்த்துளி போல.

✱ □ × □ = 36 □ + 9 = ◇ ◇ - □ = ⊙ எனின்,

13. ◇ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
1) 6 2) 12 3) 15


14. □ + ⊙ + ◇ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது?
1) 30 2) 15 3) 52

✱ வெற்றிடத்திற்குப் பொருத்தமான நேரத்தைத் தெரிவுசெய்க.

15. 19 : 00 | 20 : 15 | 21 : 30 | 22 : 45 | ..........

1) 00 : 00 2) 12 : 00 3) 23 : 30

16.



✱ உருவில் தரப்பட்டுள்ள பெரிய சதுரத்தின் பரப்பளவு 25 சதுர சென்ரி மீற்றர்கள் ஆகும்.



17. நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர்?
1) 9 2) 6 3) 2

18. நிழற்றப்பட்ட பகுதி உருவிலிருந்து வெட்டி நீக்கப்பட்டால் எஞ்சிய உருவின் சுற்றளவு யாது?
1) 20 2) 25 3) 26

✱ வினாக்குறி (?) இடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான எண்களைத் தெரிவுசெய்க.

19.

| மேல் | கீழ் |
|---|---|
| 2 | 1, 1 |
| 25 | 3, 4 |
| 53 | 2, 7 |
| ? | 6, 5 |

1) 22 2) 41 3) 61


20.

| மேல் | கீழ் |
|---|---|
| 27 | 6, 9 |
| 36 | 12, 6 |
| 35 | 10, 7 |
| 33 | 6, ? |

1) 8 2) 11 3) 12


21. நிஸாம் என்ற மாணவன் A என்ற இடத்திலிருந்து கிழக்குத் திசை வழியாக 100m தூரம் நடந்து சென்று வலது பக்கமாகத் திரும்பி 100m தூரம் நடந்தபின்னர் மீண்டும் வலது பக்கமாக 100m தூரம் நடந்து B என்ற இடத்தைச் சென்றடைந்தான். நிஸாம் இப்போது மீண்டும் B என்ற இடத்திலிருந்து A என்ற இடத்தைச் சென்றடைய எவ்வளவு தூரம் நடக்க வேண்டும்?
1) 100m 2) 300m 3) 400m

22. உருவில் பொருள்களுடன் தொடர்புபட்ட செயல்கள் முறையே இடம் பெறும் விடையைத் தெரிவுசெய்க.



1) பார்த்தல், சீவுதல், வெட்டுதல்.
2) அணிதல், வாருதல், அரிதல்.
3) அணிதல், அரிதல், வாருதல்.

23. இக்கடிகார முகம் செங்கோண நேரத்தைக் காட்டு கின்றது. கடிகாரம் முகம் அடுத்த செங்கோண நேரத்தைக் காட்டும்போது நிமிட முள் கடிகார முகத்தை எத்தனை தடவைகள் சுற்றியிருக்கும்?
1) 6 2) 12 3) 3



✱ தரப்பட்டுள்ள பழங்களின் விலைகளை அவதானித்து 24ஆம், 25ஆம் வினாக்களின் விடைகளைத் தெரிவுசெய்க.



ரூபா 38 ரூபா 32 ரூபா 48

24. தோடம்பழம் ஒன்றின் விலையாக இருக்கக்கூடியது,
1) ரூ. 20.00 2) ரூ. 10.00 3) ரூ. 6.00

(13 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கு பிரிக்கப்பட்டதாலேயே யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாம்

## கிழக்கு முதல்வர் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஜூன் 4

''வடக்கிலிருந்து கிழக்கு பிரிக்கப்பட்டு கிழக்குமாகாணசபை உருவாக்கப்பட்டதன் காரணமாகவே 30 வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரமுடிந்தது. இதனால் மக்கள் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் வாழக்கூடிய சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை தொடர வேண்டுமென்பதே எனது விருப்பமாகும்''

- இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

முதலமைச்சர் சந்திர்காந்தன் துறைநீலாவணை கண்ணகை அம்மன் ஆலயத்திற்கு கடந்த திங்கட்கிழமை மாலை திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

இங்கு ஆலய நிர்வாகிகளிடம் உரையாடியபோதே - அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 30 வருடகால யுத்தத்தின் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்களை பலிகொடுத்து கணக்கிடமுடியாத உடைமைகளையும் இழந்திருக்கிறோம். இவ்வாறான சூழ்நிலை இனிமேலும் வராமல் பாதுகாக்கவேண்டியது நமது எல்லோரினதும் கடமையாகும்.

கடந்தகால பாதிப்புகளால் ஆலயங்களுக்கு மக்கள் வந்து சுதந்திரமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட முடியாமல் இருந்தது. இப்போது அந்த நிலை மாறியிருக்கிறது. கடந்த காலங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஆலயங்களின் தகவல்களை திரட்டிக்கொண்டிருக்கிறோம். அவை புனரமைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மக்களைத்தேடி மக்களின் காலடிக்கு வந்து மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அறிந்து ஆராய்ந்து தீர்வு காண்பதே எங்கள் பணியாக இருக்கிறது.

எனவே, எதிர்காலத்தில் கடந்தகாலங்களைப் போன்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தாது இன்றைய சூழலைப் போன்று சந்தோஷமாகவும், நிம்மதியாகவும், ஒற்றுமையாகவும் வாழ்கின்ற சூழலை உறுதிப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் முதலமைச்சர். (ளி)

# பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் புதிய கட்டடம் திறப்பு

மட்டக்களப்பு, ஜூன் 4

யுத்தத்தால் சேதமடைந்த களுவாஞ்சிக்குடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கென தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் அனுசரணையுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி நெக்டெப் திட்டத்தினூடாக 50 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

புதிய நிரந்தரக் கட்டடத்தின் திறப்பு விழா சங்கத் தலைவர் கே.ஜெகநாதன் தலைமையில் களுவாஞ்சிக்குடியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம், அருமை நாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மேற்படி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

(ளி)

# கல்முனை படகுத்துறைமுக கோரிக்கை இழுத்தடிப்பு

## மீனவர்கள் விசனம்

மட்டக்களப்பு, ஜூன் 4

கல்முனைப் பிரதேச ஆழ் கடல் மீனவர்களால் நீண்டகாலமாக விடுக்கப்பட்டு வரும் படகுத் துறைமுக கோரிக்கை தொடர்ந்து இழுத்தடிக்கப்பட்டே வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் இயந்திரப் படகுகள் மூலமான தொழில் முறை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இங்கு படகுத்துறைமுகமொன்று நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கை அவ்வப்போது விடுக்கப்பட்டு வருவதாகவும், இங்கு படகுத்துறைமுகம் நிறுவப்படும் என்ற வாக்குறுதிகளுடன் காலத்துக்குக் காலம் அதிகாரத்துக்கு வரும் ஒவ்வொரு அரசியல்வாதியாலும் சாய்ந்த மருதிலுள்ள இறங்குதுறை பிரதேசத்தில் பலமுறை அடிக்கல்கள் நடப்படுகின்றன எனவும், இதுவரை இத்திட்டம் நிறைவேற்றப்படாமலேயே இருந்து வருவதாகவும் இங்குள்ள மீனவர்களால் சுட்டிக் காட்டப்படுகிறது.

இங்கு நடப்பட்ட அடிக்கற்கள் பல மணலுக்குள் புதைந்து மாயமானதுபோல இங்குவரும் அரசியல்வாதிகளது வாக்குறுதிகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் விடுகின்றன எனவும், இப்பிராந்தி யத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் மீதான ஆர்வம் இதனால் தற்பொழுது குறைந்து கொண்டே வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலாளர்கள் எதிர்கொண்டு வரும் படகுத்துறைமுக வசதியற்ற பிரச்சினை இதுவரையிலும் தீர்க்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருவதானது தமக்கிடையே பல சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும், எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஆழ்கடல் மீன்பிடி வளம் எவருக்கும் பயனற்ற வகையில் கைவிடப்பட்டு விடலாம் என தாம் அஞ்சுகின்றனர் எனவும் இங்குள்ள மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நாட்டில் பெரும்பான்மை இன மீனவர்கள் பல்வேறு வசதிகளுடன் தமது மீன்பிடித் தொழிலை எவ்வித இடையூறுகளும் இன்றி செய்துவரும் வகையில் அரசால் நடவடிக்கை எடுக் கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், சிறுபான்மை இன மீனவர்கள் மீது பாரபட்சம் காட்டப்பட்டு வருவதை உணரக் கூடியதாக இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது. (ளி)

# மழை நீரை குடிதண்ணீராக மாற்றி மக்களுக்கு வழங்க நடவடிக்கை

## கிழக்கு மாகாணசபை ஏற்பாடு

மட்டக்களப்பு, ஜூன் 4

''இயற்கையாகக் கிடைக்கும் மழை நீர் சகல மக்களுக்கும் சுத்தமான குடிதண்ணீராகக் கிடைக்கக்கூடிய வகையிலான சகல நடவடிக்கைகளையும் கிழக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ளது. இதைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது பிரதேச மக்களின் கடமையாகும்.''

- இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் முதல்வர் எஸ்.சந்திரகாந்தன், கடந்த திங்கட்கிழமை அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் வேலைத் திட்டம் தொடர்பான கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்திற்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், மாவட்டத்திலுள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உயர்மட்ட அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நீர்வழங்கல், வடிகால் அமைப்புச் சபையின் கிழக்கு மாகாண பொது முகாமையாளர் எம்.ஏ.லத்திப், அம்பாறை மாவட்ட குடி தண்ணீர் வேலைத்திட்டம் பற்றி கூறியவை வருமாறு:-

''முதல் கட்டமாக 50 லட்சம் ரூபா கடன் உதவியுடன் இந்த மாவட்டத்தின் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக அவுஸ்திரேலிய அரசின் உதவி ஒரு கோடியே 5 லட்சம் ரூபா கிடைத்தது. இதன் மூலம் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. மூன்றாவது கட்டமாகக் கிடைத்த ஒரு கோடி ரூபாவில் தம்புலுவில் போன்ற விடுபட்ட பகுதிகளுக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

''தற்போது ஜப்பான் அரசிடமிருந்து கிடைத்த ஒரு கோடியே 2 லட்சம் ரூபா மூலம் திகவாப்பியா, தெய்யத்தக்கண்டி போன்ற பிரதேசங்கள் உட்பட சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு எல்லாம் சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்படும் என்றார்''. (ளி)

# ஊடகங்களூடாக வெளிப்படுத்தப்படும் குறைபாடுகள் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை

## பொதுமக்கள் விசனம்

அம்பாறை ஜூன் 4

பிரதேசங்களில் நிலவும் குறைபாடுகள் பற்றி ஊடகங்களில் வெளிக்கொணரப்படும் விடயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த முன்வருவதில்லை எனப் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் பலதரப்பட்ட பொதுவான குறைபாடுகள், பிரச்சினைகள் காணப்படுவது சம்பந்தமாக அடிக்கடி ஊடகங்கள் பல தகவல்களை வெளியிட்டு வருகின்றபோதிலும், அவற்றுள் மிகச் சொற்பமான விடயங்களே கவனத்தில் கொள்ளப்படுகின்றன எனவும் - பெரும்பாலான விடயங்கள் கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வருகின்றன எனவும் - இது தொடர்பாக சம்பந்தப் பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்து வதில்லை எனவும் - பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மிகவும் அத்தியாவசியமான உடனடியாக சீர்செய்யப்படவேண்டிய பிரச்சினைகள் பற்றி பலமுறை சுட்டிக் காட்டப்படுகின்ற போதிலும் அவற்றை தீர்த்து வைப்பதில் அக்கறை செலுத்தப்படாமல் காலங் கடத்தப்படுவதாகவும், சில சந்தர்ப்பங்களில் அவை தொடர்பாக நடவடிக்கைகள் மிகவும் மந்த கதியிலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்றும், தெரிவிக்கப்படுவதுடன், ஊடகங்களில் வெளிவரும் பொதுக்குறைபாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த முன் வர வேண்டும் எனவும் பொதுமக்கள் கோருகின்றனர். (ளி)




# காதி நீதிமன்றம், இணக்க சபைக்கு தனியான கட்டடங்கள் தேவை

அம்பாறை, ஜூன் 4

காதி நீதிமன்றம் மற்றும் இணக்க சபை நடவடிக்கைகளை எவ்வித இடையூறுகளுமின்றி சுதந்திரமாக மேற்கொள்ளும் பொருட்டு இதற்கென தனியான நீதிமன்றங்கள் பிரதேசரீதியாக நிர்மாணிக்கப்படவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

காதி நீதிமன்றம் மற்றும் இணக்க சபை நடவடிக்கைகள் யாவும் பாடசாலை போன்ற பொது இடங்களிலும், தனியார் கட்டடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இங்கு தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டிவரும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

போதிய இடவசதியின்மை, விடுமுறை கால வகுப்புகளுக்குவரும் மாணவர்களால் ஏற்படும் அசௌகரியங்கள், இளம் மாணவர்கள் நீதிமன்ற விடயங்களில் கவனம் செலுத்த முற்படுதல், வகுப்புக்களிலிருந்து வரும் சத்தம், அயல் வீடுகளிலிருக்கும் சிறு வர்கள், இளம் பெண்களுக்கான அசௌ கரியங்கள் போன்ற பல்வேறு இடையூறுகள் இங்கு ஏற்படுகின்றன. அத்துடன் உரிய நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதில் பல தடங்கல்களும் ஏற்படுகின்றன.

காதி நீதிமன்றம் மற்றும் மத்தியஸ்த (இணக்க) சபை ஆகிய இரண்டு விதமான நடவடிக்கைகளையும் சுதந்திரமாக மேற்கொள்ளத்தக்கதாக ஒவ்வொரு பிரதேசத்திற்குமென தனியான கட்டட வசதி ஏற்படுத்தப்பட்டு, அங்கு இருவேறு தினங்களில் கடமைகள் ஆற்றப்படுவதற்கு வசதி ஏற்படுத்தப்படவேண்டும் எனப் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டிக் கொள்கின்றனர்.

சில பிரதேசங்களில் எவ்வித பயன்பாடுகளுமின்றி சில அரச கட்டடங்கள் காணப்படுவதால் அவற்றிற்கு போதிய தளபாட வசதிகளை வழங்கி அங்கு காதி நீதிமன்ற மற்றும் மத்தியஸ்தர் சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேசத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும் எனவும் பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர். (ளி)

# கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய ஆலோசகர் நியமனத்துக்கு விண்ணப்பம் கோரல்

திருகோணமலை, ஜூன் 4

கிழக்குமாகாண வலயக்கல்வி அலுவலகங்களில் சேவைக்கால ஆசிரியர் ஆலோசர்களின் தற்போதைய வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் பாடரீதியாகவும், மொழிரீதியாகவும் இருக்கின்ற ஆசிரிய ஆலோசகர்களை நியமிப்பதற்கு தகுதி யானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆங்கிலம், தமிழ்மொழி, உடற்கல்வி, விவசாயம், முறைசாராக்கல்வி, அரபு, சிங்களம் (2ஆம் மொழி), வர்த்தகம், விசேடக் கல்வி, வாழ்க்கைத்தேர்ச்சி ஆகிய பாடங்களுக்கே விண்ணப்பங்கள் அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளனர். இலங்கை அதிபர் சேவை தரம் பெற்றவர்கள் ஆசிரியர் ஆலோசகர்களாக நியமிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது. கடமையாற்றும்போது ஆசிரியர் ஆலோசகர் ஒருவர் அதிபர் தரம் கிடைக்கப் பெற்றால் அவர் அதிபர் தரத்துக்கு உரிய கடமையொன்றுக்கு நியமிக்கப்படல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ளி)

# துறை நீலாவணை கிழக்கு, மேற்கு வீதிகள் முப்பது வருடங்களாக புனரமைக்கப்படாத நிலையில்

மட்டக்களப்பு மாவட்டவத்தின் துறைநீலாவணைப் பிரதேசத்தின் கிழக்கு, மேற்கு வீதிகள் கடந்த மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் இருக்கின்றன என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்கள் புனரமைக்கப்படும் கால கட்டத்தில் இவ்வீதி புனரமைக்கப்படாமல் இருந்து வருகின்றமை ஏன் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். துறைநீலாவணையில் உள்ள பாடசாலைகள், ஆலயங்கள், சுகாதார மத்திய நிலையம் முதலான இடங்களுக்குச் செல்லும் வீதிகளும் புனரமைக்கப்படாமல் உள்ளன. துறைநீலாவணை கிழக்கு, மேற்கு வீதிகளைப் புனரமைப்பது தொடர்பாக பல அரசியல்வாதிகளிடமும், அதிகாரிகளிடமும் கோரிக்கை முன்வைத்தும் இதுவரையில் நிறைவேற்றப்படவில்லையென கவலை தெரிவிப்பதோடு, அனைவரும் ஒன்றிணைந்து இவ்வீதிகளைத் திருத்தித் தரவேண்டும் என மக்கள் கோருகின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரவெட்டி தச்சன்தோப்பு சி

# மகாகும்பாபிஷேக சிற

## மகா கும்பாபிஷேக பிரதிஷ்டா ஆலய பிரதம குருக்களின் ஆசியுரை



**லம்போதரம் மஹாகாயம்**
**கஜகர்ணம் கஜாநநம்**
**கும்பாபிஷேக சித்தியர்த்தம்**
**தியாயேத் சிந்தாமணி விநாயகம்.**

எங்கும் வியாபித்து இருக்கும் இறைவனை மன ஒருமைப்பாட்டுடன் வழிபட்டு அருள் பெற உகந்த இடம் ஆலயமாகும். இந்தவகையில் சிந்தாமணி விநாயகர் ஆலயம் இப்பகுதி அடியவர்க்கெல்லாம் கலங்கரை விளக்காக திகழ்கிறது. வடமராட்சிப்பகுதியில் இன்றும் கந்தபுராண கலாசாரத்தை பின்பற்றும் ஆலயம் இது என்றால் மிகையாகாது. இப்பகுதி அடியவர்களின் ஆன்மீக சமூக சமய பண்பாட்டு வளர்ச்சிக்கு இத்தலம் பெரும் சேவையாற்றுகிறது.

ஆலயத்தின் மூலஸ்தானத்தில் இருந்து கோபுர வாசல்வரை கருங்கல் திருப்பணி வேலையும் வானுயர்ந்த பஞ்சதள இராஜகோபுரமும் கலை நுணுக்கமான சிற்ப வேலைகளும் இந்திய சிற்பக் கலைஞரின் திறமையான கைவண்ணத்தைக் காட்டுகிறது.

இவ்வாலயத்தின் மூர்த்தி, தல, தீர்த்த பெருமையை சொல்லிலோ எழுத்திலோ அளவிட அளவிட முடியாது.

வழிபடும் அடியவரின் இடர் களைந்து இன்பம் அளிக்கும் சிந்தாமணி விநாயகரின் அருட்கடாட்சம் அடியவரின் மனத்தில் ஆன்மீக உணர்வுகளையும், மன சாந்தியையும் தந்து எல்லா மக்களையும் மகிழ்வுடன் வாழவைக்கிறது.

வேண்டியவர்க்கு வேண்டும் வரம் தரும் சிந்தாமணி விநாயகரின் திருத்தலம், திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

அங்கும் இங்கும் எனாதபடி எங்கும் நிறைந்து இருக்கும் இறைவனை மந்திரம் கிரியை பாவனை பக்தி உணர்வுகள் என்பவற்றால் ஓரிடத்தில் நிலை நிறுத்தலாகிய மகா கும்பாபிஷேகம் செய்வதும் செய்விப்பதற்கு உறுதுணையாக இருப்பதும் பெரும் பூர்வபுண்ணியமாகும்.

இத்திருப்பணி வேலையை ஆரம்பித்த ஆலய நிர்வாகத்தினர் மற்றும் இப்பணிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த பல தொண்டர்கள், அடியவர்கள், மற்றும் பொருள் உதவி, நிதி உதவிகளை வாரி வழங்கிய (உள்நாட்டு,வெளிநாட்டு ) சிவதர்ம வள்ளல்கள் அனைவரும் போற்றத்தக்கவர்கள்.

"பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்" என சம்பந்தர் கூறும் சிறப்பினை உடைய இக்கும்பாபிஷேகத்தைத் தரிசித்து வணங்குவதினால் எல்லா அடியவர்க்கும் நிறைவான மங்களகரமான வாழ்க்கையும் எல்லாவித நன்மைகளும் கிடைக்க எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகரை வாழ்த்தி ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

***'கைப்போது மலர்தூவி கதைவித்துவானோர்கள்'***
***முப்போது முடிசாந்தி தொழுகின்ற முதல்வனை***
***அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி***
***எப்போதும் சிந்தாமணி விநாயகனை என் மனத்தில் வைத்தேனே.***

***சிவாகம கிரியாஜோதி பிரம்மஸ்ரீ பூரண சுதாகரக் குருக்கள்***
**(ஆலய பிரதம குருக்கள்)**

## ஆலயக்குருவின் வாழ்த்துச் செய்தி



கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகராலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மகாயாக திருக்குடத்திருமஞ்சன மகா கும்பாபிஷேகம் நடைபெறும் இப்புண்ணிய தினத்தில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

புதிதாக ஒரு கோயிலைக் கட்டுவதை விட முன்னர் கட்டப்பட்ட ஆலயங்களை உரிய காலத்தில் முறைப்படி பாலஸ்தாபனம் செய்து புனருத்தாரணம் செய்வதால் ஏற்படும் புண்ணியம் பல வகைகளிலும் சிறந்ததாகும். உலகியல் நாகரிக மேம்பாட்டில் பெருமளவு அக்கறை பூண்டு ஆன்மீக நெறி பற்றிச் சிந்திக்கும் நோக்கு அருகிவரும் இக்காலகட்டத்தில், எமதுஆலய புனரமைப்பு வேலைகளில் இன்றைய இளம் தலைமுறையினர் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவது எடுத்துக்காட்டானதோர் விடயமாகும். ஆலயங்கொண்டு அருள்பாலிக்கும் இறை மூர்த்தங்களைத் திருமேனி தீண்டிப்பூசிக்கும் பெரும்பேற்றினையொத்தது இத்திருத்தொண்டாகும். விநாயகரடியார்களே! இப்புண்ணிய கைங்கரியத்தில் தாங்களும் ஏதோவொரு வகையில் இணைந்து பங்குபற்றி மகா கும்பாபிஷேகத்தைக் கண்குளிரக்கண்டு பேரின்பப் பெருவாழ்வு பெற்றேகுமாறு வாழ்த்துகின்றேன்.

**ப.சச்சிதானந்தக்குருக்கள், ஆலயக்குருக்கள்.**

## தச்சன்தோப்புக் கிழவனும் நாங்களும்



தச்சன்தோப்பில் சிந்தாமணி விநாயகர் எனும் பெயருடன் நமக்கெல்லாம் அருள்பாலித்து வருபவரை தச்சன் தோட்டத்துக் கிழவன் என்று சொல்லுதலே எமது மரபு. பிள்ளையார் என்பதற்காகவும் திருமணம் பற்றிய பாரம்பரியக் கதைகள் இல்லாதபடியினாலும் அவரை நாம் இவ்வாறு அழைக்கும் மரபு வந்ததோ என்று நான் சிந்திப்பதுண்டு. கரவெட்டி மேற்கை பொறுத்தவரையில் அவரைக் கண்கண்ட தெய்வம் என்று குறிப்பிடுவதிலும் பார்க்க நம்முடன் உறவுள்ள ஒரு தெய்வமாக நமது சுக துக்கங்களை விசாரிப்பவராக நமக்கு ஆறுதல் தருபவராகவே நாம் அவரைப் பார்க்கின்றோம்.

இடைக்காலத்தில் கோயிலின் நிர்வாகப்பொறுப்பு யாருடையது என்பது பற்றி பெருத்த வாத விவாதங்கள், நீதிமன்ற விசாரணைகள் கூட நடந்துள்ளன. அதனால் எம்மில் பலர் அவரை ஒரு நிர்வாக வட்டத்தினுள் வைத்துப்பார்ப்பதை எக்காலத்திலும் விரும்பியதில்லை. தச்சந்தோப்புக்கிழவன் நமது வழிகாட்டி, நமது வழித்துணை. நான் எந்தக் கோயிலுக்குச் சென்றாலும் அக்கோயில் சந்நிதானத்தில் நிற்கும்பொழுதும் தச்சன்தோப்பு கிழவன் கண் முன் வந்து போகிறார்.

அவருக்கு மீண்டும் ஒரு முறை கும்பாபிஷேகம் நடப்பது என்பதை அறிந்து அதை கோயில் வாசலில் நின்று பார்த்து மகிழக்கூடிய நிலையிலே நான் இல்லை என்ற மன வருத்தத்துடன் இக்குறிப்பை அனுப்புகிறேன்.

"நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறைத்தீர்ப்பு". அவனருளாலே அவன் தாழ் வணங்கும்.

**கரவெட்டி பண்டிதர் க.பு.கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் மகன் சிவத்தம்பி.**



## திருத்தல வரலாறு

ஈழவள நாட்டில் இயற்கைவளம், செயற்கை வளம் ஆகியவை நிறைந்த எழில் மிகு யாழ்ப்பாணத்து வடமராட்சிப் பகுதியின் மத்தியில் விளங்குவது கரவெட்டிக்கிராமம். கற்றோரையும் பேரறிஞர்களையும் கொண்டு பெருமையுடன் விளங்கும் இக்கிராமத்து மக்களைக் காத்து மேன்மையுறச்செய்யும் ஆலயம்.

1856 ம் ஆண்டளவில் கரவெட்டியில் கொற்றர் பரமர் என்ற பெயருடன் விளங்கிய 'மடத்தில் ஞானியார்' என்ற அடியார் ஒருவரால், வேண்டுவார் வேண்டுவதையெல்லாம் ஈயும் வேழமுகன் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டதென்ற வரலாறுமுண்டு இன்றும் பழைய தீர்த்தக்கேணி ஞானியார் கேணி என்றே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தக்கேணியின் மேற்குப் பக்கத்திலேயே வைத்துப்பூசித்தார் என்பதும் ஐதீகங்கள்.

அடியார் ஒருவரின் கனவில் விநாயகப்பெருமான் தரிசனம் கொடுத்து தமக்கு ஓர் இருப்பிடம் அமைத்துத் தருமாறு கேட்டதற்கிணங்க,அவர் காசியிலிருந்து கொணர்ந்த விநாயக விக்கிரகத்தை, ஒரு சிறு குடில மைத்து பிரதிஸ்டை செய்தாரென்று அறிகின்றோம் மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்று சொல்வார்கள். ஆலயம் சிறிதாக இருந்தாலும மூர்த்தி அற்புதங்கள் பல நிகழ்த்தும் சக்தி கொண்டவராகவிருந்தார். விநாயகப்பெருமானின் அருளை வேண்டிப்பலர் இங்கு வருகை தந்தனர். நாளடைவில் கோயிலென்ற அந்தஸ்தை பெற்று அடியார்களைத் தன் பால் ஈர்த்தார் விநாயகப்பெருமான். சம்பந்தர் என்ற பெரியார் எடுத்த முயற்சியினால் பலர் பங்கேற்க முன்வந்தனர். அப்போது ஒரு குடும்பத்தைச்சேர்ந்தவர்களே தர்மகர்த்தாக்களாக இருந்து வந்தனர்.

பத்து வருடாந்த உற்சவங்களும் பகுதி பகுதியாக பத்து பகுதியினருக்கு வழங்கப்பட்டன. பின் 10 உற்சவகாரரும் பங்குபற்றும் பொதுச்சபை உருவாக்கப்பட்டது.

1956ம் ஆண்டு பொதுச்சபை கூடி தர்மகர்த்தாக்களை தெரிவுசெய்யும்முறை அமுல்ப்படுத்தப்பட்டது.

ஆலயத்தைப் பொதுவுடமை ஆக்கவேண்டும் என்ற எண்ணம் வலுவடைந்தது. இதை நிறைவேற்றும் பொருட்டு நீதிமன்றை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது.

நீதிமன்ற 1965ம் ஆண்டு சித்திரை மாதம் 24ம் திகதி தீர்ப்பின் பிரகாரம் 10 திருவிழா உபயகாரர்களும் ஒவ்வொரு தானீசரை தேர்ந்து 10பேர் கொண்ட தானீசர் சபை ஆலயத்தை பரிபாலனம் செய்ய வேண்டும் எனவும் வழிபடுவோருக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டும் என்பதற்காக பத்து தானீசரும் சேர்ந்து ஒரு வழிபடுவோரை பதினோராவது தானீசராக தெரிவு செய்யவும் விதி ஆக்கப்பட்டது. இத்தானீசர் சபைக்கே முழு அதிகாரமும் நீதிமன்றால் வழங்கப்பட்டது. 1965ம் ஆண்டுக்குப்பின் இது நடைமுறையிலுள்ளது குறிப்பிடத்தக்கது. தானீசர் சபையால் காலத்துக்குக்காலம் தெரிவு செய்யப்படும் தலைவர், செயலாளர், பொருளாளர், முகாமையாளர் ஆகியோர் பொறுப்பேற்று தம் கடமைகளை செய்துவருகின்றனர்.

மூலஸ்தானம் தொட்டு முகப்பு மண்டபம்வரை கருங்கல் திருப்பணியாக அமைக்கப்பட்டுள்ளது. வானுற ஓங்கிநிற்கும் கம்பீரமான இராஜகோபுரம்,அதற்கு முன்புறம் அமைக்கப்பட்டுள்ள கலையழகு மிக்க முகப்பு மண்டபத்தோடு இணைந்த வசந்த மண்டபம், மணிக்கூட்டுக்கோபுரம், பூங்காவன மண்டபம், தீர்த்த மண்டபத்தோடு இணைந்த தீர்த்தக்கேணி, வாகன சாலைகள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்ட பூரணமான ஆலயமாகத்திகழ்கின்றது.

அழகுற அமைக்கப்பட்ட சித்திரத்தேர், மஞ்சம், சப்பறம், கைலாய வாகனம், கலையழகு மிக்க வாகனங்கள் ஆகியவற்றிலெல்லாம் ஆரோகணித்தருளி சிந்தாமணி விநாயகப்பெருமானும், முருகப்பெருமானும் தரிசனம் தந்தருள்வது கண்கொள்ளாக்காட்சியாகவே அமைந்தஉள்ளது.

என்றும் நேரம் தவறாத ஆகமோத்தமான கிரியைகளுக்கும், சைவாசாரமான ஒழுங்கு முறைகளுக்கும் பெயர் பெற்ற திருத்தலமாக இது விளங்குகிறது. தினந்தோறும் மூன்று காலப் பூசைகள் குறித்த நேரத்தில் இடம்பெறுகின்றன.

ஆனிப்பௌர்ணமியைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு மகோற்சவம் நடைபெறுகின்றது. இக்காலப்பகுதியில்


### அர்ச்சுனா மில்
கொடிகாமம் வீதி,நெல்லியடி.
தரமான நெல், அரிசி வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

### வானதி அரைக்
கொடிகாமம் வீதி,
தரமான நெல், அரிசி
மொத்தமாகவும் சில்
பெற்றுக்கொள்ளக்கூடிய

### கலைவாணி
**கண்ணாடிக் களஞ்சியம்**
பிரதான வீதி, நெல்லியடி.
பலவிதமான அழகு சாதனப்பொருள்களையும்,
அன்பளிப்புப்பொருள்களையும்
பெற்றுக்கொள்ளவேண்டிய ஒரே இடம்.

### அமுத சுரபி
சம்பந்த கடை வீதி, கரவெட்டி..
சுவையான உணவுப் பண்டங்களை
உடனடியாகவும், சுவையான
உணவுப்பொருள்களும், ஐசிங் கேக்
போன்றனவும் ஓடருக்கும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்.

### ஈஸ்வரி அரைக்கும் ஆலை, லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்
சோனப்பு வீதி, கரவெட்டி.
தரமான நெல், அரிசி வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

### A.S.K Will Weld
கொடிகாமம் வீதி,
இரும்புப்பொருள்களையும்
பொருள்களையும் ஒட்டுவத
எல்லோரும் நாடவேண்
வீரசிங்கம் பரணீதரன்
கந்தப்பு விமலராசா:

### அபிராமி stores
பிரதான வீதி, நெல்லியடி.
சகலவிதமான கோயில்
அபஷேகப்பொருள்களையும்,மற்றும்
பலசரக்குப்பொருள்களையும்
பெற்றுக்கொள்ளவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

### மல்லிகா களஞ்சியம்
கரவெடி மத்தி, கரவெட்டி.
பலசரக்குப்பொருள்கள், மரக்கறிவகைகள்
யாவற்றையும் பெற்றுக்கொள்ளக்கூடிய
ஒரே இடம்.

### ஒளியருவி
வீடியோ &போட்டோ
கொடிகாமம் வீதி, அரசடி. தொ.பே: 021 2263132
மங்களகரமான நிகழ்வுகளின் வீடியோ, மற்றும்
நிழல்ப் படங்களையும் நவீன முறையில் படம்
பிடிக்க, பிரதிசெய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

### einfo Sy
கொடிகாமம், நெ
கணனித் திருத்தவேலை
சேவைகளை ஒரே
பெற்றுக்கொள்ளக்கூடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாமணி விநாயகர் ஆலய

# சிறப்பிதழ் 04.06.2010



## கும்பாபிஷேகம் ஏற்றருளும் தச்சை சிந்தாமணி விநாயகப்பெருமான்



வடமராட்சி, கரவெட்டிப்பதி வாசிகளின் கண்கண்ட தெய்வமான தச்சைச்சிந்தாமணி விநாயகப்பெருமான் வைகாசித்திங்கள் 21ம் நாள் (04.06.2010) சதய நட்சத்திரம் பொருந்திய புனிதம் மிகு வெள்ளிக்கிழமை புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் ஏற்றருள்கின்றார். மூலஸ்தானம் தொட்டு தரிசன மண்டபம் வரை தென்னிந்திய சிற்பக்கலைஞர்களால் திருப்பணியாக ஆக்கப்பட்ட திருக்கோயிலில் எம்பெருமான் சிந்தாமணியாராக வீற்றிருந்து அடியார் இடர்களைந்து அவர்களுக்கு நலமெலாம் வழங்கி வருகின்றார். வானுற ஓங்கி நிமிர்ந்து நிற்கும் எழில்மிகு பஞ்சதள இராஜகோபுரமும் மூலஸ்தானமும் பழைய விநாயகர் சந்நிதி , சுப்பிரமணியப்பெருமான் சந்நிதி, வைரவமூர்த்தி சந்நிதி, நவக்கிரக சந்நிதி, சபை அழகு மிகு வசந்த மண்டபம் என்பனவற்றின் மேலே முறைப்படி அமைக்கப்பட்ட ஸ்தூபிகள் திருக்கோயிலை ஒட்டி அமைந்துள்ளன. பூங்காவன மண்டபம், தீர்த்தக்கேணி, தீர்த்த மண்டபம் என்பன கொண்டு பூரண அமைப்புப்பெற்ற ஆலயமாக இவ்வாலயம் பல்லாண்டுகளாக விளங்கி வருகிறது. நேரந்தவறாத ஆகமோத்தமமான கிரியைகளுக்கு பக்தி பூர்வமான உற்சவங்களுக்கும் பெயர்பெற்ற இவ்வாலயத்தில் இவ்வாண்டு பங்குனித்திங்களில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகக்குறுகிய காலத்திலேயே (இரண்டரை மாதங்களில்) ஸ்தூலலிங்கமாகிய இராஜகோபுரம், ஸ்தூபிகள், மண்டபங்கள் சுற்றுச்சுவர்கள் என்பன வர்ணம் தீட்டப்பட்டு மண்டப மேற்கூரைகள், தளங்கள் என்பன திருத்தப்பட்டு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. நாம் எல்லோரும் மேற்படி கும்பாபிஷேகக் கிரியைகளைத் தரிசித்து சிந்தாமணி விநாயகப் பெருமான் திருவருள் பெற்றுயர்வோமாக.

**க.சிவகுருநாதன், முகாமையாளர்.**

ஆலயத்தையொட்டிய பகுதிகளெல்லாம் தெய்வீகப்பொலிவு பெற்றிருக்கும். வீண் பொழுதுபோக்குகளுக்கும் வேடிக்கைககளுக்கும் ஆலய நிர்வாகம் இடம் கொடுப்பதில்லை. இக்காலப்பகுதியில் தமிழகத்தையும், இந்த நாட்டையும் சேர்ந்த தமிழறிஞர்களும், சைவப பெரியார்களும் நிகழ்த்தும் சைவப்பிரசங்கங்கள் நடைபெறுவது வழக்கம். இவ்வகையில் திருமுருக கிருபானந்த வாரியார் கி.வ. ஜகநாதன், அ.ச.ஞானசம்பந்தன், சா.கணேசன் போன்றவர்களும் இந் நாட்டைச்சேர்ந்த பேரறிஞர்கள் ஏறக்குறைய எல்லோரும் இங்கே பேருரைகள் ஆற்றியுள்ளார்கள் இந்த ஆலயத்தை நிலைக்களனாகக் கொண்டு சைவப்பிரசங்க மரபும் அதனைக்கேட்கும் மரபும் செழித் தோங்கி வளர்ந்துள்ளது என்பது மிகையல்ல.

மேலும் கந்தசஷ்டி, விநாயக விரதம், திருவெம்பாவை, தைப்பூசம், சிவராத்திரி, கும்பாபிஷேக தினம், தீபத்திருநாள், கந்தபுராணப்படிப்பு போன்ற விசேட காலங்களில் விசேட பூசைகளும் உற்சவங்களும் இடம்பெறுகின்றன. குறிப்பாக விநாயக விரதகாலத்தில் பஞ்சமுக விநாயகப்பெருமான் வசந்த மண்டபத்தில் வீற்றிருந்து இலட்சார்ச்சனை ஏற்றருளும் காட்சி பக்தர்களை பரவசப்படுத்தும் மேலே கூறப பட்ட நித்திய, நைமித்திய கிரியைகளை இரு சிவாச்சாரியார்கள் ஆலய வளாகத்தில் தமக்கென ஆலய நிர்வாகம் அமைத்துத் தந்த வதிவிடங்களில் தங்கியிருந்து குறிப்பிட்ட நேரம் தவறாமலும் ஆகமோத்தமான மரபு வழுவாதும் நடத்திவருகின்றார்கள்.

கோயில் மீது பல பிரபந்தங்கள் பாடப்பெற்றுள்ளன சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன் கரவெட்டியைச்சேர்ந்த பண்டிதர் சின்னத்தம்பி அவர்கள் "சிந்தாமணி விநாயகர் பிள்ளைத்தமிழ்" என ஒரு பிரபந்தம் பாடத்தொடங்கி அது பூர்த்தியாகாத நிலையில் இறைவனடி சேர்ந் தார். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் "தச்சைச்சிலேடை வெண்பா" என்னும் அரிய நூல் ஆசிரியர் கணபதிப்பிள்ளை அவர் களால் பாடப்பெற்றது.

விநாயகப்பெருமான் பேரருளால் சித்திகள் பல பெற்ற மெய் யடியார்கள் வெளிநாடுகளிலிருந்தும் உள் ஊரிலிருந்தும் ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வருகின்றனர். கரவெட்டி மக்கள் மாத் திரமன்றி நாட்டின் நாலா புறங்களிலிருந்தும் அடியார்கள் ஆனை முகன் அருளை வேண்டி வருகை தருவதனை வருடாந்த உற்சவ காலங்களின் போது கண்ணாரக்காணலாம்.

பிரபல சட்ட நிபுணர்களால் வகுக்கப்பட்ட ஆலய விதிகள் புத்தி ஜீவிகளால் பாராட்டப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. "அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது" என்பார்கள் ஆனை முகனை வேண்டி அல்லல் அகற்றி ஆனந்தமாக வாழ்வோமாக.

## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



வடமராட்சி கரவெட்டி, தச்சன்தோப்பு ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேக பெருவிழா நடைபெற இறையருள் கிடைத்துள்ளது. இப்பிரதேசத்தில் கோயில்கொண்டு அருளாட்சி செய்துகொண்டிருக்கும் விநாயகப்பெருமான் வேண்டுவார்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கி மக்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றார்.

சமய ஒழுக்கமும், கல்வி அறிவும் நிறைந்து காணப்படும் இக்கிராமம் நீண்ட சைவ பாரம்பரியத்தையும் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்கிராம மக்களின் குலதெய்வமாக விளங்கி பல கல்விமான்களும், அறிஞர்களும் உருவாகுவதற்கு விநாயக்பெருமானின் பேரருள் கடாட்சமே காரணமாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாலயத்தின் கும்பாபிஷேக வைபவம் சிறப்பாக நடைபெற்று இப்பிரதேச மக்களின் வாழ்க்கை சிறப்புற எல்லாம் வல்ல விநாயக்பெருமானின் பாதக்கமலங்களை பணிந்து நிற்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சி.சத்தியசீலன், பிரதேச செயலர், கரவெட்டி.**

## அருளாசிச் செய்தி



கரவெட்டி தச்சன் தோப்பு பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சிந்தாமணி விநாயகனுக்கு இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். பழமையும், பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு சிந்தாமணி விநாயகனாக எழுந்தருளியுள்ளார். இவருக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் கும்பாபிஷேகம் நடைபெறுவது ஆலயத்திற்கும் ஊர்மக்களுக்கும் பெருமையைத் தருவதாகும்.

விநாயக வழிபாடு நம் சமயத்தில் தனித்துவமான வழிபாடாகும். வணங்குபவர்கள் எல்லோருக்கும் முத்தியையும், சித்தியையும் தருபவர். புனிதமான மனித வாழ்க்கையைப் பெற்ற நாம் இறைவனை வழிபாடு செய்து அன்பைப்பெறுவதும். இதனை உணர்த்தும் வகையில் ஆலயம் தொழுவதும் சாலவும் நன்று. என்றும் கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனும் ஆலய வழிபாட்டின் மகத்துவத்தை நமக்கு உணர்த்துகின்றன. இதனை உணர்த்தும் வகையில் கரவெட்டிப்பிரதேசத்தில் நிறைவான பல ஆலயங்கள் அமைந்திருப்பது சிறப்புடையதாகும். இவ்வூர் மக்கள் நீண்ட பக்தியுடன் திருமுறை ஓதுதல்.

புராணபடனம் செய்தல் போன்ற நற்காரியங்கள் செய்தவர்கள். இன்று நடைபெறும் கும்பாபிஷேகத்தை தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், நல்லை ஆதீனம்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



வளங்கள் அனைத்தும் ஒருங்கமையப்பெற்ற வடமராட்சியின் கண் விளங்கும் கரவெட்டியில் தச்சன்தோப்பு எனும் பழம்பெருமை மிகு கிராமத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிந்தாமணி விநாயகர் தனது கருணைப் பெருந்திறத்தினால் அடியார்களின் உள்ளக கோயில்களில் எல்லாம் உறைகின்றான். பல்லாண்டு காலமாய் தம்மைக் காத்து நின்று முழுமுதற் கடவுளாம் சிந்தாமணி விநாயகன் சீரும் சிறப்புமாய் கோயில்கொள்ளவேண்டுமெனும் பேராவலில் அவனடியார்கள் புனருத்தாபன வேலைகளை மேற்கொண்டு கும்பாபிஷேகம் செய்யத் திருவுளம் கொண்டுள்ளார்கள். வேழமுகத்து ஞானமுதல்வனாம் தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில கும்பாபிஷேக நிகழ்வுகள் சிறப்புற நிகழ்ந்திட எல்லாம்வல்ல எம்பெருமான் தாழ்பணிந்து, மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.**

## தச்சை சிந்தாமணி விநாயகர் பாதம் பணிவோம்



கரவை மண்ணில் காலத்தால் அழியாத அடையாளச் சின்னமாக அமைந்திருப்பது தச்சன்தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம். உலகமெங்கும் வாழும் கரவை மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பவர் தச்சை விநாயகர். அம்மண்ணில் மக்களின் வாழ்வியல் இக்கோயிலுடன் பின்னிப்பிணைந்தது.

காலம் காலமாக கரவை மக்கள் இக்கோயிலை கண்ணெனப்போற்றிப் பாதுகாத்து வருகின்றனர்.

அவர்களது வாழ்வியல் மேம்பட இக்கோயிலும் சீரோடும், சிறப்போடும் வளர்ந்து வந்தது. இன்று இந்நாட்டின் ஒரு சிறந்த சைவத்திருத்தலமாக உயர்ந்து நிற்கிறது.

ஞாலச்சக்கரத்தின் சுழற்சியில் எமது கலாசாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் பல கோயில்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் கால வெள்ளத்தின் காட்டாற்றில் அடித்துச்செல்லப்படாது இன்றுவரை புனிதமான சைவத் தமிழ் பாரம்பரியத்தை கட்டிக்காத்து வருவது தச்சை சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் சிறப்பம்சமாகும். ஊர் மக்களின் உள்ளார்ந்த உதவிகளுடன் இக்கோவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இன்றைய நாளில் ஊர்மக்கள் உவகையின் உப்பரிகையில் ஊர்வலம் போகின்றார்கள். இன்று விழாக்காணும் இவ்விநாயகர் திருத்தலம் பல்லாண்டு காலம் நீடித்து நிலைத்து நின்று இப்பிரதேச மக்களை ஆன்மீக நெறியில் வழி நடத்த இறைவன் பாதம் பணிந்து இறைஞ்சுகின்றேன்.

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**


அரைக்கும் ஆலை
...மம் வீதி,நெல்லியடி.
...நெல், அரிசி வகைகளை
...ாகவும் சில்லறையாகவும்
...ள்ளக்கூடிய ஒரே ஸ்தாபனம்.

சத்தியம் களஞ்சியம்
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
சகலவிதமான பலசரக்குப்பொருள்களையும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு இடம்.

...ll Welding Works
...ம் வீதி, நெல்லியடி.
...ள்களையும் மற்றும் உலோகப்
...ம் ஒட்டுவதற்கும் செய்வதற்கும்
...நாடவேண்டிய ஒரே இடம்.
...பரணீதரன் : 0775711147
...விமலராசா: 0776339102

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை
பிரதான வீதி, நெல்லியடி.
இடைத்தர, உயர்தர மாணவர்களுக்கான பாடப்
புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

தங்கம்சன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி.
சகல விதமான மின்
சாதனப்பொருள்களையும், இலத்திரனியல்
உபகரணங்களையும் பெற்றுக்கொள்ள
வேண்டிய ஒரே இடம்.

ஜேயசெந்தினி நகைமாடம்
நெல்லியடி.
எல்லா விதமான நகைகளையும் எல்லோரையும்
கவரக்கூடிய ரகங்களில் நகைகளைச் செய்து
கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்.

...o System
...மம், நெல்லியடி.
...ந்தவேலைகள், இணையச்
...ளை ஒரே இடத்தில்
...ள்ளக்கூடிய ஒரே இடம்.

தீபன் ஸ்ரோர்ஸ்
சம்பந்தர் கடையடி, கரவெட்டி.
சகலவிதமான பலசரக்குப்
பொருள்களும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்

நெல்லியடி சனசமூக நிலையம்
நெல்லியடி, கரவெட்டி.

பரமேஸ்வரன் ஸ்ரோர்ஸ்
கொடிகாமம் வீதி,
அரசடி.
சகலவிதமான பலசரக்குப்பொருள்களையும்
பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரேயொரு இடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**தருபவர்: வித்யா**

### மேடம்



குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். கைமாத்தாக வாங்கிய பணம் ஒன்றை திருப்பிக் கொடுப்பீர்கள். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். பெண்கள் விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். புதிய ஆடை, அலங்காரப் பொருட்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும்.

### இடபம்



சிலர் உங்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்கலாம். வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் வேலை செய்தாலும், பொறுப்போடு செய்வீர்கள். கணவன் மனைவி உறவில் அன்யோன்யம் அதிகரிக்கும். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள்.

### மிதுனம்



கவலைகள் நீங்கி தெம்பு, தைரியம் அதிகரிக்கும். சில வேலைகளுக்காக சிரமப்பட்டாலும், அதனால், ஆதாயம் பெறுவீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களிடம் யோசனை கேட்டு செயற் படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க வெளியூர் பயணம் செல்லலாம். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

### கடகம்



செலவுகளைக் குறைத்து சேமிப்பில் அக்கறை காட்ட வேண்டிய நாள். எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று கடைசி நேரத்தில் முடியாமல் போகலாம். மற்றவர்களுக்கு தெரியாத விடயம் ஒன்றை நீங்கள் சொல்லிக் கொடுப்பீர்கள். சிலர் மீது காரணம் இல்லாமல் கோபம் கொள்வீர்கள். காத்திருப்புகள், அலைக்கழிப்புகள் நேரும்.

### சிங்கம்



பரிசு, பாராட்டுக்களைப் பெறும் நாள். பெண்கள் தொடர்பான வழிகளில் கூடச் செலவுகளைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களிடம் கடனாக கொடுத்த பணத்தை அவசர செலவுகளுக்காக திரும்ப வாங்கலாம். மாணவர்களுக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் கிடைக்கலாம். சந்தோஷமான நாள்.

### கன்னி



உங்களின் செயற்பாடுகளை பற்றி உறவினர்கள் பெருமையாகப் பேசலாம். எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளும் கிடைக்கும். தந்திரமாக செயற்பட்டு எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பிறரை நம்பி சில வேலைகளை ஒப்படைக்க முடியாமல் நீங்களே செய்யலாம். கட்டண மிகுதிகளை செலுத்துவீர்கள்.

### துலாம்



உடல் உபாதைகளைத் தவிர்க்க உணவில் கவனமாக இருக்க வேண்டிய நாள். அயலார் உங்களுக்கு நல்ல யோசனை சொல்லலாம். குடும்ப உறுப்பினர்களின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். எதிர்பார்ப்பு ஒன்றில் ஏமாற்றம் அடையலாம். தந்தை வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம்.

### விருச்சிகம்



சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். அக்கறையில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களால் எரிச்சல் அடையலாம். வீண் வம்பு பேசி சிலரின் விரோதத்திற்கு ஆளாகலாம். மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். உங்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி உறவினர்கள் சிலர் ஆதாயம் பெற முற்படுவர். சம்பவங்கள் நடக்கலாம். சக்தி வழிபாடு சங்கடம் தீர்க்கும்.

### தனுசு



சிந்தித்துச் செயற்பட்டு சிறப்பு காணும் நாள். சந்திக்கும் நண்பர்களுக்காக செலவு செய்யலாம். எதிர்பாராத சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகள் உருவாகும். உறவினர் ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவிகள் கேட்கலாம். விருப்பமான உணவுகளைச் சாப்பிடுவீர்கள்.

### மகரம்



தொழில் ரீதியான விடயங்களில் தடுமாற்றங்கள், குழப்பங்களைச் சந்திக்கலாம். வெளியூர்களில் இருக்கும் ஒருவருடன் தொலைபேசியில் பேச முற்பட்டு அவர்கள் கிடைக்காமல் போகலாம். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். போட்டி, எதிர்ப்புகளால் மன அமைதி பாதிக்கப்படலாம். திடீர் செலவு நேரும்.

### கும்பம்



பணப்பற்றாக்குறை தீரும். பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எந்த, வேலையையும் பின்னர் செய்யலாம் என தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் உங்களின் சொல்கேட்டு நடந்து பெருமைப்படுத்துவர். சகாய விலையில் சில பொருட்களை வாங்குவீர்கள்.

### மீனம்



உறவினர்கள் சிலரின் யோசனை கேட்டு நடப்பதன் மூலம் ஆதாயம் பெறலாம். பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். சிக்கலில் இருக்கும் ஒருவருக்கு அவசர உதவி செய்ய நேரிடலாம். சில வேலைகளுக்காக மற்றொருவருடன் நீங்களும் சேர்ந்து அலையலாம். உங்களுக்கு பிடித்த விடயம் ஒன்று மற்றொருவருக்கு பிடிக்காமல் போகலாம்.

---

ஜனனம் 04.06.1980


அழிப்பு 31.05.2008

## முப்பதாவது (30) பிறந்தநாளும் இரண்டாம் (2) ஆண்டு நினைவுகளும்

## யோகரட்ணம் கீதன்

(JUNIOR EXECUTIVE, CEYLINCO INSURANCE)

JAFFNA & COLOMBO



யாழ். மண்ணில் தோன்றிய வைரம்-ஒன்று
வஞ்சகர் செயலால் வீழ்ந்து மடிந்தது-கொழும்பு மண்ணில்
அவ் வஞ்சகரால் உன் உடலையோ அழிக்க முடிந்தது இருப்பினும்
உன் உயிரையும், உணர்வுகளையும், நினைவுகளையும்
அவர்களால் அழிக்க முடியவில்லை.

அன்று நடந்தது உன் குடும்பமோ இன்றும் தனிக்குது
தந்தைக்கு தனயன்-இல்லை
தாய்க்கோ பெயர் சொல்ல தலை மகனாம் கீதன் இல்லை
தங்கையருக்கோ உயிருக்குயிரான அண்ணன்-இல்லை
இருப்பினும் உன் வீட்டிலேயே கண்ணாடி மாளிகையில் நீ உள்ளாய் எம்முடன்

உன் மரணமே உன்னைத் தெய்வமாக்கியது - ஆனால்
எம்மையோ நடைபிணங்களாக்கியது
இப் பார் உள்ளவரை உனக்காகவே
உன் உயிர் துடிப்புடனும், நினைவுகளுடனும்

"யோகீத்தா வாசம்",
18/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[99025]

காத்திருக்கும்
உன் குடும்ப உறவுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. அப்பிள் பழம் ஒன்றின் விலையாக இருக்கக்கூடியது,
1) ரூ. 10.00 2) ரூ. 15.00 3) ரூ. 20.00

✱ 26ஆம், 27ஆம் வினாக்களில் தரப்பட்ட தொடர்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.


26. கண்ணன் மிகவும் கெட்டிக்கார மாணவன். வகுப்பில் சகல பரீட்சைகளிலும் அவனே அதிக புள்ளிகளைப் பெறுவான். கண்ணனுக்குத் தெரியாத பொது அறிவு விடயங்களே கிடையாது. அவனை எவராலும் எதிலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் அவனது தம்பி கேட்ட வினாவுக்கு அவனால் பதில் கூறமுடியாமல் போய்விட்டது. இந்நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி,
1) ஆனைக்கும் அடி சறுக்கும்.
2) ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.
3) நிறைகுடம் தளம்பாது.

27. கிராமத்தில் உள்ள நீர்நிலைகள் வற்றிக் காணப்பட்டன. கால்நடைகள் உணவுதேடி அங்குமிங்கும் அலைந்தன. வயல்நிலங்கள் வெடித்து வரண்டு காணப்பட்டன. இந்நிகழ்வுக்குக் காரணமாக இருக்கக்கூடியது,
1) நீண்ட நாட்களாக மழைபெய்து வெள்ளம் வடிந்தமை.
2) நீண்ட நாட்களாக மழை பெய்யாமை.
3) மாரிகாலம் முடிந்து கோடை தொடங்கியமை.

28. A என்பவர் B இன் தாய் ஆவார். ஆனால், "B" A இன் மகள் அல்ல. அப்படியாயின், B இற்கும் A இற்கும் இடையிலான உறவு முறை யாது?
1) தந்தை - மகள் 2) தாய் - மகள்
3) தாய் - மகன்

✱ உருக்களை அவதானித்து பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

29. உரு A இல் உள்ளதுபோன்ற செவ்வக வடிவக் கடதாசி ஒன்றை அடையாளம் இடப்பட்ட புள்ளிக்கோட்டின் வழியாக மடித்துப்பின்னர் உரு B இல் அடையாளம் இடப்பட்ட பகுதியின் ஊடாக வெட்டும்போது கிடைக்கும் இரு உருக்களைக்கொண்ட விடையைத் தெரிவுசெய்க.




30. அருகில் தரப்பட்டுள்ள உரு சதுரவடிவக் கடதாசியை நான்காக மடித்துத் துவாரங்கள் இடப்பட்டுள்ளதைக் காட்டுகின்றது. இக்கடதாசியை மீண்டும் விரிக்கும்போது தோன்றும் உருவைத் தெரிவுசெய்க.




31. ரூபா 50 பெறுமதியான பணநோட்டுக்கள் உள்ள கட்டு ஒன்றில் 29609 தொடக்கம் 29629 வரையான தொடர் இலக்கங்களைக் கொண்ட பணநோட்டுக்கள் காணப்பட்டன. இக்கட்டில் காணப்படும் பணநோட்டுக்களின் மொத்தப் பெறுமதி யாது?
1) ரூ. 1,000 2) ரூ. 1,050 3) ரூ. 2,000

32. மாணவன் ஒருவன் கதைப்புத்தகம் ஒன்றில் 59-75 வரையான பக்கங்களை வாசித்தான். எனின், அவன் வாசித்த பக்கங்கள் எத்தனை?
1) 17 2) 16 3) 15

33. அஸ்லம் தனது தந்தை கொடுத்த பணத்தில் அரைவாசியைக் கொடுத்து பேனை ஒன்றை வாங்கினான். மிகுதிப் பணத்தின் அரைவாசியை யோகட் கப் ஒன்றை வாங்குவதற்காகச் செலவு செய்தான். இப்போது அஸ்லமிடம் ரூபா 15.00 எஞ்சியிருந்தது. ஆயின், அஸ்லமிற்கு அப்பா கொடுத்த பணம் எவ்வளவு?
1) ரூ. 60.00 2) ரூ. 120.00 3) ரூ. 200.00

✱ தந்தையினதும் மகனினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 54. மகன், மகள் ஆகியோரது வயதுகளின் கூட்டுத்தொகை 18. தந்தை, மகள், மகன் ஆகிய மூவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 60.

34. தந்தையின் வயது எத்தனை வருடங்கள்?
1) 45 2) 48 3) 42

35. மகனின் வயது எத்தனை வருடங்கள்?
1) 12 2) 6 3) 14

36. பிறந்ததின வைபவம் ஒன்றில் ஒன்பது பேர் கலந்துகொண்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவரோடு கைகுலுக்கிக்கொண்டனர். எனின், அங்கு எத்தனை கைகுலுக்கல்கள் இடம்பெற்றிருக்கும்?
1) 28 2) 9 3) 18


37. ஒரு வரிசையில் 10 கம்பங்கள் நடப்பட்டுள்ளன. அடுத்தடுத்து வரும் இரு கம்பங்களுக்கு இடையேயான தூரம் 15m ஆகும். முதலாவது கம்பத்திலிருந்து இறுதிக்கம்பம் வரையில் ஒருவர் நடந்துசென்றால் அவர் எத்தனை மீற்றர் தூரம் நடந்திருப்பார்?
1) 225 m 2) 150 m 3) 135 m

✱ 38-40 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

38. இது ஒரு வீட்டுப்பாவனைப் பொருள். முதலாம் எழுத்து கலையில் உண்டு; வலையில் இல்லை. இரண்டாம் எழுத்து திசையில் உண்டு; இசையில் இல்லை. மூன்றாம் எழுத்து மரையில் உண்டு; மறையில் இல்லை. இப் பொருள் யாது?
(.........................)

39. இது ஓர் ஈருடகவாழி. தனது சிறு பராயத்தில் கறுப்பு நிறமாகவும், வாலுடனும் காணப் படும். மழைகாலம் என்றால் இதற்குக் கொண்டாட்டம்தான். நன்றாக நீந்தத்தெரிந்தது. இங்கு குறிப்பிடப்படும் பிராணி எது?
(.........................)

40. ஆதில், நித்யன், லசித் ஆகிய மூன்று மாணவர்கள் மைதானம் ஒன்றில் A,B, C ஆகிய இடங்களைச் சென்றடைவதற்காகத் துவிச்சக்கரவண்டியில் பயணித்த விதத்தை கீழேயுள்ள வரைபடம் காட்டுகிறது. இந்த மூவருள் மைதானத்தில் குறைவான தூரம் பயணம் செய்தவர் யார்?
(.........................)




(நிறைவுற்றது)

## விடைகள்: முன்னோடிப் பரீட்சை இல.08, வினாத்தாள் II

01: நுளம்பும், சிங்கமும், 02. நீ, 03. உறுமும், 04. அரிசீயம், 05. துணிவு, 06. எழுந்து, 07.போனது சென்றது , 08. டெங்கு , மலேரியா , யானைக்கால் , சிக்கன்குனியா, 09. இங்கிதமாக கூறியது, 10. மூக்கு, தலை, 11. கிடக் கின்றான், 12. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும், 13. நாம் பிறருக்கு துன்பம் விளைவித்தல் கூடாது, 14.எங்கள் பாடசாலையில் நிறைய வளங்கள் உண்டு, 15. மிகக் கவனமாக வளர்த்தல், 16. உதவி செய்தல், 17. அகதி, 18. தபுதாரன், 19. Mosquito, 20.Birds, 21.உங்களுக்கு என்ன இரவுச்சாப்பாடு பிடிக்கும்?, எனக்கு இடியப்பம் பிடிக்கும். 22. மல, 23. பூக்கள், 24. 4, 25. 3, 26.2, 27. 4, 28. 1, 29. 2, 30. 2, 31. 4, 32. 4, 33. 3, 34. 1, 35.1, 36.மான், 37.கடற்குதிரை, 38. வரிக்குதிரை, 39. எருது, 40. குப்பைமேனி, 41. மஞ்சள், 42.வெண்ஊமத்தை, 43. ஆடாதோடை, 44. ரூபா 108, 45. 85 ரூபா 50 சதம், 46. 79 ரூபா, 47. 50, 48. B,D, 49. A, 50. 400, 51. 24, 52. 64cm, 53. 15 : 35, 54. 207, 55. 40, 56. 7/8, 57. 0.5, 58-63. வரை பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.


A.S.ஜௌபர், மட்/பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயம், ஓட்டமாவடி. தொ.பே.இல: 071-8077257

கல்விச்சுடர் சம்பந்தமான விமர்சனங்களுக்கும் தொடர்புகளுக்கும்....
உதயன் பணிமனை, இல.365, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 071-8724054/071-4273035

# கல்விச்சாலைக் காட்சிகள்.....




திருநெல்வேலி சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் சிறார்களின் பன்முக ஆளுமைகளை விருத்தியாக்கும் விளையாட்டு மூலமான செயற்றிட்டம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.
இதில் முன்பள்ளிப் பணிப்பாளர் பா.தனபாலன் செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைப்பதையும் அதில் பங்குகொண்ட ஆசிரி[illegible] களையும் படத்தில் காணலாம். (16)



இருபாலை சீ.சீ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் பாடசாலை அதிபரால் வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு ஆலயங்களின் திருக்காட்சிகள்.......





கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. திருவிழாவில் பஞ்சமுகப் பெருமான் தேருக்கு எழுந்தருவதையும் சுவாமி தேரில் ஆரோகணித்து வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நந்தன்)





ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பர்வதபத்தினி சமேத லிங்கேஸ்வரப் பெருமான் தேருக்கு எழுந்தருளும் காட்சியும் சுவாமி தேரில் ஆரோகணித்து வீதியுலா வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: 188)

# சட்டவிரோத குடியேற்றத்துக்கு உதவி புரிந்த இலங்கை நபர்

## அவுஸ்திரேலிய நீதிமன்றில் வழக்கு

சிட்னி, ஜூன் 4

அவுஸ்திரேலியாவுக்குள் வெளிநாட்டவரைக் கடத்திவருவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் மீது இலங்கையர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் கைது செய்யப்பட்டுள்ளார். 25 வயதான இந்த நபர் கடந்த வாரம் பேர்த் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவிருந்தார்.

அவுஸ்திரேலியாவுக்குள் 29 சட்டவிரோத குடியேற்றவாசிகள் கடத்திவரப்படுவதற்கு இந்தநபர் உதவி புரிந்தார் என்று பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த 2009 ஒக்ரோபர் மாதம் 22 ஆம் திகதி கிறிஸ்மஸ் தீவிலிருந்து சுமார் ஏழுகடல் மைல் தொலைவில் சட்டவிரோத குடியேற்றவாசிகளுடன் கண்டுபிடிக்கப்பட்ட படகில் இருந்த. சிப்பந்திகளில் இந்நபரும் ஒருவர் என்று கூறப்படுகின்றது.

ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட சட்டவிரோத நபர்கள் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கு இந்நபர் ஏற்பாடுசெய்தார் அல்லது அனுசரணை புரிந்தார் என்றவாறு இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இச்செயலானது அவுஸ்திரேலியாவின் 1958 ஆம் ஆண்டு குடியேற்ற சட்டத்தின் 23 ஆவது பிரிவுக்கு மாறானது. இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமானால் அந்நபருக்கு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். (ப)


**வீடு வாடகைக்குத் தேவை**

கச்சேரிக்கும் ஆனைப்பந்திக்கும் உட்பட்ட பிரதேசத்தில் 5 பேர் கொண்ட குடும்பத்துக்கு உடன் வீடு தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்
0776979607

**காணி விற்பனைக்கு**

இல. 43, அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, உடுவிலில் 8 பரப்பு வெறுங்காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவோ, தோட்டம் செய்யவோ உகந்தது.
தொடர்புக்கு : 0714102174 / 0771622770

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்.
றோயல் குளூக்கோஸ்
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


# மனிதப் பிறவி மகத்தானது




ஜீவான்மாக்கள் பூமியில் பிறவி எடுக்கும்போது எண்ணரிய பிறவிகளை எடுக்கின்றன. ஜீவான்மா, மனிதப்பிறவியை மாத்திரம் எடுக்கிறதெனக் கருதக்கூடாது. ஜீவான்மாக்கள் பிறவி எடுக்கும்போது புல், பூண்டு, புழு, மரம், பல்விருகம், பறவை, பாம்பு, கல், மனிதர், பேய், கணம், அசுரர், தேவர் போன்ற தாவர சங்கமப் பிறவிகளை எடுக்கின்றன.

இவற்றுள் மேலான பிறவி மனிதப்பிறவியேயென மனிதன் கூறுகிறான். ஏனைய உயிரினங்கள் என்ன கூறுகின்றன? இதனை மனிதனால் அறியவும் முடியவில்லை. உணரவும் முடியவில்லை. ஆன்மாக்கள் உலகில் பிறவி எடுக்கும்போது முன்வினைப் பயனுக்கேற்ப மும்மலத்தாக்கம் கூடுதலாக இருப்பின், உலக விடயங்களில் கூடிய கவனமும், ஈஸ்வரதாக்கம் கூடுதலாக இருப்பின் ஈஸ்வரபத விடயங்களின் கூடிய கவனமும் செலுத்தும். உலகவிடயம், ஈஸ்வர விடயம் இவ்விரண்டினுள் எதன் தாக்கம் கூடுதலாக ஆன்மாவைத் தாக்குகின்றதோ, ஆன்மா அதேபக்கம் சாருகிறது.

உலக விடயங்களில் ஆன்மா கூடுதலாக ஈடுபடும்பொழுது அவை பலவாகப் பெருகி விடுகின்றன. ஆன்மாவின் மனதில் ஊன்றிய உலக விடயங்கள் உறுதியான ஆணிவேராகி மிக மிக ஆழமாகிப்போய் விடுகின்றன. பசுமையான நிலத்தில் ஆணிவேரை ஆழமாகச் செலுத்தி உரம் பெற்று வளருகின்ற மரம், பக்கவேர்களையும் பரப்பி மேலும் மேலும் உரம் பெற்று வளரும்போது அதன் கொப்புகளை - கொம்புகளை வெட்ட வெட்ட அம்மரம் மேலும் மேலும் உரம் பெற்று வளருகின்றது. அசைக்க முடியாத பெருமரமாகின்றது.

அதேபோலவே மும்மலங்களினால் பிணைக்கப்பட்ட ஆன்மாவின் சிந்தனையில் - மனதில் உலகார்த்த சிந்தனையே உரம் பெற்று வளருகிறது. அசைக்க முடியாத உலகப் பற்றுள்ள ஆன்மாவாக அது அமைகிறது. விளங்குகிறது அவ்வான்மாவுக்கு ஆன்மார்த்த சிந்தனை - ஈஸ்வரத்தியானம் ஒருபோதுமே வராது. அதற்கு அங்கே இடமே கிடையாது. மனம் உலகார்த்த (லௌகீக) விடயங்களையும் ஆன்மார்த்த விடயங்களையும் ஒரே நேரத்தில் ஏககாலத்தில் நினைக்காது. நினைக்கவும் முடியாது. ஏதாவது ஒன்றை கைவிட்டே ஆக வேண்டும். உலகார்த்த விடயங்களில் மனம் ஈடுபடும் போது, ஆன்மீக விடயங்களில் ஈடுபட முடியாது. ஜீவாத்மாவின் மனதில் உலகார்த்த விடயம் பசுமரத்து வேர்போல வேரூன்றினால் அது உலகார்த்த விடயத்திலேயே தனது புலன்களைச் செலுத்தும். அப்போது ஈஸ்வர சிந்தனை ஏற்படாது. ஏற்பட வாய்ப்பில்லை. ஜீவான்மாவின் மனதில் ஈஸ்வர தியானம். ஈஸ்வர சிந்தனை வேரூன்றுமேயாகில் அவ்வான்மா லௌகீக விடயங்களில் ஈடுபடாது. ஜீவாத்மா தனது எண்ணத்தை எத்திசையில் திருப்புகின்றதோ அத்திசையே முன்னேற்றகரமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனப் பயிற்சி செய்பவர்களின் கவனத்துக்கு...

ஆர்.பிரியா
யோக போதனா ஆசிரியர்,
பிரிய யோகா பயிற்சி நிலையம்.

பகுதி - 7

''வாக்கும் மனமும் ஒன்றாயிருப்பதே
உண்மையான ஆன்மீக உணர்வு.''

**உத்தீதபத்மாசனம்**

செய்யும் முறை:



பத்மாசனத்தில் அமர்ந்து இரண்டு கைகளையும் பக்கவாட்டில் வைத்துப் பலமாகக் கைகளை ஊன்றிக்கொண்டு படத்தில் காட்டியபடி இரண்டு கைகளிலும் முழுப்பாரமும் தாங்கியபடி உடலை மேலே தூக்க வேண்டும். பத்மாசனம் போட முடியாதவர்கள் சாதாரண நிலையில் உட்கார்ந்து கொண்டு உடலை மேலே தூக்கலாம். இந்நிலையில் மூச்சுப்பிடிக்கக் கூடாது. சாதாரணமாகச் சுவாசித்தல் வேண்டும். கால் மூட்டுக்கள் மேல் நோக்கிச் செல்ல முயற்சிக்க வேண்டும்.

பயன்கள்:

தொந்தி கரையும், ஜீரண உறுப்புகள் நன்கு வேலை செய்யும், புஜம், தோள்பட்டை பலம்பெறும், அஜீரணம், மலச்சிக்கல் நீங்கும்.


இது நீரிழிவு நோய்க்கு சிறந்த ஆசனம். ஆஸ்த்மா நோய் உள்ளவர்களுக்கு நெஞ்சு விரிவடைந்து அதிகசுவாசம் இழுக்கம் தன்மை ஏற்படும். நெஞ்சுக்கூடு நீங்கும் பெண்களுக்கு மாதவிடாயின்போது ஏற்படும் வலிகள் நீங்கும்

''துன்ப நினைவுகள் தொடருமெனில்
சோகங்களும் தொடர்ந்துவரும்
வலிகளும் துக்கங்களும் மறக்கப்படாவிடில்
வாழ்க்கை சித்திரவதையாகிவிடும்.''

**ஜானுசீராசனம்**

செய்யும் முறை:

நேராக உட்கார்ந்து கொண்டு கால்களை அகலமாக முடிந்த அளவு விரித்து பின் வலது காலை மடக்கிக் குதிக்கால் ஆசனவாய்ப்பகுதியில் படும்படி வைக்க வேண்டும். இரு கைகளையும் குவித்த நிலையில் உயர்த்திக் கொண்டு நன்கு மூச்சை இழுத்து வைத்து மெதுவாக விட்டுவிட்டு குனிந்து இடது காலின் பெருவிரலைப் பிடிக்க வேண்டும். பின்பு தலையை முழங்காலில் முட்டச்செய்ய வேண்டும். பின் வலது காலை நீட்டி இடது காலை மடக்கி முன்போல் செய்ய வேண்டும்.



ஆசன நிலையில் 5 முதல் 15 வினாடி இருந்தால் போதும். ஒவ்வொரு காலையும் 3 முறை மடக்கிச் செய்தால் போதுமானது.

பயன்கள்:

வயிற்றுப்பாகம் நன்கு அழுத்தப்படுவதால் ஜீரணக் கருவிகள் புத்துணர்ச்சி அடைந்து நன்கு செயற்பட ஆரம்பிக்கும். சுவாசத்தை இழுத்துவிட நாம் பயிற்சி செய்வதால் நல்ல சுத்த இரத்தம் அடி வயிற்றுப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றது. விலாப்புறம் பலப்படும். அஜீரணம், வாயுத்தொந்தரவு நீங்கும். உடல் நல்ல இளக்கம் கொடுக்கும். நடுஉடல் பகுதி பலப்படும். வாதம், கீழ்வாதம் என்பன நீங்கும். பெருங்குடல், சிறுகுடல் இளக்கப்பட்டு நன்கு வேலைசெய்யும் வயிற்றுவலி நீங்கும். முதுகுவலி, இடுப்புவலி நீங்கும். அடிவயிறு இழுக்கப்பட்டுத் தொந்தி கரையும். கால்களின் அடிப்பாகமுள்ள நரம்புகள் இழுக்கப்பட்டு கால்கள் புத்துணர்ச்சி பெறுகின்றது.

''யார் எதைத் தேடுகிறாரோ அதை
அடைகிறார்.
பரம்பொருளைத் தேடிச் சென்றவர்
வெறும் பொருளை அடைவதில்லை.''

**பச்சிமோத்தாசனம்**

செய்யும் முறை:

விரிப்பில் மல்லார்ந்து படுக்கவும். இரு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கொள்ளவும். பின் இரு கைகளைத் தலைப்பக்கம் நீட்டிக் காதுகளுடன் ஒட்டியவாறு சுவாசத்தை உள்ளிழுத்து மெதுவாகக் கைகளையும், தலையையும் சேர்த்து உயர்த்தி சுவாசத்தை வெளியே விட்டவாறு குனியவும். முதல் கட்டமாக இரண்டு கால் பெரு விரல்களையும் எட்டிப்பிடிக்கவும். பின்பு தலை முழங்காலில் படும்வரை தலையை அமர்த்தி முட்டவும். இந்நிலையில் இருபது செக்கன்கள் இருந்து பின்பு கைகளை விட்டு பழையபடி மல்லார்ந்து படுக்கவும். தலை உடனே முழங்காலில் முட்ட வராது கொஞ்சம் கொஞ்சமாக முயற்சி செய்யவும். ஒவ்வொரு முறையும் சற்று இளைப்பாறி மீண்டும் செய்யவும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் 6 முதல் 12 தடவைகள் செய்யலாம்.




பயன்கள்:

வயிற்றுப்பகுதித் தசைகள் பலம்பெறும். நீரிழிவு நோய் முற்றிலும் நீங்கும். இது பைங்கிரியாஸ் எனும் கருவியை இயங்க வைப்பதால் இன்சுலினை அதிகப்படுத்தி இரத்தத்தில் உள்ள சக்கரைச் சத்தினை உடலுக்குள் செலுத்துகிறது. வயிறு பெருத்தவர்கள் இந்த ஆசனத்தை செய்வதனால் வயிற்றில் சுருக்கு விழுந்து வயிறு சிறுக்கிறது. வயிறு கல்லுப்போல் கெட்டிபடுகிறது. இளமை மேலிடும். பெண்கள் இவ்வாசனத்தையும், சர்வாங்காசனத்தையும் செய்து வந்தால் மாதவிடமாயின்போ உண்டாகும் இடுப்புவலி, வயிற்றுவலி, மலட்டுத்தன்னை முதலிய நீங்கும்.

*(இன்னும் வளரும்)*

இந்த ஆசனங்களை தகுந்த குருவிடம் பயின்ற பின் செய்வதே சாலச்சிறந்தது

# முல்லாவின் பேச்சு



முல்லாவை மேதை என்று எல்லோரும் அழைத்தனர். இது சிலருக்குப் பிடிக்கவில்லை. பிடிக்காத முல்லாவை, தம் கூட்டத்திற்கு வரவழைத்து ஏடாகூடமாகக் கேள்விகள் கேட்டு அவரை அவமானப்படுத்த நினைத்தனர்.

அவர்கள் முல்லாவிடம், தங்கள் கூட்டத்திற்கு வந்து அறிவுரை சொல்ல வேண்டும் என்று கோரினார். அவர்கள் எண்ணத்தை முல்லா தெரிந்து கொண்டார். என்றாலும் அவர்கள் கோரிக்கைக்குச் சம்மதித்தார்.

மறுநாள் அந்தக் கூட்டத்திற்கு முல்லா சென்றார். ஏதேனும் பேசி மாட்டிக் கொள்ளாமல் இருக்க நினைத்த முல்லா,''நண்பர்களே இன்று என்ன பேசப் போகிறேன் தெரியுமா?'' என்று கேட்டார்.

''கூட்டத்தினர், தெரியாது!'' என்றனர்.

'' நான் என்ன பேசப் போகிறேன் என்று கூடத் தெரிந்து கொள்ளாதவர்களிடம் நான் பேசுவதற்கு எந்தப் பயனும் இல்லை'' என்று சொல்லி கம்பீரமாகக் கூட்டத்திலிருந்து வெளியேறினார் முல்லா.

கூட்டத்தினர் விடாமல் இரண்டாம் முறை அவரைப் பேச அழைத்தனர். முல்லாவும் ஒப்புக் கொண்டு சென்றார்.

அதற்கு கூட்டத்தினர்,''தெரியும்!'' என்றனர்.

''நான் என்ன பேசப் போகிறேன் என்பது ஏற்கனவே உங்களுக்குத் தெரியும் என்பதால் அதையே திரும்பச் சொல்வது வெட்டிவேலை.''என்று சொல்லிவிட்டு சாமர்த்தியமாக முல்லா வெளியேறினார்.

இரண்டாம் முறையும் ஏமாந்த கூட்டத்தினர் மறுமுறை முல்லாவை அணுகி கடைசியாக ஒருமுறை பேசுமாறு அழைத்தனர். முல்லாவும் ஒப்புக் கொண்டார்.

வழக்கம் போல், '' நண்பர்களே, நான் இன்று என்ன பேசப் போகிறேன் தெரியுமா?'' என்று கேட்டார் முல்லா.

இப்போது கூட்டத்தில் ஒருவன் புத்திசாலித்தனமாகப் பதில் சொல்வதாக நினைத்துக் கொண்டு, ''பாதிப்பேருக்குத் தெரியும், பாதிப் பேருக்குத் தெரியாது'' என்றான்.

அதற்கு முல்லா,''ரொம்ப நல்லது தெரியாதவர்கள் தெரிந்தவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள். தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்லுங்கள். அது போதும். இதற்கு நான் எதற்கு?'' என்று சொல்லிவிட்டு வழக்கமான வெற்றியுடன் வெளியேறினார்.

முல்லாவை அவமானப்படுத்த நினைத்தவர்கள் நொ[illegible]

# அரசனா? ஆண்டவனா?

காந்தபுர நகரத்தில் ''ராஜா இருப்பதால் எல்லாம் சுபீட்சமாக நடக்கிறது; அவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது'' - இவ்வாறு சொல்லும் ராஜபக்தன் இருந்தான்.

அதே நேரத்தில் ''எல்லாம் முருகப் பெருமான் அருள்; அவன் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது'' - இவ்வாறு சொல்லும் கடவுள் பக்தன் இருந்தான்.

இவ்விருவரும் அடிக்கடி சண்டைபோட்டுக் கொள்ளுவார்கள்.

ராஜபக்தி பலன்தரும் என்பான் ஒருவன்.

கடவுள் பக்தி பலன்தரும் என்பான் மற்றவன். மாறுவேடத்தில் வந்த அரசன் இவர்கள் இருவர் சண்டையையும் கவனித்தார்.

கடவுள் பெரியவரா? தான் பெரியவரா இவ்வாறு சந்தேகம் அரசருக்கு எழுந்தது.



பூசணிக்காய் ஒன்றை எடுத்துக் குடைந்தார். அதற்குள் சில தங்கை நாணயங்களையும் வைரங்களையும் போட்டார். அதனைக் குடைந்தெடுத்த இடம் தெரியாமல் மூடியும் விட்டார். தம்மைப் புகழ்ந்த ராஜ பக்தனைக் கூப்பிட்டார். பரிசாகக் கொடுத்தார். ராஜ பக்தன் அரசரிடமிருந்து இத்தனை சிறிய பரிசா என்ற எரிச்சலுடன் பூசணிக்காயைக் கடைவீதியில் விற்று விட்டார்.

அதே வீதி வழியாகக் கடவுள் பக்தன் போனான். பூசணிக் காயைப் பார்த்தான். கடையிலிருந்து ஒன்றரை ரூபாய்க்கு விலைக்கு வாங்கினான். வீடு திரும்பினான்.

சிவனடியார்க்கு அன்னதானம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பூசணிக்காயைக் கறிக்காக நறுக்கச் சொன்னான்.

அதிலே பத்திருபது தங்க நாணயங்கள், சில வைரக் கற்கள்.

ஆச்சர்யம் தாங்கவில்லை கடவுள் பக்தன் அதனைக் கடவுள் தந்ததாக நினைத்துப் பத்திரப்படுத்தி வைத்தான்.

யார் பொருள் என்று தெரியவில்லை எனினும் அரசரிடம் முறையிட மறுநாள் அரசவைக்கும் போனான்.

மறுநாள் அரசர் ராஜ பக்தனை அழைத்துவர ஆள் அனுப்பினார்.

''உனக்கு ஒரு தங்கப் பூசணிக்காய் கொடுத்தேனே என்ன செய்தாய்?''

''சாதாரண பூசணிக்காய்! அதை ஒரு ரூபாய்க்கு விற்றேன்.''

ராஜா வாயை மூடிக் கொண்டார்.

''அரசே நேற்று நான் கடைவீதிக்குப் போனேன். அங்கே ஒரு பூசணிக்காய் வாங்கினேன். அதில் இருபது பவுண் நாணயங்களும் வைரக் கற்கள் பலவும் இருந்தன. அதுபற்றி தங்களிடம் முறையிடவே அவற்றோடு வந்திருக்கிறேன்.'' என்று மூட்டையை அரசர் முன் வைத்தான்.

''இதை நீயே வைத்துக்கொள். ஆண்டவன் அருள் மிகப்பெரிது. அரசன் அருள் பயனற்றது'' என்று அரசர் சொன்னார்.

''ராஜபக்தனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''இந்த நாட்டு மக்களை நான் அரசாட்சி செய்யவில்லை. ஆண்டவன் ஆட்சி செய்கிறான்'' என்று அரசன் சொல்லிவிட்டு, இருவருக்கும் உணவு படைத்து அனுப்பீனான்.

*(சொன்னவர்: அமரர் டி.என்.சுகி சுப்பிரமணியன்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**CALSDA - JAFFNA BRANCH CHANGE OF VENUE**

CUSTOMERS PLEASE NOTE
COLOMBO - ACADEMY OF LANGUAGE SKILLS AND DRAMATIC ART
CALSDA - JAFFNA BRANCH OFFICE
At No.25 Catedral Street, Jaffna
has been shifted to
No.17 Kachcheri Nallur Road
Chundikuli - Jaffna
From 18th June 2010

CONTACT NO - 021 320 6776




## மஹா கும்பாபிஷேகம்

இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை மட்டுநகர் திராய்மடு சடையப்பாபுரம் சிவலிங்க சித்திவிநாயகருக்கு காலை 8 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

**பிரதிஷ்டா பிரதமகுரு:**
சபரிதாசன் சபரிமலை குருசுவாமி
**பிரம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்**
(சிவதர்மசாஸ்த்தா ஆலய ஸ்த்தானிகர், உரும்பிராய்)

எல்லோரும் இன்புற்று வாழப் பிரார்த்திக்கும்
**சடையப்பா சுவாமி**
(கதிர்காம யாத்திரைகுருஜி)

## ஜாதிக சம்பத

ஜாதிக சம்பத Jathika Sampatha
சீட்டிழுப்பு இலக்கம் - 26
திகதி - 02.06.2010
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: V அதிர்ஷ்ட இலக்கம்: 10 வெற்றி இலக்கம்: 7 4 5 9 1

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | V 10 7 4 5 9 1 | ரூ. 10,631,080.00 | - |
| 1 பரிசு | 10 7 4 5 9 1 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 7 4 5 9 1 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 4 5 9 1 | ரூ. 10,000.00 | 25 |
| 4 பரிசு | 5 9 1 | ரூ. 1,000.00 | 256 |
| 5 பரிசு | 9 1 | ரூ. 50.00 | 2532 |
| 6 பரிசு | 1 | ரூ. 20.00 | 24215 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 7 4 5 9 | ரூ. 1,000.00 | 26 |
| 8 பரிசு | 7 4 5 | ரூ. 100.00 | 260 |
| 9 பரிசு | 7 4 | ரூ. 50.00 | 2544 |
| 10 பரிசு | V | ரூ. 20.00 | 10055 |
| 11 பரிசு | V 10 | ரூ. 100.00 | 1103 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,907,500.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ. 11,064,569.00

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஜூன் 4

நெல்லியடிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் மருத்துவ முகாம், குருதிக்கொடை, 'ஈ சொவ்ற்' நிறுவன அனுசரணையுடனான கணனி அறிவூட்டல், மக்களால் தவறவிடப்பட்ட தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு ஆகியன தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கான பிரதிகள் உடன் வழங்கப்படும்.

டெங்குநோய், போக்குவரத்து விதிமுறைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வு அறிவூட்டல், பாடசாலை சிறுவர்களுக்கான வினா-விடைப் போட்டி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆகிய் பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டப் போட்டி ஆகியன இடம்பெறவுள்ளன.

எனவே அனைத்து மக்களையும் மேற்படி நடமாடும் சேவையில் கலந்து கொள்ளுமாறு நெல்லியடிப் பிரிவுப் பொலிஸார் கேட்டுள்ளனர். (201)

# துண்டி வீதியில் பாலம் புனரமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜூன் 4

கொழும்புத்துறை துண்டி வீதியில் சேதமடைந்திருந்த பாலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

துண்டி வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு இந்தப் பாலம் சேதமடைந்து காணப்பட்டது.

அத்துடன் கடற்கரை வீதியில் சேதமடைந்திருந்த பாலங்களும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. (50-224)

# கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் நடைபெறும் என இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (50-6)

# சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன் 4

அளவெட்டி, பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (50-204)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 4

இருபாலை கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 16 தினங்கள் இடம்பெறும் இப்பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழா எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், தீர்த்தத் திருவிழா மறுநாள் சனிக்கிழமையும் இடம்பெறும். (50-204-236)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம், ஜூன் 4

கொழும்புத்துறை மேற்கு, வதிரிபீட விநாயகர் ஆலயத்தின் தேரடி வைரவருக்கான பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (50-204-224)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
25 ✱ 09 ✱ 1946



மறைவு
06 ✱ 05 ✱ 2010

**அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரன்**
(ஓய்வூதியர் - இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

மாதமொன்று மறைந்ததையா உன் வண்ணமுகம் கண்டு
பாரினிலே உமைப்பிரிந்து - நாம் படும் துயரம் நீ அறியாயோ?
மண்ணுலக வாழ்வு போதுமென்றா விண்ணுலகம் நோக்கி விரைந்து சென்றீர்
கண்மணியாய் நீ காத்திட்ட உன் மனைவி மக்கள் - எல்லோரும்
கதிகலங்கி நிற்கின்றோம் விதியின் செயலை எண்ணி எண்ணி .....
ஆனபோதும் உன் ஆத்மா ஈடேற்றம் வேண்டி
இறைஞ்சுகின்றோம் இறைவன் திருவடியை

கடந்த 06.05.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்ப தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (05.06.2010) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அந்நிகழ்வுகளில் கலந்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

(99035)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், [illegible]

## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 513
சீட்டிழுப்பு திகதி: 02.06.2010

வெற்றி எழுத்து: C வெற்றி இலக்கங்கள்: 05 20 31 49

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 14,977,531.20 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 04 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 216 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 383 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 100/- | 10191 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 50/- | 5795 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 146307 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 30/- | 23384 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 6,951,510.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர: 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 15,224,500.00

## முதலாம் ஆண்டு நினைவுகளில்

மண்ணீரப்பு
17 ✱ 01 ✱ 1949



விண்ணேற்பு
14 ✱ 06 ✱ 2009

**அமரர் வெற்றிவேலு சாந்தலிங்கம்**
திதி: 03.06.2010

எங்கள் குடும்ப குலவிளக்கே அன்பின் இருப்பிடமே!
அறிவின் பொக்கிசமே பார்போற்றும் நல்ல உத்தமரே!
எம்மையெல்லாம் கண்ணை இமை காப்பதுபோலக் காத்தவரே!
உங்களை கொடிய நோய்காவு கொண்டதுவோ
எங்களை ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடாகுமா?
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது உங்கள் நினைவு
உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டி நிற்கிறோம்.

ந.மு. 84, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
நி.மு. 3ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டி.

குடும்பத்தினர்.

(ச/568066)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2126 திகதி 02-06-2010

ஆங்கில எழுத்திற்கும்: B
வெற்றி எண்கள்: 13 15 25 61
போனஸ் இல: 56

ஜக்பொட் பரிசு ரூ. 21,024,925/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 179143 | 20/- | 3,582,860/- |
| 2 இல | 12836 | 100/- | 1,283,600/- |
| 3 இல | 264 | 1,000/- | 264,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7234 | 40/- | 289,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 481 | 1,000/- | 481,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,024,925/- | - |
| 1 இல + போனஸ் இல | 8518 | 100/- | 851,800/- |
| 2 இல + போனஸ் இல | 401 | 500/- | 200,500/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 370 | 200/- | 74,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,542,620/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 209289 | | 10,142,620/- |

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 201950923-3-20 |
| களுத்துறை | 201952642-6-23 |
| கம்பஹா | 201949899-0-45 |
| அம்பாந்தோட்டை | 201942662-0-17 |
| அனுராதபுரம் | 201956033-7-26 |
| கொழும்பு | 201944103-8-40 |
| கொழும்பு | 201960065-3-04 |
| கேகாலை | 201950587-8-38 |
| புத்தளம் | 201957887-1-22 |
| கண்டி | 201952381-3-48 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 21,514,275/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஜூன் 05 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'டாக்டர் ஹோம்ஸ்' வெற்றிக்கிண்ண கூடைப்பந்தாட்டம்; யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் சம்பியன் வென்றது!

வலி.வடக்கு, ஜூன்4

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அபிவிருத்திக் குழு 'டாக்டர் ஹோம்ஸ்' ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கிடையே நடத்திய கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப் பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை சம்பியனாகத் தெரிவு செய்யப் பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரியும், யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையும் மோதிக் கொண்டன.

போட்டியின் ஆட்டம் முழுவதிலும் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை அணியே ஆதிக்கம் செலுத்தியது.

முதல் பாதி ஆட்டம் நிறைவு பெறும் வேளையில் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை 28:13 புள்ளிகள் என்ற அடிப் படையில் முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காது மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ண மிருந்தன.இதனால் 17:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை 45:28 புள்ளிகள் என்ற அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூ ரியை வென்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

ஆட்டத்தின் சிறந்த வீராங்கனையாக திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை யைச் சேர்ந்த துஷாநந்தினி தெரிவு செய்யப்பட்டார். (எ-23-86)

# உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு, ஜூன்4

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை சனிக் கிழமை காலை 8.30 மணி முதல் கொக்கு வில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன. (6-86)

# கோக்குவில் இந்துவின் ருவேன்ரி - 20; யாழ்.மத்திய கல்லூரிக்கு இலகு வெற்றி

வலிவடக்கு, ஜூன்4

கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற் றாண்டு விழாவையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 8 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெற்ற போட்டி ஆட்ட மொன்றில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூ ரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி 15.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

குயின்ரன் புருசோத்தமன் தலா 13 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 4 ஓட்டங்களும் பெறப்பட்டன.

60 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 8.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ஜேம்ஸ்ஜக்சன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் விதுசனன் 18 ஓட்டங் களையும் பெற்றனர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யைச் சேர்ந்த தரணன் ஒரு ஓவர் பந்து வீசி ஒரு ஓட்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் விஷ்ணுபிரகாஸ் 4 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (6-86)

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ண ஆட்டம்; சென்றல் வி.க. இறுதிப் போட்டியில்!

வலி.வடக்கு, ஜூன்4

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற் காக ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங் களுக்கு இடையே நடத்தும் 30 ஓவர் களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டமொன் றில் யாழ்ப்பாணம் சென்றல் விளை யாட்டுக் கழகம் 74 ஓட்டங்களினால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதா னத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத் தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப் பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் 30 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

கபில்தேவ் ஏழு பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 70,ஜெசிந்தன் 39, சலிஸ்ரன் 35 ஓட்டங்களைப் பெற்றனர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலை யத்தைச் சேர்ந்த சுஜிதரன் 6 ஓவர்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் டுக்களையும்,கிருபவன், றொபேசன் தலா 5 ஓவர்கள் பந்து வீசி முறையே 30,39 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

205 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 28 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

உமாநாத் 26, சசிகரன் 22, கேதீஸ் 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரஜீவ்குமார் 6 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும்,

சுவாதீஸ், சலிஸ்ரன் தலா 5 ஓவர்கள் பந்து வீசி முறையே 15,28 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும்,

விமல்காந், ஜெபிந்தன் முறையே 16,32 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள். (86)

# யாழ்.மாவட்ட செயலகத்தின் கரப்பந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு, ஜூன்4

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங் கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங் களுக்கும் இடையே நடத்தும் பெண்களுக் கான கரப்பந்தாட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மோதவுள்ள அணி களின் விவரம் வருமாறு;

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி.

சாவகச்சேரி பிரதேச செயலக அணி எதிர் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.

நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

ஊர்காற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி

கோப்பாய், கரவெட்டி, வேலணை, தெல்லிப்பழை பிரதேச செயலக அணிகள் இரண்டாம் சுற்றில் இருந்து மோதவுள்ளன. (6-86)

# புத்தூர் விக்னேஸ்வரா வி.கவின் உதைபந்தாட்டம்; ஏழாலை ஞானமுருகன் வி.க. சம்பியன்!

வலி.வடக்கு, ஜூன்4

புத்தூர் விக்னேஸ்வரா விளையாட் டுக்கழகம் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்திய 9 பேர் பங்குபற்றிய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஏழாலை மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் சம்பியனா கியது.

விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உரும்பிராய் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் ஞானமுருகன் விளை யாட்டுக் கழகம் தனது திறமையைப் பயன் படுத்தி இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்ட நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணி களுக்கும் பெரும் சவாலான ஆட்டமாகக் காணப்பட்டது. இரு அணிகளும் கோல் கள் பெற வேண்டும் என்ற துடிப்புடன் விளையாடிய போதிலும் இரு அணிகளினது முயற்சிகளும் கைகூடாத நிலையில் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 02:00 என்ற கோல் கணக்கில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனாகி யது. (6-86)

## சாதனை வீரன் தினேஷ்

வலி.வடக்கு, ஜூன்4



யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடை பெற்ற 21 வய துக்குட்பட்ட ஆண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் 800 மீற்றர், ஆயிரத்து 500 மீற்றர், 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டி களில் பங்கு கொண்டு சம்பியன் வென்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி வீரன் மாயன் தினேஷ் தனது கல்லூரிப் பயிற்றுவிப்பாளர் க.சசிகுமாரு டன் காணப்படுகிறார். (50-86)




# யாழ்.மாவட்ட செயலக ஹொக்கிப் போட்டிகள் நாளை இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில்

வலி.வடக்கு, ஜூன்4

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு பிரதேச செயல கங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவு களுக்கு இடையே நடத்தும் ஆண்களுக் கான ஹொக்கிப் போட்டிகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இளவாலை புனித ஹென்றியர சர் கல்லூரி மைதானத்தில் மோதவுள்ள அணிகளின்விவரம் வருமாறு;

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் சங்கானை பிரதேச செயலக அணி.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் கோப்பாய் பிரதேச செயலக அணி.

உடுவில் பிரதேச செயலக அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி.

நல்லூரி பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி.

இப்போட்டியில் மோதவுள்ள பெண் கள் அணிகளின் விவரம் வருமாறு,

தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் சங்கானைப் பிரதேச செயலக அணி.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டி பிரதேச செயலக அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து உடுவில் பிரதேச செயலக அணி மோதவுள்ளது. (6-86)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக் விளையாட்டுப் பிரிவு பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிய போது .....

(படங்கள் : நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்தவுக்கு எதிராக வரும் 8ஆம் திகதி சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பழ.நெடுமாறன் அறிவிப்பு

சென்னை,ஜூன்4

இந்திய அரசின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் 8 ஆம் திகதி இந்தியா வருவதைக் கண்டித்து சென்னையில் இலங்கைத் தூதரகத்திற்கு முன்பாக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்று வெளிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -


இலங்கையில் கடந்த ஆண்டு ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஈவிரக்கமின்றிப் படுகொலை செய்யப்பட்டனர். இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷ், ஜூன் 8ஆம் திகதி மத்திய அரசின் அழைப்பின் பேரில் இந்தியா வரவிருக்கிறார்.

அயர்லாந்தின் தலைநகரமான டப்ளினில் கூடிய சர்வதேச மக்கள் தீர்ப்பாயம் ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி என அறிவித்து, சர்வதேச நீதிமன்றின் முன் அவர் நிறுத்தப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. ஐ.நா. பேரவையின் பொதுச்செயலாளர் பான்கீமூன், இலங்கையில் நடந்த போர் குற்றங்கள் குறித்து ஐ.நா. விசாரணைக் குழு ஒன்றை அமைக்கப்போகிறார் என அறிவித்திருக்கிறார். பல்வேறு நாடுகளும் ராஜபக்ஷவின் போர்க்குற்றம் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என வற்புறுத்தி வருகின்றன.

உலக சமுதாயத்தால் போர்க் குற்றம் புரிந்தவர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு இரத்தினக் கம்பள வரவேற்பளிக்க விருப்பதை இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. இந்திய அரசின் இந்தச் செயல் தமிழக மக்களை பெரும் வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

தமிழர்களின் ஒட்டுமொத்த எதிர்ப்பை மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவிக்கும் வகையில் ஜூன் 8ஆம் திகதி காலை 10 மணிக்கு சென்னையில் இலங்கைத் தூதரகம் முன்பாக மாபெரும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும். அதே நாளில் அதேநேரத்தில் தமிழகமெங்கும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகள், அனைத்துத் தமிழ் அமைப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்த தோழர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களில் திரளாகக் கலந்துகொண்டு நமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவார்கள்.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





உலகத் தமிழர் பேரவையின் சார்பில் முள்ளிவாய்க்கால் மக்களுக்கான நினைவுக்கல் தூண்கள் நடும் விழா தஞ்சையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். படத்தில் வைகோ, நெடுமாறன், காசி ஆனந்தன் மற்றும் பிரமுகர்களைக் காணலாம்.

# கொழும்புப் படவிழாவில் பங்கேற்கும் ஹிந்தி நடிகர்களைப் புறக்கணிப்போம்

## தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை எச்சரிக்கை

மும்பை,ஜூன்4

இலங்கையில் நடைபெறும் திரைப்பட விழாவில் பங்கேற்கும் ஹிந்தி நடிகர், நடிகைகளைப் புறக்கணிப்போம் - என்று தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை எச்சரித்துள்ளது.

இலங்கையில் அமைதி திரும்பி விட்டது போல காட்டுவதற்காக கொழும் பில் 11 ஆவது சர்வதேச இந்தியத் திரைப்பட விருதுகள் வழங்கும் விழாவை நடத்துகிறது.

இந்த விழாவுக்கு தமிழர்கள் மத்தியில் எதிர்ப்புக் கிளம்பியதால் தென்னிந்திய திரைப்பட கலைஞர்கள் அனைவரும் ஒட்டுமொத்தமாக புறக்கணித்து விட்டனர்.

இதுதொடர்பாக தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை தீர்மானம் நிறைவேற்றியது. மேலும் வட இந்தியாவைச் சேர்ந்த திரைப்படக் கலைஞர்களும் கொழும்புத் திரைப்பட விழாவில் பங்கேற்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையின் தலைவர் எல். சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் நேற்றுமுன்தினம் மும்பையில் திரைப்பட மற்றும் ரி.வி. தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் மன்மோகன் ஷெட்டி, யாஷ் சோப்ரா, ரமேஷ் சிப்பி, கொழும்பு விழாவுக்கு ஏற்பாடு செய்திருக்கும் விஸ்கிராப்ட் நிர்வாகிகள் உள்ளிட்டோரை சந்தித்து, கொழும்புப் பட விழாவைப் புறக்கணிக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

பின்னர் எல்.சுரேஷ் கூறுகையில் -

கொழும்பு விருது விழாவில் பங்கேற்கும் பொலிவுட் நடிகர், நடிகைகளின் படங்களை தென்னிந்தியாவில் திரையிட அனுமதிக்க மாட்டோம். இந்தி டைரக்டர்கள், தொழில்நுட்ப கலைஞர்களுடன் நாங்கள் ஒத்துழைக்க மாட்டோம் என்று எச்சரிக்கை விடுத்தார்.

# முன்னணி ஹிந்தி சூப்பர் ஸ்டார்கள் கொழும்பு விழாவை புறக்கணிப்பு

சென்னை, ஜூன் 04

உலகெங்கும் உள்ள தமிழர்களின் தொடர் கோரிக்கைகள், போராட்டங் களுக்கு மதிப்பளித்து கொழும்பில் நேற்று ஆரம்பமாகிய சர்வதேச இந்திய திரைப்பட விழாவில் கலந்து கொள்வதில்லை என்று ஹிந்தித் திரையுலகின் அனைத்து சூப்பர் ஸ்டார் நடிகர் - நடிகைகளும் முடிவு செய்துள்ளமையால் கொழும்புப் பட விழா சோபையிழந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் நிலை நடிகர்கள் அனைவரும் பட விழாவைப் புறக்கணித்த நிலையில், விவேக் ஒபராய், லாரா தத்தா ஆகியோர் உள்ளிட்ட 2 ஆம் நிலை நடிகர், நடிகையர் மட்டுமே கொழும்பு சென்றுள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுதல் 3 நாட்களுக்கு ஐபா எனப்படும் சர்வதேச இந்திய திரைப்பட விழா நடைபெறுகிறது. இதில் அமிதாப் பச்சன் உள்ளிட்ட வட இந்திய திரையுலகப் பிரபலங்கள் அனைவரும் கலந்து கொள்வார்கள் என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து நாம் தமிழர் இயக்கம் களத்தில் இறங்கியது. கடந்த ஆண்டு ஈழத்தில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இலங்கை அரசு, தனது சுய லாபத்துக்காக இந்த விழாவை கொழும்பில் நடத்த அனுமதி கொடுத் துள்ளது. எனவே, இதில் இந்தியத் திரையு லகினர் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்று கோரி நாம் தமிழர் இயக்கம் போராட்டத்தில் குதித்தது.

மும்பையில் நூற்றுக்கணக்கான தமிழர்களைத் திரட்டி அமிதாப் பச்சன் வீட்டின் முன்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதேபோல உலகெங்குமுள்ள பல்வேறு தமிழர் அமைப்புகளும், பொலிவுட் நடிகர்கள் இதில் கலந்து கொள்ளக் கூடாது என்று கோரி மின்னஞ்சல்களை அனுப்பி வைத்தனர்.

தமிழகத்திலும் திரையுலகினர் யாரும் இதில் பங்கேற்கக்கூடாது என்ற கோரிக்கை வலுத்தது.

இதையடுத்து தமிழ்த் திரையுலகினர் மொத்தமாக, இதில் நாங்கள் யாரும் பங்கேற்க மாட்டோம். யாரும் பங்கேற்கவும் கூடாது. மீறிப் பங்கேற்றால் அவர்களது படங்கள் எதுவும் தென்னிந்தியாவில் திரையிடப்படமாட்டா என்று பகிரங்கமாக அறிவித்தனர்.

இதற்கு முன்பாகவே ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜீத் உள்ளிட்ட தமிழ்த் திரையுலக சூப்பர் ஸ்டார்கள் அனைவரும் பங்கேற்க மாட்டோம் எனத் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டனர். தங்களுக்கு அனுப்பப்பட்ட விழா அழைப்பிதழைப் பெறக் கூட இவர்கள் மறுத்து விட்டனர்.



இதேபோல தமிழர்கள் எங்களுக்கு முக்கியம் என்று கூறி, மலையாள சூப்பர் ஸ்டார் மம்முட்டி, மோகன்லால், தெலுங்கு சூப்பர் ஸ்டார் வெங்கடேஷ், கன்னட சூப்பர் ஸ்டார் புனீத் ராஜ்குமார் ஆகியோரும் அறிவித்து விட்டனர்.

தொடர் எதிர்ப்பால் உந்தப்பட்ட அமிதாப் பச்சன் தனது குடும்பத்தினர் யாரும் கொழும்பு செல்ல மாட்டார்கள் என்று கூறிவிட்டார்.

தற்போதைய நிலைவரப்படி அமிதாப் பச்சன், அபிஷேக் பச்சன், ஐஸ்வர்யா ராய், ஷாருக்கான் ஆகியோர் கொழும்புப் பட விழாவுக்குச் செல்ல மாட்டார்கள் என்பது உறுதியாகியுள்ளது.

விவேக் ஒபராய், லாரா தத்தா ஆகியோர் உள்ளிட்ட ஒரு சில 2 ஆம் நிலை நடிகர், நடிகையர் மட்டுமே இந்த விழாவுக் குச் சென்றுள்ளனர்.

மொத்த சூப்பர் ஸ்டார்களும் விழாவுக்குப் போகாதமையால் கொழும்புப் பட விழா களையிழந்துள் ளது.

தமிழ்நாட்டிலிருந்து எழுந்த சிறிய அளவிலான எதிர்ப்பு உல கெங்கும் உள்ள தமிழர்களிடம் பரவி, இந் தியாவின் முக்கிய திரையுலகமான பொலி வுட்டைப் புரட்டி முடக்கிப் போட்டிருப்ப தைப் பார்த்து இலங்கையும் அதிர்ச்சி அடைந்துள்ளதாம்.

ஆனால், கொழும்புப் பட விழாவில் இந்தியத் திரையுலகினர் கலந்துகொண்டால் தமிழகத்தில் மட்டுமல்லாமல், உலகெங்கும் உள்ள குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஈழத் தமிழர்களை முழுமையாக பகைத்துக் கொள்ள நேரிடும்.

அது தங்களது படங்களுக்கு பெரும் அடியாக அமையும் என கருதியதால்தான் பொலிவுட் நடிகர், நடிகையர் கொழும்பு விழாவுக்குப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்தனர் எனக் கூறப்படுகிறது.

**இந்தியச் செய்திகள்**

# ஈழத் தமிழர்கள் மறுவாழ்வுக்காக இலங்கை - இந்தியக் கூட்டமைப்பு

## புதுடில்லி வரும் மஹிந்தவிடம் வலியுறுத்தக் கோருகிறது 'நாம்' அமைப்பு

சென்னை,ஜூன்4

இலங்கையில் தமிழர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளைச் செயற்படுத்த இந்திய - இலங்கைக் கூட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் - என்று 'நாம்' அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சென்னையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அந்த அமைப்பின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை முன்மொழிந்து 'நாம்' அமைப்பின் நிறுவுநர் ஜெகத் கஸ்பார் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தனித் தமிழ் ஈழமே நிரந்தரத் தீர்வாகும். எனினும் அதற்கு முன்பாக போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்கான பணிகள் நடைபெற வேண்டியவை மிக அவசியமாகும்.

இதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட அமைப்பொன்று உடனடியாகத் தேவைப்படுகிறது. எனவே, இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக இந்திய - இலங்கைக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும்.

இந்தக் கூட்டமைப்பில் இரு நாடுகளின் முக்கிய அமைச்சர்கள், தமிழக முதல்வர் கருணாநிதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சமயத் தலைவர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தொழில், வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறலாம்.

இதுகுறித்து இம்மாதம் 8 ஆம் திகதி இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்த வேண்டும்.

இதனைப் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி ஆகியோரிடம் தனது பிறந்த நாள் கோரிக்கையாக முதல்வர் கருணாநிதி வலியுறுத்த வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

தீர்மானத்தை ஆதரித்து விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் பேசியவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தை விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்க உலகின் ஒரு நாடு கூட முன்வரவில்லை. மாறாக பயங்கரவாதிகளுக்கு எதிரானப் போர் என்ற இலங்கை அர சின் நிலைப்பாட்டை ஆதரித்து, பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் இலங்கைக்கு ஆயுத - நிதி உதவிகளை அளித்தன.

இலங்கைத் தமிழர்களின் நியாயமான போராட்டத்துக்கு ஆதரவாக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளை ஒன்று திரட்டுவது என்பது மிகவும் கடினமான பணி.

- இப்படி திருமா எம்.பி. கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாபேயிடம் மீண்டும் பணிந்தது இந்தியா!




சிம்பாபேயில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் சிம்பாபே அணியிடம் மீண்டும் மண் கௌவியது இந்திய அணி.


சிம்பாபே - இந்திய அணிகள் மோதும் போட்டி நேற்று நடைபெற்ற போது, நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாபே அணித் தலைவர், இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

இதன்படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய தினேஷ்கார்த்திக் -முரளி விஜய் ஜோடி சுமாரான அடித்தளத்தை இட்டது. அணியின் ஓட்ட எண்ணிக்கை 58 ஆக இருந்த போது 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த தினேஷ் கார்த்திக் விக்கெட் காப்பாளரிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து சிறப்பாக தடுத்து விளையாடிக்கொண்டிருந்த முரளி விஜயும் விக்கெட் காப் பாளரால் 'ஸ்டம்ப்' செய்யப் பட்டுஆட்டமிழந்தார்.

தொடர்ந்து விராட் ஹோலி 18 ஓட்டங்களோடு நடையைக்கட்டினார். ஆரம்பத்தில் நல்ல ஓட்ட எண்ணிக்கையை எடுத்திருந்த போதும் அடுத்து வந்த வீரர்கள் சொதப்பியதால் இந்திய அணியால் 9 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்களை மாத்திரமே 50ஓவர்கள் நிறைவில் பெற முடிந்தது. ஒரு முனையில் சகலதுறை வீரர் ரவீந்திரஜ டேஜா பொறுப்பாக ஆடி 2 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 51 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் மிரட்டிய சிம்பாபே வீரர் லம்ப் 45 ஓட்டங் களை கொடுத்து3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

195 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற சுலப இலக்கை வெகு நிதானத்தோடு துரத்தத் தொடங்கியது சிம்பாபே அணி. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான மசகட்சாவும், ரெயிலரும் அரைச் சதம் அடித்து அணிக்குப் பலம் சேர்த்தனர். இந்த ஜோடி 128 ஓட்டங்களை இணைப் பாட்டமாகப் பெற்றுக் கொண்டது. அதன் பின்னர் ஓஜாவின் பந்துவீச்சில் ரெயில ரும்(74), ஜடேஜாவின் பந்து வீச்சில் மசகட்சாவும்(66) களத்தை விட்டு வெளி யேறினார். தொடர்ந்து வந்த வீரர்கள் பொறுப்புடன் துடுப்பெடுத்தாடியதால் 38.2 ஓவர்களிலேயே 3 விக்கெட்டை மாத்திரம் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்று இந்தியாவை மீண்டும் வீழ்த்தியது சிம்பாபே அணி. இந்திய அணி சார்பில் ரவீந்திர ஜடேஜா இரண்டு விக்கெட் டுக்களை வீழ்த்தினார்.

சிம்பாபே அணிவீரர் ரெயிலர் ஆட்ட நாயகன் விருதுபெற்றார்.



இந்த வெற்றியைத் தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை சிம்பாபே அணி தக்க வைத்துக் கொண்டுள்ளது. இதேவேளை அடுத்து இலங்கையுடன் நடக்கவிருக்கும் போட்டியில் 'போனஸ்' புள்ளிகளுடன் வென்றால் மாத்திரமே இறுதிப் போட்டியில் பங்கேற்க முடியும் என்ற இக்கட்டான நிலைக்குள் இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது. (எ)

# எல்லா வீரர்களும் சமமாக நடத்தப்படாமை குறித்து பாக். கிரிக்கெட் சபையைச் சாடுகிறது நாடாளுமன்றம்

லாகூர், ஜூன் 4

எல்லா வீரர்களையும் சமமாக நடத்தாமை குறித்து, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அந்நாட்டு நாடாளுமன்ற நிலைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர், பாகிஸ்தான் வீரர்களான முகமது யூசுப், யூனிஸ் கான் ஆகியோருக்கு காலவரையறையற்ற தடை யும், சொய்ப் மாலிக், ராணா நவிட் உல்- ஹசன் ஆகியோருக்கு ஓர் ஆண்டு காலத் தடையும், அப்ரிடி, அக்மல் சகோதரர்களுக்கு அபராதமும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சில தினங்களுக்கு முன்னர் சொய்ப் மாலிக் மீதான தடை நீக்கப்பட்டது.

இதற்கு பாகிஸ்தான் நாடாளுமன்ற நிலைக்குழு (விளையாட்டு) கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்ற நிலைக்குழுத் தலைவர் இக்பால் முகமது அலி கூறியவை வருமாறு:-

வீரர்கள் மீதான நடவடிக்கையில் கிரிக்கெட் சபை ஒரே மாதிரியான நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். வீரர்களுக்குத் தக்கபடி வெவ்வேறான விதிமுறைகள் கடைபிடிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சொய்ப் மாலிக் மீதான தடையை கிரிக்கெட் சபை நீக்கியிருக்கிறது. ஆனால், ராணா, யூனிஸ்கான் ஆகியோர் கடுமையாக நடத்தப்படுகின்றனர். ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான பாகிஸ்தான் அணியில் யூனிஸ்கான் சேர்க்கப்பட வேண்டும். அவர் பாகிஸ்தானின் சொத்துப் போன்றவர். அவர் மீதான வழக்கு தாமதப்படுத்தப்படுவது ஏன் என்பது தெரியவில்லை. ஆசியக் கிண்ணப் போட்டியில் யூனிஸ்கானைச் சேர்ப்பதற்கான - எங்களால் இயன்ற- முயற்சிகளை எடுப்போம்.''

-இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி வீரர்கள் தென்னாபிரிக்கா விமான நிலையத்தைச் சென்றடைந்தபோது...

# 'ரி-20', டெஸ்ட் போட்டிகளில் ஒரே நேரத்தில் ஆஸ்திரேலிய அணி விரைவில் விளையாடும்

## ஆஸி. கிரிக்கெட் சபை அதிகாரி தகவல்

''டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தருவாயில், ஆஸ்திரேலியா 'ருவென்ரி-20' அணி வேறு ஓர் இடத்தில் சர்வதேசப் போட்டியில் விளையாடும் காலம் விரைவில் வரும்.''

- இவ்வாறு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தலைமைச் செயல் அதிகாரி ஜேம்ஸ் சுதர்லேண்ட் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கிரிக்கெட் ஆஸ்திரேலியக் கருத்தரங்கில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''டெஸ்ட் மற்றும் 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டிகளுக்குத் தனித்தனியாக அணிகளைத் தெரிவு செய்யும் காலம் வெகு தொலைவில் இல்லை.

'' இளம் வீரர்கள் பலரும் 'ருவென்ரி-20' போட்டியில் சிறப்புப் பெற்று, தேசிய அணியின் அழைப் புக்காகக் காத்திருப்பதை இனிமேலும் நாம் கண்டும் காணாமல் இருக்க முடியாது'' - என்றார்.

## விளையாட்டு அரங்குகளில்

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் நடால் உள்ளே; செரீனா வெளியே!



பரிஸ், ஜூன் 4

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில் நடைபெற்ற காலிறுதி யாட்டம் ஒன்றில், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் போராடித் தோல்வியடைந் தார். அதே வேளை, ஆண்கள் ஒற்றையரில் ஸ்பெயின் வீரரான ரபெல் நடால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் 'பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ்' தொடர் நடைபெற்று வருகிது.

இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் காலிறுதியாட்டம் ஒன்றில், உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், தரவரிசையில் 7ஆவது இடத்திலுள்ள ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசரைச் சந்தித்தார்.

இதன் முதல் செற்றை ஸ்டோசர் 6-2 என்ற கணக்கில் மிகச் சுலபமாகக் கைப்பற்றினார். பின்னர் எழுச்சி கண்ட செரீனா, 'டை-பிரேக்கர்' வரை நீடித்த 2ஆவது செற்றை 7-6 என்ற கணக்கில் தன்வசப் படுத்தினார்.

பின்னர் நடந்த வெற்றியாளரை நிர்ணயிக்கும் 3ஆவது செற்றில் அபாரமாக ஆடிய ஸ்டோசர் 8-6 என்ற புள்ளிக்கணக்கில் செரீனாவை வெற்றிகொண்டார்.



இறுதியில் ஸ்டோசர் 6-2, 6-7, 8-6 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான காலிறுதியாட்டத்தில் செர்பியாவின் ஜெலீனா ஜோன்கோவிச், கஜகஸ் தானின் யரோஸ்லாவா ஷிவேதோவாவை எதிர்கொண்டார். இதில் அபாரமாக ஆடிய ஜோன்கோவிச் 7-5, 6-4 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறு திக்கு முன்னேறினார்.

ஆண்களுக்கான காலிறுதியாட்டம் ஒன்றில் தரவரிசையில் 2ஆவது இடத்திலுள்ள ஸ்பெயின் வீரரான ரபெல் நடால், சக நாட்டு வீரரான நிகோலஸ் அல்மெக்ரோவைச் சந்தித்தார். இதில், 7-6, 7-6, 6-4 என்ற நேர் செற் கணக்கில் நடால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதேவேளை, ஆண்கள் பிரிவில் நடைபெற்ற கலப்பு இரட்டையர் காலிறுதியாட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், சிம்பாப்வேயின் காரா பிளாக் ஜோடி, கஜகஸ்தானின் யரோஸ்லாவா ஷிவேதோவா, ஆஸ்திரியாவின் ஜூலியன் நோவல் ஜோடியைச் சந்தித்தது.

இதில் பயஸ் ஜோடி 3-6, 7-6, 7-10 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

# தம்பிக்கு இடமில்லாத அணியில் நானும் விளையாட மாட்டேன்

## -மெக்சிக்கோ வீரர் ஜியோவானி அதிரடி முடிவு -



தமக்கு மட்டும் இடம் கிடைத்து, தம்பிக்கு இடம் கிடைக்காதமையால் ஜியோவானி உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடப் போவதில்லை என்று அறிவித்துள்ளார். இதனால், மெக்சிகோ அணியில் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

தற்போது டாட்டன்ஹாம் அணிக்காக விளையாடி வரும் ஜியோவானி 21 வயது நிரம் பியவர். தம்பியும் அண்ணனும் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள்.

எனினும், ஜோனதானுக்கு மெக்சிக்கோ அணியின் பயிற்சியாளர் இடம்கொடுக்க வில்லை. இதனால், ஆத்திரமடைந்த ஜோனதான் சர்வதேச உதைபந் தாட்டத்திலிருந்து ஓய்வுபெறும் முடி வுக்கு வந்துள்ளார்.

இனிமேல் ஒரு காலத்திலும் மெக்சிக்கோ அணிக்காக விளையாடப் போவதும் இல்லை என்றும் நேற்றுமுன்தினம் அறிவித்தார். இந்த நிலையில் அவரது சகோதரரும் விளையாட மறுத்திருப்பது உலகக் கிண்ணத் தொடரில் மெக்சிகோவின் வெற்றிக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது.

மெக்சிக்கோ அணியில் ஜோனதான் சான்டஸைச் சேர்க்காதமையால் அவரது அண்ணன் ஜியோவானி சான்டஸ் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் விளையாட மறுப்புத் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிக்கான மெக்சிக்கோ அணி நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. அணியில் பார்சிலோனா அணியின் இளம் வீரரான ஜோனதான் சான்டஸ் இடம்பெறவில்லை. ஜோனதானின் சகோதரர் ஜியோவானிக்கு அணியில் இடம் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவுக்கு மற்றுமொரு நிவாரணக் கப்பல் இஸ்ரேல் தடுத்து நிறுத்தினால் விபரீதம்!

## பலஸ்தீன ஆதரவாளர்கள் கடும் எச்சரிக்கை

ஜெருசலேம், ஜூன் 04

உதவிப்பொருள்கள் ஏற்றப்பட்ட மற்றுமொரு கப்பல் பலஸ்தீன ஆதரவாளர்களால் காஸாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கப்பலை இஸ்ரேல் மறிக்கப்போகிறதா? அனுமதிக்கப் போகிறதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. இதை மறித்தால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று பலஸ்தீன ஆதரவாளர்கள் எச்சரித்துள்ளார்கள்.

சமீபத்தில் நிவாரணப் பொருள்களுடன் வந்த ஆறு கப்பல்கள், இஸ்ரேல் கொமொண்டோக்களால் வழி மறிக்கப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் உலக ரீதியாக இஸ்ரேலுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், பலஸ்தீன ஆதரவாளர்கள், இன்னொரு கப்பலில் உதவிப் பொருள்களை ஏற்றி அனுப்பியுள்ளனர். இந்தக் கப்பல் இந்தவார இறுதியில் அல்லது அடுத்த வார தொடக்கத்தில் காஸா சென்றடையும். இந்தக் கப்பலை இஸ்ரேல் என்ன செய்யப்போகிறது என்பதை இனித்தான் பார்க்கவேண்டும்.

இதை ஒரு சவாலாகத்தான் பலஸ்தீன ஆதரவாளர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இந்தக் கப்பலில் 30இற்கும் மேற்பட்ட பலஸ்தீன ஆதரவாளர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கப்பலையும் இஸ்ரேல் மறித்து தாக்கினால், விபரீத விளைவுகள் ஏற்படும் என்று அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள்.

காஸாவுக்கு வரும் அனைத்து உதவிக் கப்பல்களையும் தடுத்து நிறுத்துவோம் என்று இஸ்ரேல் கடந்த செவ்வாய்க் கிழமை அறிவித்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸாவில் இஸ்ரேல் முற்றுகையால் 15 இலட்சம் மக்கள் வறுமைப் பிடியில் தள்ளப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு உதவிப்பொருள்களை பலஸ்தீன ஆதரவாளர்கள் சமீபத்தில் அனுப்பி வைத்தனர். இந்தப் பொருட்கள் துருக்கி கப்பல்களில் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டன.

இந்தப் பொருட்கள் காஸாவுக்குச் சென்றடையக்கூடாது என்று நினைத்த இஸ்ரேல், அந்தக் கப்பல்களை கடலில் மறித்தது. அவற்றில் ஏறிய இஸ்ரேல் கடற்படை கொமாண்டோக்கள் அவற்றிலிருந்த பலஸ்தீனியர்களை துப்பாக்கியால் சுட்டனர். இதில் 9 பலஸ்தீனியர்கள் உட்பட 15 பேர் பலியானார்கள். 500இற்கும் மேற்பட்ட பலஸ்தீன ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதலுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பிடிபட்ட கப்பல்களையும், கைதானவர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று ஐ.நா.சபை இஸ்ரேலை வலியுறுத்தியது. இதைத் தொடர்ந்து கைதான 680பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்தது.

விடுதலை செய்யப்பட்ட 680 பேரும் 35 நாடுகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைவரையும் தன் நாட்டிலிருந்து இஸ்ரேல் வெளியேற்றி வருகிறது. அவர்களில் 200 பேர் பிடித்துவைக்கப்பட்ட இடத்திலிருந்து விமானநிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். 123 பேர் ஏற்கனவே அண்டைநாடான ஜோர்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

### இஸ்ரேல் எதிர்ப்பு

துருக்கி கப்பல்களை இஸ்ரேல் மடக்கி, அவற்றிலிருந்த 15 பேரை சுட்டுக்கொன்றதற்கு உலக நாடுகள் தெரிவித்துள்ள கண்டனத்தால் எரிச்சல் அடைந்த இஸ்ரேல் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் அவிக்டோர் லிபர்மன் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், ''கடந்த ஒரு மாதத்தில் மட்டும் இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், தாய்லாந்து ஆகிய நாடுகளில் பல்வேறு சம்பவங்களில் 500 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். நான் ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கீ-மூனுக்கு இதை நினைவூட்ட விரும்புகிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''500 பேர் வெவ்வேறு நாடுகளில் கொல்லப்பட்டபோது உலக நாடுகள் எங்கு சென்றிருந்தன. அப்போது எல்லாம் மெளனமாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன. இப்போது பாதுகாப்புக்காக இஸ்ரேல் நடவடிக்கை எடுத்தால் மட்டும் அதை கண்டிப்பது ஏன்?'' என்றும் அந்த அறிக்கையில் அவர் கேட்டுள்ளார். இந்தியாவின் பெயரை இஸ்ரேல் இழுத்திருப்பது இது தான் முதல் தடவையாகும்.



ஆப்கானிஸ்தானில் எதிர்க்கட்சியினர், அரசியல் வல்லுநர்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அமைதிப் பேச்சுகள் (ஜிர்கா) தலைநகர் காபூலில் ஆரம்பமாகின. ஜனாதிபதி ஹமீத் கர்சாய் இதில் கலந்துகொண்டு பேசுகிறார். (ஏ)

# மாநாட்டுக்கு வந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தீவிரவாதிகளின் தாக்குதலிலிருந்து தப்பினார்

## பாதுகாவலரில் ஒருவரும், சிப்பாய்களில் நால்வரும் காயம்

காபூல், ஜூன் 04

மாநாட்டில் கலந்துகொள்ளவந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயும், மற்றவர்களும் தீவிரவாதிகள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். எனினும், ஜனாதிபதியின் பாதுகாவலர்களில் ஒருவரும், பாதுகாப்புப் படைச் சிப்பாய்களில் நால்வரும் காயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய காத்திரமான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான மூன்று நாட்கள் மாநாடு புதன்கிழமை ஆப்கானின் தலைநகரான காபூலில் ஆரம்பமாகியது.

ஆப்கான் எல்லைப்புற மாவட்டங்களைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் தலைவர்கள் உட்பட பல்வேறு நாடுகளின் தூதர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றியுள்ளனர். இதில் 1,500 பேர் வரை பங்குபற்றியுள்ளனர். ஜனாதிபதி கர்சாயின் பணிப்புரைக்கிணங்க இம்மாநாட்டிற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதி கர்சாய் வந்துகொண்டிருந்தபோது, மாநாட்டு மண்டபத்துக்கு அப்பால் தீவிரவாதிகள் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். ஜனாதிபதியை இலக்கு வைத்து ஏவப்பட்ட இரு ரொக்கெட்டுகள் குறி தவறி ஒரு கிலோ மீற்றர் தொலைவில் விழுந்து வெடித்துச் சிதறின.

இத்தாக்குதல்களிலிருந்து கர்சாயும், மற்றவர்களும் உயிர் தப்பினர். இதையடுத்து, மாநாட்டு மண்டபத்தை நோக்கி வந்த இரு நபர்கள் மீது சந்தேகம்கொண்ட பாதுகாப்புப் படையினர், அவர்களை 200 மீற்றர் தொலைவில் தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்டனர். அப்போது அவ்விருவரும் தாங்கள் மறைத்து வைத்திருந்த குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

இந்தத் தாக்குதல்களில் ஜனாதிபதியின் பாதுகாவலர்களில் ஒருவரும், பாதுகாப்புப் படைச் சிப்பாய்களில் நால்வரும் காயமடைந்தனர்.

# இரு மாதங்களில் பாகிஸ்தானில் ஆயிரம் தலிபான்கள் உயிரிழப்பு!

## ஆரக்சாய் பகுதி இராணுவ நடவடிக்கை முடிவு

இஸ்லாமாபாத், ஜூன் 04

பாகிஸ்தானின் மேற்கு எல்லைப்புற மாநிலத்திலுள்ள ஆரக்சாய் பகுதியில் இரு மாதங்களுக்கு முன்னர், தீவிரவாதிகளுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ அதிரடி நடவடிக்கையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்.




இந்த இராணுவ நடவடிக்கையை புதன்கிழமை இராணுவத் தளபதி கயானி முடித்துவைத்தார்.

ஆரக்சாய் என்ற பழங்குடி இனமக்கள் வசிக்கும் பகுதியில் கடந்த 2 மாதங் களுக்கு முன்னர் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையை பாகிஸ்தான் இராணுவம் ஆரம்பித்தது.

இந்தப் பகுதியில் 2 மாதங்களாக நடந்த தாக்குதலில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தலிபான் தீவிரவாதிகள் பலியானார்கள். ஏனைய தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டார்கள். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குளிருந்த பகுதிகள் இராணுவத்தால் மீட்கப்பட்டன. இதைத் தொடர்ந்து இந்தப் பகுதியில் இராணுவ நடவடிக்கை புதன்கிழமையுடன் முடிவுக்கு வந்தது.

இராணுவத் தளபதி கயானி இந்தப் பகுதிக்குச் சென்று இராணுவ நடவடிக் கையை முடித்துவைத்தார். இராணுவ நட வடிக்கை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து அந்தப் பகுதியிலிருந்து வெளியேறிய மக் கள் விரைவில் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரக்சாய் நடவடிக்கை முற்றுபெற்றதைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவ டிக்கையை இராணுவம் வடக்கு வசிரிஸ்தானில் ஆரம்பிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அமெ. முன்னாள் துணை ஜனாதிபதி தம்பதியர் 40 வருடகால திருமண பந்தத்தை துண்டிக்க முடிவு

வாஷிங்டன், ஜூன் 04

முன்னாள் அமெரிக்க துணை ஜனாதிபதி அல்கோர், டிப்பர் தம்பதியினர் 40 வருடகால திருமண பந்தத்தை முடித்துக்கொள்ளத் தீர்மானித்துள்ளனர். அல்கோர் புவி வெப்பமாற்ற விழிப்பு ணர்வுப் பிரசாரகராகவும் இருந்து வருகி றார். அல்கோரும், அவரது மனைவி டிப் பரும் 40 ஆண்டு காலமாக இனிய இல்ல றத்தை நடத்தி வந்தனர். இந்நிலையில், இருவரும் பிரிய முடிவெடுத்துள்ளனர். இதை இவர்கள் தத் தமது நண்பர்களிடம் தெரிவித்துள்ளனர்.



இதுகுறித்து அல்கோர், டிப்பரின் அலுவலகத்தில் பணியாற்றிவரும் கலி க்ரீடர் என்பவர் கூறுகையில், ''இந்த இக்கட்டான நேரத்தில் தாங்கள் தனிமையை அதிகம் நாடுகின்றனர் என இருவரும் தெரிவித்துள்ளனர்'' என்றார்.

அல்கோரும், டிப்பரும் இணை பிரியா தம்பதியராக இருந்தவர்கள். பொது இடங்களுக்கு வரும்போது இருவரும் ஒருவர் மீது ஒருவர் காட்டும் அன்பும், பாசமும் அமெரிக்காவில் வெகு பிரபலம்.

தாங்கள் பிரியப் போவது குறித்து அல்கோரும், டிப்பரும் பொலிட்டிகோ என்ற இணைய தளத்தில் தெரிவிக்கையில், ''மிகுந்த சிந்தனை மற்றும் விவாதங்களுக்குப் பின்னர் இருவரும் பிரிய முடிவு செய்துள்ளோம் என்பதை அறிவிக்கிறோம்'' எனக் குறிப்பிட்டனர்.

அல்கோருக்கு தற்போது 62 வயதாகிறது. 2007 ஆம் ஆண்டு புவிவெப்ப மாற்ற தடுப்புப் பிரசாரத்திற்காக அவர் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். அதே ஆண்டில், புவிவெப்ப மாற்றத் தடுப்புத் தொடர்பாக இவர் தயாரித்த விவரணப் படத்துக்கு ஒஸ்கர் விருதும் கிடைத்தது.

டிப்பர் கோருக்கு 61 வயதாகிறது. அவரது முழுப் பெயர் மேரி எலிசெபத் டிப்பர் கோர். இவர் அடிப்படையில் ஒரு புகைப்படக் கலைஞர். இவர் மனநலம் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்கும் பணியில் ஈடு பட்டு வருகிறார்.

1965 ஆம் ஆண்டு இருவரும் முதல் முறையாக சந்தித்தனர். 1970இல் திருமணம் செய்துகொண்டனர். இந்தத் தம்பதிக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர்.

1993 முதல் 2001 வரை பில் கிளிண்டன் ஜனாதிபதியாக இருந்தபோது அல்-கோர் துணை ஜனாதிபதியாக இருந்தவர்.

2000 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியுற்றார். அந்தத் தேர்தல் முடிவுகள் சர்ச்சையைக் கிளப்பின. ஜோர்ஜ் புஷ் வெற்றிபெற்று ஜனாதிபதியானார்.

# தீவிரவாத அமைப்புகளை ஒடுக்குக! பாகிஸ்தானிடம் அமெ. வலியுறுத்து

இந்தியாவுக்கு எதிராக சதி வேலைகளை அரங்கேற்றும் லஷ்கர்- இ - தொய்பா போன்ற தீவிரவாத அமைப்புகளை ஒடுக்குமாறு பாகிஸ்தானை அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இந்திய - அமெரிக்க இடையிலான வெளியுறவுத்துறைகள் சார்பில் வாஷிங்டனில் பேச்சுகள் தொடங்கியுள்ளன. இந்திய குழுவுக்கு வெளியுறவு செயலர் நிருபமா ராவ் தலைமையேற்றுள்ளார். அமெரிக்கத் தரப்பில் வெளியுறவு துணை அமைச்சர் வில்லியம் பர்ன்ஸ் தலைமையி லான குழு பங்கேற்றுள்ளது. இதுபற்றி வில்லியம் பர்ன்ஸ் புதன்கிழமை குறிப்பிடுகையில், ''பாகிஸ்தானிலிருந்து கொண்டு அதற்கு வெளியே நாசவேலைகளை அரங்கேற்றும் தீவிரவாத அமைப்புகளில் அமெரிக்காவுக்கு எதிரானவற்றை மட்டும் ஒபாமா அரசு கருதுவதில்லை'' என்றார்.

''இந்தியா உட்பட இதர நாடுகள் மீது சதித் திட்டம் தீட்டுவோரையும் வித்தியாசமின்றி பார்க்கிறோம். இந்தியாவுக்கு எதிராகச் செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா போன்ற தீவிரவாத அமைப்புகள் மீது பாகிஸ்தான் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்றும் அவர் கேட்டுக் கொண்டார். அமெரிக்க உயரதிகாரி ஒருவர் குறிப்பிடுகையில், ''பாகிஸ்தான் தீவிரவாதிகள் அந்நாட்டுப் பாதுகாப்புக்கு மட்டுமின்றி இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும் அச்சுறுத்தலாக உள்ளனர். அவர்களை ஒடுக்க பாகிஸ்தானைத் தொடர்ந்து வற்புறுத்துவோம்'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளைச் சந்திப்பதில் உறவினர்கள் எதிர்நோக்கும் சிரமங்கள்

## அவர்களை மன்னித்து விடுவிக்கக் கோருகிறார் அரியநேத்திரன்

கொழும்பு, ஜூன் 04

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளைச் சந்திக்கச் செல்லும் உறவினர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா, நெளுக்குளம் புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளைச் சந்திப்பதற்குத் தமக்கு சுமார் 10நிமிடங்களே வழங்கப்படுகின்றன என அவர்களது உறவினர்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

அதேவேளை, புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது பிள்ளைகளையும் கணவன்மாரையும் திடீர் திடீரென வேறுவேறு முகாம்களுக்கு மாற்றுகின்றனர் என்றும் பெண்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

இதனால் தாம் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு தூர இடங்களுக்கு மாற்றப்படுகின்றமையால் தாம் குழந்தைகளுடன் சென்று பார்வையிடுவதற்கு சிக்கல் நிலை தோன்றியுள்ளது எனவும் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, நெலுக்குளம் புனர்வாழ்வு முகாமில் சுமார் ஆயிரம் முன்னாள் போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இங்கு குளிப்பதற்குப் போதுமான நீர் வழங் கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படு கிறது.

'புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை அந்தந்த மாவட்டத்தில் புனர்வாழ்வு மையங்களை நிறுவி அவர்களை அங்கு வைத்திருந்தால் நாம் சென்று பார்வையிட மிகவும் சுலபமாக இருக்கும். அத்துடன் அரசு துரிதப்படுத்தி அவர்களை விடுவிக்க வேண்டும்' - என்பதே உறவினர்கள் என்னிடம் முன்வைத்த கோரிக்கை.

புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் ஏற்கனவே உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பர். இந்த நிலையில் உறவினர்களைச் சந்திப்பதால் ஓரளவாவது சந்தோஷப்படுவர். இதையும் தடுப்பது அவர்களை மேலும் மேலும் மன உளைச்சலுக்கு இட்டுச் செல்லும். எனவே அரசு அவர்களை பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுவிக்கவேண்டும். - இப்படி அரியநேத்திரன் எம்.பி.கூறினார். (ஒ-சி)

# திருமலை கடற்பரப்பை மாசுபடுத்திய துருக்கி மாலுமிக்கு அபராதம்

## ரூ. 1 கோடி செலுத்துமாறு உத்தரவு

கொழும்பு, ஜூன் 4

திருகோணமலை மாவட்ட கடலில் சல்பூரிக் அமிலத்தைக் கொட்டி அந்தக் கடற்பரப்பை மாசுபடுத்திய குற்றத்துக்காகத் துருக்கி கப்பல் ஒன்றின் மாலுமிக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று ஒரு கோடி ரூபா அபராதம் விதித்தது.

நீதிவான் தீபாலி விஜயசுந்தர நேற்று இத்தீர்ப்பை வழங்கினார்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் மேற்படி மாலுமி கடலில் சல்பூரிக் அமிலத்தைக் கொட்டி கடலை மாசுபடுத்தினார் என்று விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்தே நீதிவான் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

அந்த மாலுமிக்கு விதிக்கப்பட்ட ஒரு கோடி ரூபா அபராதத்தை அவர் எச்.எஸ்.பி.ஸி. வங்கியில் வைப்பிலிடவேண்டும் என்று நீதிவான் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

# தற்காலிக இடத்தில் நேற்றுமுதல் மாங்குளம் ம.வி. இயங்குகிறது

மாங்குளம், ஜூன் 4

மாங்குளம் மகாவித்தியாலயம் இரண்டு வருடங்களின்பின் தற்காலிகமான இடத்தில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் பிரதி அதிபர் க. சத்திதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாங்குளம் பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள், அருட்சகோதரிகள, மாங்குளம் விசேட அதிரடிப்படை சிவில் நிர்வாக அதிகாரி கேணல் றணசிங்க, மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரசேகர, பிரதிக்கல்விப் பணிப்பாளர் ரி. ஜெயபாலன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். பங்கையற்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு அருகில் உள்ள ''நிக்கோட்'' நிறுவனத்தினால் கட்டப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் இந்தப்பாடசாலை தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகிறது.

மாங்குளம் மகாவித்தியாலயத்தில் படையினர் நிலைகொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

### கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த

# 5 கிராம மக்கள் மீள்குடியமர்வுக்கு நாளை பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இடம்பெயர்ந்து தற்காலிகமாக வெளிமாவட்டங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசிக்கும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான பதிவுகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை அக்கராயன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் -

தற்போது வசிக்கும் கிராம அலுவலர் பிரிவில் உரியபதிவு நீக்கத்துடன் வருபவர்கள் மட்டுமே மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்படுவர் என்றும், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மக்களைப் பதிவு செய்யும் இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

# 'எம்டி– 90' மோட்டார் சைக்கிள் ரூபா 40 ஆயிரத்தால் உயரும்

### ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு, ஜூன் 04

வாகனங்களுக்கான இறக்குமதி வரி 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், 'எம்டி 90' மோட்டார் சைக்கிள்களின் விலை 40 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. டாக்டர் ஹர்ஸா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதுதொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வாகனங்களின் இறக்குமதி வரியை 50 சதவீதத்தால் குறைத்திருப்தாக அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் அரசின் வருமானம் அதிகரிக்கும். வாகன இறக்குமதிகள் அதிகரிக்கும். அதனால் டொலரின் பெறுமதியும் அதிகரிக்கும். அப்போது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடையும்.

வாகன இறக்குமதி வரி குறைக்கப்பட்டதன் மூலம் ஏழை மக்களுக்கு எந்தவிதமான நன்மையுமில்லை. இந்த வரி குறைக்கப்பட்டபோதிலும் ஏழைகள் பாவிக்கும் 'எம்டி 90' மோட்டார் சைக்கிள்களின் விலையை 40 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த சைக்கிள்களைப் பாவிப்பவர்கள் சிறிய வர்த்தகர்கள். அரசின் செயற்பாடு எந்த வகையிலும் ஏழைகளுக்கு நன்மையளிப்பதாக இல்லை. வாகன வரியைக் குறைக்க முடியுமென்றால் ஏன் ரின்மீனின் விலையைக் குறைக்க முடியாது?

அரசின் பொருளாதாரக் கொள்கை ஸ்திரமானதாக இல்லை. பங்குச் சந்தையில் முதலீடு செய்திருந்த வெளிநாட்டவர்கள் அதிலிருந்து விலகிக் கொள்கின்றனர். இது எமது ஸ்திரமற்ற பொருளாதாரத்தைக் காட்டுகிறது. - என்றார். (ஒ-சி)

## சக்கர நாற்காலிகள் நாளையே மாணவருக்கு விநியோகம்

அச்சுவேலி, ஜூன் 4

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த மாற்றுவலுவுடைய மாணவர்களுக்கான 'சக்கர நாற்காலிகள்' வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டு நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு மேற்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் மற்றும் அவர்களின் உதவியாளர்கள் உரியவர்கள் சமுகம் தந்து சக்கர நாற்காலிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (ஒ-11)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூன் 4

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 820ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "V" என்ற ஆங்கில எழுத்தும் 20/22/47/55 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 8 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. நான்கு இலக்கங்களும் சரியாகக் கொண்ட சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 6 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 289 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,908 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,93,343 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ஒ-10)




ஐபா திரைப்படவிழா நேற்று கொழும்பில் ஆரம்பமானதை அடுத்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொலிவூட் சினிமா நட்சத்திரங்கள் கலந்துகொண்ட போது...

## பெற்றோல் விற்றவர் எச்சரிக்கப்பட்டு விடுதலை

யாழ்ப்பாணம், ஜூன் 4

சட்டவிரோதமாகப் பெற்றோல் விற்பனை செய்த ஒருவரைச் சாவகச்சேரி நீதிமன்றம் கடுமையாக எச்சரித்த பின்னர் அவரை விடுதலை செய்தது.

சட்டவிரோதமாகப் பொது இடத்தில் பெற்றோல் விற்பனை செய்ததாகப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த நபர் பகிரங்கமாக மன்னிப்புக் கோரினார். அவரைக் கடுமையாக எச்சரித்த நீதிவான் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்தார். (ஒ-6-207)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியர் திரு.கந்தையா புவிராசா அவர்களின் அன்பு மாமனார்

அமரர் **கறுப்பையாத்தேவர்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர், நலன்புரிச் சங்கம்,
**கிளி/கனகபுரம் ம.வி., கனகபுரம்**

(39070)

## மரண அறிவித்தல்

*வீரகத்திப்பிள்ளை விஜயதரன்*



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரகத்திப்பிள்ளை விஜயதரன் நேற்று (03.06.2010) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சுபாஜினி (சுகி-கனடா), மாலினி (இறாகலை), விமலினி (தங்கா-லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஈஸ்வரன், கண்ணன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.06.2010) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது மைத்துனி தம்பிஐயா தனலட்சுமியின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. தனலட்சுமி (லட்சுமி மைத்துனி R.V.G.)

லோட்டஸ் வீதி,
ஆறுகால்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் யுத்தக் குற்ற விடயங்கள் ஐ.நாவின் இம்மாத அமர்வில் இடம்பெறா!

## மெக்சிகோவின் நிரந்தர பிரதிநிதி தகவல்

கொழும்பு, ஜூன் 04

இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என முன்வைக்கப்பட்டுள்ள யோசனை, இம்முறை நடைபெறும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கூட்டத்தொடர் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படவில்லை - என்று ஐக்கிய நாடுகளுக்கான மெக்சிகோவின் நிரந்தர பிரதிநிதி க்ளோட் ஹெலர் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவதற்கான எவ்வித முனைப்புகளும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் பொதுமக்கள் கொல்லப்பட்ட விடயம் மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது எனவும் அது பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படமாட்டாது எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் இது தொடர்பான பொருத்தமான செயற்பாடுகளை முன்னெடுப்பார் எனவும் ஹெலர் தெரிவித்தார்.

சிறார் மற்றும் மோதல்கள், நீதி மற்றும் சூடானின் தற்போதைய நிலைமைகள் பற்றிய விடயங்கள் இம்முறை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பேசப்படவுள்ளன. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தலைமைத்துவப் பொறுப்பை மெக்சிகோ வகித்து வருகிறது.

# முதலாம் தர மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை செப்ரெம்பர் 15 ஆம் திகதி

## கல்வியமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்.04

அடுத்த வருடத்தில் முதலாம் தரத்திற்குப் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இடம்பெறுமெனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பிள்ளைகளை அனுமதிப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது என சுனில் சிறிசேன குறிப்பிட்டார்.

செப்டெம்பர் 30 ஆம் திகதியாகும்போது, பிள்ளைகளை அனுமதிப்பதற்கான தற்காலிகப் பெயர்ப்பட்டியலைப் பார்வைக்கு வைக்க வேண்டும் எனவும் மேல் முறையீடுகளை ஒக்டோபர் 15 ஆம் திகதியிலிருந்து மேற்கொள்ள முடியும் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

மேல்முறையீடுகள் குறித்து ஆராயும் நடவடிக்கைகள் ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் நவம்பர் 24 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளன.

# வன்னியில் மீள்குடியேறியோர் விபரம் புதிய வாக்காளர் பட்டியலில் சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 06

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மீளக் குடியேறிய மக்களின் தகவல்களை புதிய வாக்காளர் பதிவுப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. கிளிநொச்சியில் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள தேர்தல் அலு வலகத்தின்மூலம் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றன என மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணா நிதி தெரிவித்தார்.

இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர்கள் நீண்ட காலத்துக்குப் பின்னர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (சி)

## வெட்டுப்புள்ளி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித் தார்.

எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி அளவில் ஆணைக்குழு வளா கத்தில் இடம்பெறும் நிகழ்வின்போது வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ-சி)

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீபா ஒப்பந்தம் தொடர்பாக தொடர்ந்து பேச்சு நடத்தப்படும் - இப்படி அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி இம்மாதம் 8 ஆம் திகதி இந்தியா செல்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## கடல்வழியாகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரான காலத்தில் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளது. சோமாலியக் கடற்கொள்ளையர்களைச் சில ஆண்டுகளுக்கு முன்னர் யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் இன்று அவர்கள் சர்வதேச நெருக்கடியாக மாறியுள்ளனர்.

அவர்களிடம் எந்த ஆயுதபலமும் கிடை யாது - ஆனால் புலிகளிடம் கப்பல்கள், போர்ப்படகுகள், வெடிமருந்தேற்றிய படகுகள் இருந்தன. விடுதலைப் புலிகளைச் சுதந்திரமாகச் செயற்பட அனுமதித்தால் அவர்கள் சர்வதேசக் கடற்பயணங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறிவிடுவர்.

தற்போது கடற்படையின் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நவீன ''ராடர்'' கருவியும் தரையில் பொருத்தப் பட்டுள்ளது - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

**Deutsch, Dutch, French, Italian**

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre for International language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்
குறிப்பு: ஐப்பசி மாத ஜேர்மன் எம்பஸி பரீட்சைகளுக்கான Deutsch புதிய வகுப்புக்கள் 05.06.2010 ஆரம்பமாகின்றன
GOV. Reg. No W/A 76795
T.P : 077 4842464, 021 3216928, 0779927117

# ஒகஸ்ட்டுக்குள் மீள்குடியேற்றம் பூர்த்தி

## அமைச்சர் மில்ரோய் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 04

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் அரசு புதிய காலக்கெடு விதித்துள்ளது.

தற்போது இடம்பெயர் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதத்திற்குள் மீள்குடியேற்ற முடியும் என புதிய மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன எனவும் ஒகஸ்ட் மாதத்திற்குள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வது அதிக நடைமுறைச் சாத்தியப்பாடுடையது எனவும் அவர் கூறினார்.

60 ஆயிரம் மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் தங்கியிருக்கின்றனர் என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்திற்குள் இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது சாத்தியப்படவில்லை என்றும் -

மீள் குடியேற்றத்துடன், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது குறித்தும் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளும் துரிதப்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொறுப்பு வாய்ந்த அரசு என்ற ரீதியில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றாமல் மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்ற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## புலம்பெயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

'ஐபா' திரைப்பட விழாவுக்கு அழைப்பு விடுக்கும் போது பெரும்பாலும் இந்திய நடிகர்கள் அனைவரும் வருவதில்லை. முன்னைய வருடங்களில் தென்னாபிரிக்கா, லண்டன் போன்ற நாடுகளில் நடைபெற்ற ஐபா திரைப்பட விழாக்களிலும் பெரும்பாலானோர் கலந்துகொள்ளவில்லை. எனவே, புலம்பெயர் தமிழ் சமூகத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இதற்குக் காரணமென்று கூறமுடியாது.

உலகம் முழுவதும் 8கோடி 50 லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களுல் இரண்டு சத வீதத்தினர் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டாலும் அது ஒரு பெரும் எண்ணிக்கைதான்.

இவர்களின் செயற்பாடுகள் சில வெற்றியளித்துள்ளன என்பதையும் மறுக்க முடியாது. சமீபத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை இலங்கைக்கு எதிராக வெளியிட்ட கருத்து இதற்கு சிறந்த உதாரணமாகும்.

புலம்பெயர் தமிழ் சமூகத்தின் நடவடிக்கைகள் குறித்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கருத்து வெளியிட்டிருந்தார்.

உள்ளூரில் பயங்கரவாதத்தை ஒழித்து அவர்களது இருப்பிடங்களை நாசமாக்கியதுபோல், புலம்பெயர் தமிழ் சமூகத்தின் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முறியடிப்போம். இதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

-இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

'ஐபா' திரைப்பட விழாவுக்கு பொலிவூட் நடிகர்கள் அமிதாப் பச்சன், ஐஸ்வர்யாராய், சாருக்கான் ஆகியோர் திட்டமிட்டபடி வருகை தராதமைக்கு புலம்பெயர் தமிழ் சமூகத்தின் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமா என செய்தியாளர் ஒருவர் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதில் அளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ஒ-சி)

A/L 2012 வர்த்தகப் பிரிவு
கணக்கீடு | பொருளியல் | வணிகக்கல்வி
A.P. Pagieerathan NB.கஜீதரன் S.யசோ
(நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்)
NEC Clock Tower Rd, Jaffna

**தேவை**

Web, Sheet fed ஆகிய அச்சு இயந்திரங்களில் கலர்ப் பக்கம் அச்சிடுவதில் முன் அனுபவமுடையவர்கள் அலுவலக நேரத்தில் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில்வரவும். பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உதயன் மனித வள சேவை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# பாடசாலைகளுக்கு கணனிகள் நாளை யாழ்.வேம்படியில்

அச்சுவேலி, ஜூன் 4

யாழ்ப்பாணம் சென்.பெனடிக்ற் வித்தியாலயத்தில் வைத்து நாளை மறுதினம் 18 பாடசாலைகளுக்கு கணனிகள் வழங்கும் நிகழ்வு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கணனிகள் நாளை சனிக்கிழமை முற்பகல் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் வைத்து வலயக்கல்விப் பணிப்பாளர்களால் 18 பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

நிகழ்வில் முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் பாடசாலை சமூகம் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொள்ள வேண்டியது இல்லை என்றும் பாடசாலை அதிபரும், ஆசிரியர் ஒருவரும் கலந்துகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-11)

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகொலைகளை மேற்கொண்டுள்ளன என்றும் எதிர்காலத்தில் இந்நாடுகளைப் பின்பற்றி வேறு நாடுகளும் திட்டமிட்ட படுகொலைகளைச் செய்யக்கூடும் என்றும் அவர் கோடி காட்டியுள்ளார். (ஒ-சி)

## ஆசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் இவ்வருடம் இடம்பெறவுள்ள ஒன்பதாவது உச்சிமாநாட்டில், விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான மோதலில் இலங்கை பெற்ற வெற்றி, அந்த அனுபவங்கள் மற்றும் வெற்றியின் பின்னரான பாதுகாப்பு நடைமுறைகள் குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் விளக்குவார்.

அத்துடன், இந்த உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள உள்ள ஆஸ்திரேலியா, தாய்லாந்து மற்றும் கொரியாபோன்ற நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர்களுடன் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கலந்துரையாடவுள்ளார். அத்துடன் சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர், கல்வி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் அந்நாட்டு சட்டமா அதிபர் ஆகியோரையும் சந்தித்து பீரிஸ் பேச்சு நடத்துவார்.

பாதுகாப்பு தந்திரோபாய ஆய்வுக்கான சர்வதேச நிறுவகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த உச்சி மாநாட்டில் லண்டன், ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், புரூனை, கம்போடியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், லாவோஸ், மலேஷியா, மொங்கோலியா, பர்மா, நியூஸிலாந்து, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கொரியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, அமெரிக்கா மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பாதுகாப்பு அமைச்சர்கள், செயலாளர்கள், வெளிவிவகார அமைச்சர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

A/L 2012 & 2011
கலை, வர்த்தகப் பிரிவு
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
NEC

பிரத்தியேக வகுப்புக்கள்
கணக்கீடு AP.பகீரதன் 2012 (Sat,Sun 4-5 Pm) 2011 (Sat,Sun 5-6 Pm)
A/L 2012 2011
பொருளியல் NB.கஜீதரன் 2012 (Sat,Sun 5-6 Pm) 2011 (Sat,Sun 4-5 Pm)
ஆரம்பம் : 05-06-2010 சனி 4.00 மணி
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2012 விக்னா கல்வி நிறுவனம்
கலைப்பிரிவு 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
ஆரம்பம் 05.06.2010
Tam திரு.குழந்தை (8-9) | Log திரு.வாகீசன் (7-8)
Hic திரு.பத்மராஜா(11-12) | Hist திரு.தாஸ் (10-11)
Eco திரு.N.B கஜீதரன்(12-1) | Chri திரு.யூட் (9-10)
Pl.Sc திரு.ஸ்ரீரங்கநாத் (10-11) | Drama திரு.N.கஜீதரன் (9-10)
Geo திரு.சுரேன் (10-11)
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விக்னா கல்வி நிறுவனம்
A/L 2012 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
வர்த்தகப் பிரிவு ஆரம்பம்- 05.06.2010 Sat.
Eco. - திரு. N.B.கஜீதரன் [12-01] B.Stu - திரு.யசோ (2-3)
Acc. - திரு. P. பகீரதன் [11-12]

வெளிவந்துவிட்டது
வடக்கு மாகாண கல்விசாரா ஊழியர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி-2010
பொது அறிவு
பொது உளச்சார்பு
P.காண்டீபன்
பூபாலசிங்கம், அன்னை, துர்க்கா புத்தகசாலைகளில்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org